# வரலாறு

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 09



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

# தரம் 9

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு
தரம் - 9
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
முதற்பதிப்பு 2009

© தேசிய கல்வி நிறுவகம்

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் ஹோமாகம கலவில வீதியில், இலக்கம் 3/பீ இல் அமைந்துள்ள சவிந்த கிரபிக் சிஸ்டம்ஸ் (தனியார்) கம்பனியில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

* விரிவான பாடத்திட்டம்
* செயற்பாட்டுத் தொடரகம்
* கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான உபகரணங்கள்

இப்பாடத்திட்டமானது, விடயத் தலைப்புகள், உபதலைப்புகளையும் ஆசிரியர் வகிபாகத்துள் எடுக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களையும் ஆசிரியர்களுக்கு விளக்கும் பயனுடைய ஒரு ஆவணமாகும்.

பாடச்சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளையும் பாட நோக்கங்களையும் கொண்ட இவ்வழிகாட்டியில் பாடம் தொடர்பான தேர்ச்சிகளும், தேர்ச்சிமட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்களினால் விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான பாட உள்ளடக்கம் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் இவ்வழிகாட்டியின் சிறப்பியல்பாகும். இப்பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளைக் கருத்திற் கொண்டு நேரத்தைத் தீர்மானித்திருப்பது இப்பகுதியின் இன்னுமொரு சிறப்பியல்பாகும்.

இவ்விரிவான பாடத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தை பாதுகாக்கும் நோக்கிலே முன்வைக்கப்பட வேண்டிய தரஉள்ளீடுகள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்க முனைந்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்களை ஏற்கனவே கோரி, உரிய நேரத்திற்கு பெற்றுக் கொள்ள இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கும். பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதிசெய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

***"பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்"*** என்ற பகுதியை பாடசாலைக் கல்வி சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்கு கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போதும், பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போதும், ஆசிரியரின் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கங்களை அளிக்கின்றது.

ஆசிரியர் பங்களிப்பிலே தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தைச் செவ்வனே நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியருக்கு தேவையான உதவிகளைக் கூடியளவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளை அறிமுகஞ் செய்திருப்பது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும். இச்செயற்பாடுகளை அவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான, ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். உதாரணமாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் என கூறியிருப்பினும் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதை மாற்றியமைத்துக் கொள்ளலாம். சிறிய வகுப்புகளில் குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும்போது ஆசிரியர்கள் மதிநுட்பத்துடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய தேர்ச்சி மட்டத்தை அடையத்தக்கதாக செயற்பாடுகளுக்கு உரிய நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் பூரணப்படுத்தப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. நேரசூசியில் வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச்செயற்பாடுகளை பகுதிகளாக செய்து நிறைவு செய்து கொள்ளவேண்டுமென ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து அடுத்த நாளும் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகஞ் செய்து தொடர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறையில் நிலவும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களின்போது நீங்கள் கவனமாக திட்டமிட்ட செயற்பாடுகளைக்கூட 40 நிமிட, 80 நிமிட நேரத்துள் பூரணப்படுத்த முடியாது போகலாம்.

யாதேனுமொரு தேர்ச்சி மட்டத்தை பூரணப்படுத்த வெவ்வேறான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாட்டை அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, தேடியாய்வுகளைக் கொண்ட, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு கருவிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் சிறந்த கற்பித்தலையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

புது விடயங்களை அறிமுகப்படுத்தும்போது நீங்கள் சிக்கல்நிலைக்குள்ளாவதை தவிர்ப்பதற்காக உங்களுக்கு வேண்டிய வழிகாட்டலை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. ஆசிரியர் வகிபாகத்தில் சிறந்ததொரு மாற்றத்தை நாடுபூராவும் ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதற்கு இவ்வழிகாட்டி பெருந்துணைபுரியும் என்பது எனது நம்பிக்கையாகும். அவ்வாறே இச்செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று புத்தாக்கங்களில் ஈடுபடும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசளிப்பு முறை ஒன்றையும் அறிமுகஞ் செய்ய நாம் உத்தேசித்துள்ளோம். அப்பரிசைப் பெறுவதற்கு உங்களால் திட்டமிடப்படும் செயற்பாடுகளை உதவிப் பணிப்பாளர் நாயகம் (பாடத்திட்ட அபிவிருத்தி) தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வப்பாடக் குழுக்களினூடாக அச்செயற்பாடுகள் பரிசீலனை செயற்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்கு உதவும் கருவித் தொகுதிகள் அடங்கியுள்ளன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இக்கருவிகள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்களை கற்பதற்கும் துணை புரியும். அக்கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை மதிப்பிட்டு உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்களது பணியாகும். இம்மீளவலியுறுத்தல்கள் மகிழ்வான கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்குத் துணை புரியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பொதுப் பரீட்சைகளில் கல்வி மட்டங்களுக்கு ஏற்ப முன்மாதிரி வினாக்களை அறிமுகஞ் செய்ய தேசிய கல்வி நிறுவகம் எண்ணியுள்ளது. பரீட்சை வினாக்களின் தன்மை தொடர்பாக எதிர்பார்க்கும் மாற்றத்தை விளங்கி வழமையான முறையிலிருந்து விடுபட்டு மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

**திரு. விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள்,மானுடவியல்,சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளவாளர் குழு

**ஆலோசனை**

பேராசிரியர் லால் பெரேரா - பணிப்பாளர் நாயகம் - தே.க.நி

திரு. விமல் சியம்பலாகொட - உதவிப்பணிப்பாளர் நாயகம் (மொழி, மானிடவியல், சமூக விஞ்ஞானப்பீடம்) - தே.க.நி

**பாட ஆலோசனை**

பேராசிரியர் மாலனி அந்தகம - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (ஓய்வு பெற்ற)

பேராசிரியர் எம்.யூ.த சில்வா - றுகுணு பல்கலைக்கழகம் (ஓய்வு பெற்ற)

கலாநிதி ஏ.எச்.எம்.எச் அபயரத்ன - களனிப் பல்கலைக்கழகம்

கலாநிதி எஸ்.அனுசயா - தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

கலாநிதி யூ. நவரத்தினம் - பணிப்பாளர் (ஓய்வு பெற்ற) - தே.க.நி

**இணைப்பாளர்கள்:**

திருமதி. டி.எச்.சந்திமா நிஸானி தர்மபால
செயற்றிட்டத்தலைவர்
சமூக விஞ்ஞானத்துறை, தேசியு கல்வி நிறுவகம்

திரு. எஸ். கருணாகரன்
உதவிச் செயற்றிட்ட அதிகாரி
சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**செயற்றிட்டக் குழு**

டி.எச்.சந்திமா நிஸானி தர்மபால - செயற்றிட்டத்தலைவர், சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி

எஸ். கருணாகரன் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி, சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி

டபிள்யூ. சமந்தி சிரோமாலா குணவர்த்தன - உதவிச் செயற்றிட்ட அதிகாரி, சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி

**எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| திருமதி. ஏ. இந்திராணி | - | யேசு குழந்தையர் கன்னியர் மடம், தேசிய பாடசாலை, இரத்தினபுரி |
| திருமதி. டப்ள்யூ.சீ.என். மனம்பேரி | - | புனித ஜோசப் பெண்கள் கல்லூரி, கேகாலை |
| திரு. டப்.சீ.புஸ்பகுமார | - | ஆடிஅம்பலம் ம.வி., ஆடிஅம்பளம் |
| திரு.டப்.பீ. அத்துக்கோரளை | - | ராஜகீய கல்லூரி, ஹொரணை |
| திருமதி. எஸ்.ஏ.ஆர் த சில்வா | - | மியூசியஸ் பெண்கள் கல்லூரி, கொழும்பு 7 |
| திரு. பீ.எல்.ஏ.யூ.ஜீ. பெரேரா | - | சர்வோதயப் பிரிவேன, தேவாலகம |
| திரு.யூ.எல்.சிபார்தீன் மரிக்கார் | - | க/ ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன - மடிகே |
| திரு.யூ.எல்.எம். பஸீர் | - | ஆசிரிய ஆலோசகர், பத்தேகம வலயம் |
| திருமதி.எஸ்.பாலசுந்தரம் | - | முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம் |
| திருமதி. எஸ். ருகையா ஹஸ்மி | - | பாபுல்ஹஸன் மு.வி., வரகாபொல |

**கணினி வடிவமைப்பு:**

திரு. நஹ்ராஸ் - முன்னாள் அதிபர், அல் ஹுமைஸரா மத்திய கல்லூரி, பேருவளை

செல்வி. எம்.என்.எப். றிஹானா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

**ஏனைய உதவிகள்:**

செல்வி.சந்தியா அத்தபத்து - தேசிய கல்வி நிறுவகம்

திருமதி. ஷிரானி சமரக்கொடி - தேசிய கல்வி நிறுவகம்

திரு. ஆர்.எம்.ருபசிங்ஹ - தேசிய கல்வி நிறுவகம்

**இணையத்தள முகவரி:** www.nie.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | ii |
| 2. | முகவுரை | iii |
| 3. | வளப்பங்களிப்பு | v |
| 5. | உள்ளடக்கம் | vi |
| 6. | விரிவான பாடத்திட்டம் | 01 - 10 |
| 7. | கற்றல் கற்பித்தல் முறையியல் | 13 - 92 |
| 9.1 | பிரித்தானியரின் இலங்கை வருகையும் அவர்களின் ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட்டமையும் | 17 - 32 |
| 9.2 | இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி | 33 - 51 |
| 9.3 | இலங்கையில் அரசியல், சமய மறுமலர்ச்சி | 52 - 66 |
| 9.4 | சுதந்திரத்தின் பின் இலங்கையில் அரசியல் வளர்ச்சி | 67 - 78 |
| 9.5 | குடியேற்றவாதப் பரவல் | 79 - 92 |
| 8. | கணிப்பீடும் மதிப்பீடும் | 94 - 96 |
| | கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக்கருவிகள் | 97 - 102 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 1

# விரிவான பாடத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

வரலாற்றைக் கற்பதென்பது, மனித நாகரிக வளர்ச்சியில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசாரத் துறைகளில் வெளிப்படும் பிரச்சினைகளினதும் வெற்றிகளினதும் பல்வேறுவிதமான இயல்புகளை நடுநிலையாகவும் விமர்சன ரீதியாகவும் புரிந்து கொள்வதாகும். அது சுற்றாடலையும் தேசிய மரபுகளையும் பாதுகாத்து சகல இனங்களையும் சேர்ந்த மனிதர்கள் ஒன்றாக வாழக் கூடியவாறான சிறந்த சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் புதிய கல்விச் சீர்த்திருத்தங்களின் ஊடாக 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான வகுப்புகளில் வரலாறு பாடசாலைக் கலைத்திட்டத்தில் கட்டாய பாடமொன்றாக சேர்க்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்த்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைக் கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். (அதன்படி 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை வரலாறு கலைத்திட்டம் திட்டமிடப்பட்ட போது இனங்காணப்பட்ட பாடத்தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது).

9 ஆந் தரத்திற்கான இப்பாடத்திட்டமானது 2010 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து தலைப்புகளினாலான இப்பாடத்திட்டத்தில் இலங்கை மற்றும் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய உலக வரலாற்று நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி 9ம் தரத்தில் பிர்த்தானியரின் இலங்கை வருகையும் ஆட்சியை நிறுவுதலும் பாராளுமன்ற ஆட்சி முறை வரையிலான இலங்கையின் அரசியல் வளர்ச்சி, அரசியல், சமய மறுமலர்ச்சி, சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வளர்ச்சி, பேரரசுப் பரம்பல் ஆகிய தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்வருமாறு அவை மூன்று தவணைகளுக்காக வகுக்கப்பட்டுள்ளது.

| 1 ஆம் தவணை | 2 ஆம் தவணை | 3 ஆம் தவணை |
|---|---|---|
| 9.1 - 9.1.1<br>9.1.2<br>9.1.3<br>9.1.4<br>9.1.5<br><br>9.2 - 9.2.1<br>9.2.2<br>9.2.3<br>9.2.4 | 9.2 - 9.2.5<br>9.2.6<br><br>9.3 - 9.3.1<br>9.3.2<br>9.3.3<br><br>9.4 - 9.4.1 | 9.4 - 9.4.2<br>9.4.3<br><br>9.5 - 9.5.1<br>9.5.2<br>9.5.3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுப்பாடப் பொதுத்தேர்ச்சிகள்

- வரலாற்றின் பரம்பலையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.
- நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்காக இறந்த காலம் பற்றி விமர்சன ரீதியில் நோக்குவார்.
- தேசியப் பிரச்சினைகளின் போது நடுநிலையாகச் செயற்படுதல்.
- முக்கியமான வரலாற்று நாயகர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- தேசியத்தின் தனித்துவத்தை அறிந்து கொண்டு அதனை மதித்து நடப்பார்.
- வரலாற்று அனுபவங்களை நிகழ்கால நன்மைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- இலங்கையின் வரலாறு தொடர்பில் பெருமிதத்துடன் செயற்படுவார்.
- ஆய்ந்தோய்ந்தும் விமர்சனரீதியாகவும் சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வார்.
- வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடங்களை அடையாளப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

## 2.0 தரம் 9 இற்கான பாட நோக்கங்கள்

- பிரித்தானியரின் இலங்கை வருகை மற்றும் ஆட்சியை நிறுவுதல் பற்றிக் கற்றல்.
- பாராளுமன்ற ஆட்சிமுறை வரை இலங்கையின் அரசியல் வளர்ச்சியடைந்த விதம் பற்றி விளக்குதல்.
- இலங்கையின் சமய, அரசியல் மறுமலர்ச்சி பற்றிய அறிவைப் பெறுதல்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வளர்ச்சி பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ளல்.
- ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை அமைத்தமையும் அதன் நோக்கங்களையும் அறிந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1 பிரித்தானியரின் இலங்கை வருகையும் அவர்களின் அதிகாரம் நிலைநாட்டப்படலும்

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல் பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார். | 9.1.1 ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் இலங்கையிலும் தாக்கம் செலுத்தலாம் என்பதால் பிரித்தானியர் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றியதனை விளக்குவார். | 9.1 பிரித்தானியரின் இலங்கை வருகையும் ஆட்சியை நிறுவுதலும்<br>9.1.1 பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல்.<br>• கரையோரத்தைக் கைப்பற்றுவதில் செல்வாக்குச் செலுத்திய பின்னணிக் காரணிகள்<br>• கரையோரத்தில் பிரித்தானியர் ஆட்சி<br>- வர்த்தகக் கம்பனி நிர்வாகம்<br>- இரட்டை ஆட்சி<br>- முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்படுதல். | 03 |
| | 9.1.2 ஆட்சியில் நிலவும் பலவீனங்கள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டைக் கைப்பற்ற ஏதுவாயமைந்த விதத்தை பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றியதை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வார். | 9.1.2 1815 இல் மலையக இராச்சியம் கைப்பற்றப்படல்.<br>• 1815 இற்கு முன்னர் பிரித்தானியர் மலையக இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள்.<br>• பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றுவதற்கான பின்னணி. | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- |
| | 9.1.3 திட்டமிடப்படாத முறையில் செயற்பட்டால் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது என்பதை சுதந்திரப் போராட்டம் மூலம் விளக்குவார். | 9.1.3 1818 சுதந்திரப் போராட்டம்<br>• கிளர்ச்சிக்கான காரணங்கள்<br>• கிளர்ச்சித் தலைவர்கள்<br>• கிளர்ச்சி தோல்வியடைதல் | 02 |
| | 9.1.4 கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்டமை தொடர்பில் தகவல் களைத்திரட்டுவார். | 9.1.4 கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் | 01 |
| | 9.1.5 1848 சுதந்திரப் போராட்டத்தின் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார். | 9.1.5 1848 சுதந்திரப் போராட்டம் | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2 பாராளுமன்ற ஆட்சிமுறை வரையிலான இலங்கையின் அரசியல் வளர்ச்சி

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல் பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார். | 9.2.1 தேசியத் தலைவர்களின் துணிச்சல், அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் ஆட்சி நிர்வாகம் பாராளுமன்ற ஆட்சிமுறை வரை வளர்ச்சியடைந்த விதத்தை ஆய்வு செய்வதன் ஊடாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை விளங்கிக் கொள்வார். | 9.2 பாராளுமன்ற ஆட்சி முறை வரையிலான இலங்கையின் அரசியல் வளர்ச்சி<br>9.2.1 கோல்புறூக் - கமறன் சீர்திருத்தங்கள்<br>- சட்டமன்றமும் நிர்வாகத்துறையும் நிறுவப்படல்<br>- இனவாரிப்பிரதிநிதித்துவ முறை<br>- மலைநாடும் தாழ்நாடும் ஒன்றிணைக்கப்படல் | 02 |
| | | 9.2.2 குறு - மக்கலம் சீர்திருத்தம்<br>இலங்கையருக்கு வாக்குரிமையை வழங்குதல்.<br>- இனவாரிப்பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்படல்<br>- சட்ட நிரூபண சபையின் அதிகாரம் விரிவு படுத்தப்படல் | 02 |
| | | 9.2.3 மனிங் அரசியலமைப்பு சீர்திருத்தம்<br>- உத்தியோகப்பற்றற்ற உறுப்பினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல்.<br>- மாகாண ரீதியான தேர்தல் தொகுதி முறை<br>- இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்படல் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | | 9.2.4 மனிங் டிவன்சயர் அரசியலமைப்புச் சீர்திருத்தம்<br>• அதிகாரமும் வகைகூறலும் பிரிந்து காணப்படல்<br>• இன்வாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்படல்<br>• சட்ட நிருபண சபைக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படல் | 02 |
| | | 9.2.5 டொனமூர் யாப்புச் சீர்திருத்தம்<br>• அரசுக்கழகம் நிறுவப்படல்<br>• சர்வசன வாக்குரிமை வழங்கப்படல்<br>• பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப் படல்.<br>• இனவாரிப்பிரதிநிதித்துவமுறை நீக்கப்படல்<br>• நிர்வாகக் குழு முறை மூலம் தேசியத் தலைவர்களுக்கும் அதிகளவு அதிகாரம் கிடைத்தல். | 03 |
| | | 9.2.6 சோல்பரி யாப்புச் சீர்திருத்தம்<br>• இரு மன்றங்களைக் கொண்ட பாராளு மன்றம் அமைக்கப்படுதல்.<br>• தேசாதிபதி (ஆளுனர் பதவி)<br>• பிரதமர் தலைமையிலான அமைச்சரவை | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3 இலங்கையின் சமய, அரசியல் மறுமலர்ச்சி

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார். | 9.3.1 எமது தனித்துவத்தையும் பாரம்பரியங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேசியத்தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பதுடன் தேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பார். | **9.3 இலங்கையின் அரசியல், சமய மறுமலர்ச்சி**<br>9.3.1 சமயம்<br>• மிஷனரி நடவடிக்கைகள்<br>• பௌத்த, இந்து, இஸ்லாமிய மறுமலர்ச்சி<br>• மது ஒழிப்பு இயக்கம் | 05 |
| | | 9.3.2 அரசியல்<br>- தேசிய காங்கிரஸ்<br>- ஏனைய அரசியல் ஒழுங்கமைப்புக்கள்<br>- அரசியல் கட்சிகள் உருவாதல் | 03 |
| | | 9.3.3 அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு இயக்கங்கள் | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.4 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வளர்ச்சி

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| தேசிய சுயாதீன தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விளக்குவதுடன் நல்லாட்சிக்குப் பங்களிப்புச் செய்வார். | 9.4.1 சமகாலத் தேவையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தை அமைப்பதற்காக மக்கள் பங்களிப்புச் செய்த விதத்தை 1948-1972 கால கட்டத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின் ஊடாக விளக்குவார். | 9.4 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வளர்ச்சி<br>9.4.1 1948 முதல் 1972 வரையிலான அரசியல் மாற்றங்கள்<br>• அரசியல் கட்சிகளின் கீழான அரசாங்கம் உருவாதல்<br>- 1956ம் ஆண்டு தேர்தல்<br>- 1960ம் ஆண்டு தேர்தல்<br>- 1965ம் ஆண்டு தேர்தல்<br>- 1970ம் ஆண்டு தேர்தல் | 05 |
| | 9.4.2 டொமீனியன் அந்தஸ்து மூலம் முழுமையான அரசியல் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடிந்தமையை விளக்குவார். | 9.4.2 1972 இல் குடியரசாக மாறுதல்<br>• தேசிய அரசுப் பேரவை<br>• ஓரங்க சட்டத்துறை<br>• பெயரளவு ஜனாதிபதி பதவி | 04 |
| | 9.4.3 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் அடிப்படைப்பண்புகளை ஒப்பிட்டாராய்வார். | 9.4.3 1978 இரண்டாம் குடியரசுயாப்பு<br>• நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி<br>• ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை<br>• பிரதமரும் பாராளுமன்றமும்<br>• விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.5 குடியேற்றவாதப் பரம்பல்

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- |
| உலக வரலாற்றை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பிய சக்திகள் தொடர்பாக விசாரணை செய்வார். | 9.5.1 18ம், 19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரின் குடியேற்ற நாடுகளை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுவார். | 9.5 பேரரசுப் பரம்பல்<br><br>9.5.1 குடியேற்றவாதம்<br>• 18ம் நூற்றாண்டில் குடியேற்றவாதம்<br>- பிரித்தானியரின் குடியேற்றங்கள்<br>- பிரான்ஸியரின் குடியேற்றங்கள்<br>- போர்த்துக்கேயரின் குடியேற்றங்கள்<br>- ஒல்லாந்தரின் குடியேற்றங்கள்<br>- ஸ்பானியரின் குடியேற்றங்கள்<br><br>• 19ம் நூற்றாண்டில் குடியேற்றவாதம்<br>- பிரித்தானியரின் குடியேற்றங்கள்<br>- பிரான்ஸியரின் குடியேற்றங்கள்<br>- போர்த்துக்கேயரின் குடியேற்றங்கள்<br>- ஒல்லாந்தரின் குடியேற்றங்கள்<br>- ஸ்பானியரின் குடியேற்றங்கள்<br><br>• 20ம் நூற்றாண்டில் குடியேற்றவாதம்<br>- பிரித்தானியரின் குடியேற்றங்கள்<br>- பிரான்ஸியரின் குடியேற்றங்கள்<br>- போர்த்துக்கேயரின் குடியேற்றங்கள்<br>- ஒல்லாந்தரின் குடியேற்றங்கள்<br>- ஸ்பானியரின் குடியேற்றங்கள் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 9.5.2 உலகில் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு ஆட்சியதிகார மாற்றங்களின் பிரதி பலனாக குடியேற்ற நாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கங்கள் வேறுபட்ட விதத்தையும் விளக்குவார். | 9.5.2 குடியேற்றங்களை வைத்திருப்பதன் நோக்கங்கள்<br>• கைத்தொழில் புரட்சிக்கு முன்னர்<br>• கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் | 03 |
| | 9.5.3 பல்வேறு இனங்களுக்கிடையே ஏற்பட்ட பலப்பரீட்சையானது உலக யுத்தம் வரை வளர்ச்சியடைந்த விதத்தை உலக யுத்தங்களின் அடிப்படையில் விளக்குவார். | 9.5.3 உலக யுத்தங்களுக்கான பின்னணி உருவாதல்<br>• முதலாம் உலக மகா யுத்தம்<br>• சமாதானத்துக்கான முயற்சிகள்<br>• இரண்டாம் உலகப் போருக்கான பின்னணி உருவாதல்<br>• சமாதானத்துக்கான முயற்சிகள் | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வரலாறு பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்களை வெற்றிகரமாகவும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் கற்பதற்கு மாணவரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் அவசியம்.

பாடசாலை வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படக்கூடிய சில விடயங்கள் கீழே முன்மொழியப்பட்டுள்ளன. அவ்வாறானதொரு பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டத்தையும் தயாரித்துக் கொள்வதற்கான முழுமையான சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்றுச் சங்கத்தைத் தாபித்து அதனூடாக மாணவரின் அறிவை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல், விவாதங்கள், கண்காட்சிகளை நடாத்துதல், சஞ்சிகை, சுவர்ப்பத்திரிகை ஆக்குதல் போன்ற விடயங்களில் மாணவரை ஈடுபடுத்தல்.
- அவ்வப்போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதற்கான கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.
- வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவுசார் விடயங்களை நேரடியாகப் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலான முன்னேற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்வது சிறந்தது.
- இலங்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று ஆசிரியர்களைப் பாடசாலைக்கு அழைத்து அவர்களை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கல்.
- பிரதேசத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தேடியாராய்வதுடன் அவற்றைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றையும் சமூகத்துடன் இணைந்து மேற்கொள்ளல்.
- வரலாற்றுப்பாடத்துக்குரிய சித்திரங்கள், சிலைகள், சிற்பங்கள், ஏனைய அரும்பொருட்களைக் கண்காணிப்பதற்கும், கண்காணிப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்குமான வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 2

# கற்றல் கற்பித்தல் செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு கற்பித்தலுக்கான முறையியல்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தமாகும் போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களிற் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role) பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்திற் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளைக் கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளிற் செய்ய வேண்டிய அபிவிருத்தி சார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக்கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக்கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதன்று.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுற்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார்செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) ஈடுபடுத்தும் படி (Engagement step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான, சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல், புதிர்கள், விடய ஆய்வுகள் கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment). செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல் தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது. ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.0 வரலாறு கற்பித்தலுக்கான வழி முறைகள்

செயற்பாடுகளின் மூன்றாம் கட்டத்தில் தேடல்களை முன்வைத்ததும் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர், மென்மேலும் தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர்களைத் தூண்ட முயற்சிப்பதனூடாக கற்பித்தல் செயற்பாட்டை மேலும் பயனுறுதிமிக்கதாக்க முடியும்.மேற்படி விடயங்களுக்காக இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் கலந்துரையாடல், மூலாதாரங்களைப் பரிசீலித்தல், கண்காணிப்பு போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல் சிறந்தது. வரலாற்றுப் பாடத்தின்பால் மாணவர்களைத் தூண்டும் சில வழிமுறைகள் பின்வருமாறு.

- தேசிய அரும்பொருட்காட்சிச்சாலை, பிரதேச மட்டத்திலான அரும்பொருட்காட்சிச்சாலை, போன்றவற்றைப் பார்வையிட வழிப்படுத்தல்.
- மாணவர்களைத் தமது பிரதேச வரலாற்றின்பால் கற்றலில் ஈடுபடுத்தி அதனூடாகத் தேசிய வரலாற்றுக்கு எடுத்துச்செல்லல்.
- ஊடகங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழிப்படுத்தல். (வானொலி, தொலைக்காட்சி கல்விச்சேவை நிகழ்ச்சிகள், இணையத்தளம்)
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடத் தூண்டுதல்.
- மூலாதாரங்களைப் பயன்படுத்த வழிப்படுத்தல்.
- மாணவர் திறமைக்கு இடமளிக்கும் வகையிலான சுவர்ப்பத்திரிகை, சஞ்சிகை, கண்காட்சி, பாடசாலை அரும்பொருளகம், போன்றனவற்றைப் பார்வையிடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.
- சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் நடுநிலையையுடனும் யதார்த்தத்துடனும் நோக்க் கூடிய பயனுறுதி வாய்ந்த பிரசைகளை உருவாக்குவதில் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் உங்களால் முடியும். இது தொடாபாக உங்கள் பொறுப்பு அளப்பரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியரின் இலங்கை வருகையும் அவர்களின் ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட்டமையும்

**அலகு 9.1** **பாடவேளைகள் 15**

**அறிமுகம் :**

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் அதிகாரத்தை 1796 இல் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர், 1815 இல் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றி, இலங்கை முழுவதிலும் தமது அதிகாரத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டனர். பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய விதம், பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட இலங்கையர் தமது சுதந்திரத்துக்காக ஈடுபட்ட 1818, 1848 ஆகிய காலப்பகுதிகளிலான சுதந்திரப்போராட்டமும் அவை தோன்றுவதற்கான காரணங்களும், அவை அடக்கப்பட்ட விதம், அத்தலைவர்களும் அப்போராட்டங்களும் தோல்வியமைந்தமைக்கான காரணங்கள், இதனால் தமது ஆதிக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்குப் பிரித்தானியர் பின்பற்றிய செயற்பாடுகள் என்பன பற்றி ஆராய்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**தேர்ச்சி :** இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல் பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம் :**

- ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் இலங்கையிலும் தாக்கம் செலுத்தலாம் என்பதால் பிரித்தானியர் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றியதனை விளக்குவார்.
- ஆட்சியில் நிலவும் பலவீனங்கள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டைக் கைப்பற்ற ஏதுவாயமைந்த விதத்தை பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றியதை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வார்.
- திட்டமிடப்படாத முறையில் செயற்பட்டால் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது என்பதை சுதந்திரப் போராட்டம் மூலம் விளக்குவார்.
- கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்டமை தொடர்பில் தகவல்களைத்திரட்டுவார்.
- 1848 சுதந்திரப் போராட்டத்தின் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார்.

பாட உள்ளடக்கம் :

9.1 இலங்கைக்கு பிரித்தானியரின் வருகையும் அவர்களின் ஆதிக்கம் நிலைநாட்டப்படலும்.

9.2. பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியமை

**<u>கைப்பற்றுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்</u>**

- ஒல்லாந்தருக்கு உரித்தான கீழைத்தேய வர்த்தக ஆதிக்கத்தைக் கைப்பற்றுதல்.
- இந்து சமுத்திரத்தில் வர்த்தக ஆதிக்கத்தைப் பெறுவதற்குப் பிரான்சியருடன் ஏற்பட்ட போட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- இலங்கையில் பிரித்தானியர் கவனஞ் செலுத்துதல்
- இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்.
- திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்.
- வர்த்தக முக்கியத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருகோணமலைத் துறைமுகம்

இலங்கையின் கரையோரப்பிரதேசங்களைப் பிரித்தானியர் கைப்பற்றல்

- பிரான்சியரிடமிருந்து இலங்கையை (திருகோணமலைத் துறைமுகம்) பாதுகாக்க வேண்டிய தேவை.
- பாதுகாப்புக்கருதி பிரித்தானியாவுக்கு வந்த ஒல்லாந்து ஆட்சியாளனான இளவரசர் வில்லியத்தின் அனுமதியுடன் ("கியு"கடிதம்) பிரித்தானியா இலங்கையின் ஒல்லாந்தப் பிரதேசங்களைக் கோரியமை.
- ஒல்லாந்த ஆட்சியாளனான பன் எங்கல் பெக் அதனை மறுத்தமை.
- திருகோணமலையைப் பிரித்தானியர் கைப்பற்றுதல்.
- யாழ்ப்பாணம், கற்பிட்டி, காலி, கொழும்பு ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1796 இல் பிரித்தானிய ஆதிக்கப் பிரதேசம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் பிரித்தானியரின் ஆட்சி

- ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனி ஆட்சி (1796 - 1798)
- சென்னையில் நிலவிய ஆட்சி முறை இலங்கையின் கரையோரப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படல்.

### 1797 - 1798 கிளர்ச்சி

#### கிளர்ச்சிக்கான காரணங்கள்

- உள்நாட்டுவரி முறைமையைக் கருத்திற் கொள்ளாது சென்னையில் நிலவிய வரிமுறையை நடைமுறைப்படுத்தியமை.
- பண்டங்களில் வரியை அறவிடாது பணத்தில் வரியை அறவிட்டமை.
- வரி அறிவிடுவதற்குச் சென்னை அலுவலர்கள் (ஔமில்டர்) நியமிக்கப்பட்டமை.
- வரி சேகரிக்கும் உரிமையை ஏலத்தில் விடுதல்.
- கரையோரப் பிரதேசங்களில் உள்நாட்டுப் பிரதானிகளின் அதிகாரம் குறைவடைந்தமை.
- புதிய வரிகளை விதித்தல்.
- கிளர்ச்சியை பிரித்தானியர் அடக்கியமை.
- கிளர்ச்சிக்குக் காரணமான விடயங்கள் பற்றிக் கண்டறிய டி மியூரன் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டமை.

#### டி மியூரன் குழுவின் சிபாரிசுகள்

- புதிய வரிகளை நீக்குதல்.
- வரி ஏல விற்பனை முறையை நீக்குதல்.
- வரி சேகரிக்க உள்நாட்டு அலுவலர்களை நியமித்தல்.
- பணமாக வரி சேகரித்தலை நீக்குதல்.

### இரட்டை ஆட்சி முறை (1798- 1802)

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் பிரித்தானிய அரசும் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களை ஆட்சி செய்தமை இரட்டை ஆட்சி முறை எனப்பட்டது.

- 1798 இல் பிரட்ரிக் நோர்த் கரையோரப் பிரதேசங்களின் முதல் பிரித்தானிய ஆளுனராக நியமிக்கப்பட்டமை.
- பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் அலுவலர்களின் ஊழல் மற்றும் பிரித்தானிய அரசின் அலுவலர்களின் திறமையற்ற தன்மை, போன்ற காரணங்களால் இரட்டை ஆட்சி தோல்வியடைந்தமை.

### கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானிய முடியாட்சியின் கீழ்க் கொண்டு வரப் படுதல்(1802)

- முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டதன் பின்னர் பிரட்ரிக் நோர்த் பிரித்தானிய ஆளுனராகச் செயற்பட்டமை.

பிரட்ரிக் நோர்த்தின் சீர்திருத்தம்.

- உயர் நீதிமன்றம் தாபிக்கப்பட்டமை.
- சிவில் வழக்குகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தாபிக்கப்பட்டமை.
- திணைக்களங்களை அறிமுகஞ் செய்தமை. (நில அளவை, தபால், பொது வேலை,)
- மருத்துவமனைகள் தாபிக்கப்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோமஸ் மெயிற்லண்ட் அவர்களின் ஆட்சிக்காலம். (1805-1812)**

- உள்நாட்டு அலுவலர்களின் அதிகாரம் குறைக்கப்பட்டமை.
- பிரித்தானிய அலுவலர்களின் சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சி கட்டாயமாக்கப் பட்டமை.
- ஜுரி சபை முறை ஏற்படுத்தியமை.

**9.1.2.- 1815 இல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுதல்.**

**1815 இற்கு முன்னர் பிரித்தானியர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்பு.**

- ஜோன் பைபஸ் 1762 இல் கண்டிக்கு வந்தமை.
- 1782 இல் கியு பொய்ட் கண்டி மன்னனைச் சந்தித்தமை.
- 1795 இல் றொபட் பிறவுன்றிக் கண்டி மன்னனைச் சந்தித்தமை.
- 1800 இல் பிரட்ரிக் நோர்த், மக்டொவல் தளபதியை கண்டி மன்னனிடம் அனுப்பியமை.
- கண்டி இராச்சியத்துடன் நிலவிய வர்த்தகத்தில் வரி செலுத்த வேண்டி நேரிட்டமை.
- கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையில் வீதியை அமைப்பதற்கு கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.
- கரையோரப் பிரதேச எல்லைகளிலும் கண்டி இராச்சிய எல்லைகளிலும் இராணுவத்தை வைத்திருக்க நேரிட்டதால் இரு இடங்களிலும் பாதுகாப்புச் செலவு அதிகரித்தமை.
- பிரித்தானியருக்கு எதிராக கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளில் கண்டி மன்னன் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி வழங்கியமை.
- கரையோரப் பிரதேச மக்கள் கண்டி மன்னனைத் தமது மன்னனாகக் கருதியமை.
- கண்டி மன்னன் பிரித்தான்ியருக்கு எதிராகப் பிரான்சின் உதவியைப் பெறலாம் என்ற அச்சம்.
- அரசனுக்கும் பிரதானிகளுக்கும் இடையில் நிலவிய ஒற்றுமையின்மை பிரித்தானியருக்குச் சாதகமாய் அமைந்தமை. உ+ம்: பிலிமத்தலாவை
- "பிரதானிகள்" கண்டி அரசுரிமையைப் பெறுவதற்கு பிரித்தானியரின் உதவியை நாடியமை.
- 1802 இல் வியாபாரத்துக்காகக் கண்டிக்குச் சென்ற முஸ்லிம் வியாபாரக் குழுவினரைக் கண்டி மன்னனின் இராணுவத்தினர் சிறைப்படுத்தியமை.

**தோல்வியுற்றமைக்கான காரணங்கள்.**

- பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பமானதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி நேரிட்டமை.
- கண்டிப்படையினரின் கொரில்லாப் போர் முறையில் ஆங்கிலேயருக்குப் பழக்கமோ பயிற்சியோ இல்லாமை.
- மலையகத்தவரின் அரசசார்புப்பற்றும் அவர்களது ஒற்றுமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1815 இல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு உதவிய பின்னணி.**

- பிலிமத்தலாவையின் செயற்பாடுகள்.
- கண்டி மன்னனுக்கும் சிங்களப் பிரதானிகளுக்குமிடையிலான ஒற்றுமையின்மை.
- பிரித்தானியரின் உத்திகள்.- ஜோன் டொயிலியின் செயற்பாடுகள்.
  உ.ம்.: எகலபொல கிளர்ச்சி செய்தமை.
- மன்னன் மீது மக்கள் கொண்ட வெறுப்பு.

### 9.1.3 - 1818 இல் சுதந்திரப் போராட்டம்.

1815 இல் முழு இலங்கையும் பிரித்தானிய பேரரசுக்கு உட்பட்டதன் பின்னர் சுதந்திரத்துக்காக இலங்கையரால் எடுக்கப்பட்ட முதல் ஆயுதப் போராட்டக் கிளர்ச்சி 1818 சுதந்திரக் கிளர்ச்சியாகும்.

<u>பின்னணியான காரணங்கள்</u>

- பிரித்தானிய ஆட்சியாளர் உடன்படிக்கை நிபந்தனைகளின்படி செயற்படாமை.
  உ.ம்:
  - ரதல பிரதானிகளின் அதிகாரம் குறைக்கப் பட்டமை.
  - பௌத்த மதத்திற்கும் பௌத்த பிக்குகளுக்கும் அனுசரணை வழங்காமை.
  - பழைய சிங்கள ஆட்சி முறை நீக்கப்பட்டதால் மலையக மக்களுக்கு ஏற்பட்ட விரக்தி.
- "ஊவா வெல்லஸ்ஸ" பிரதேசத்துக்கு முஸ்லிம் ஒருவர் முகாந்திரமாக நியமிக்கப் பட்டமை.
- தேசிய மொழிகள், பழக்க வழக்கங்கள், என்பன பற்றி எதுவும் அறியாத பிரித்தானிய ஆட்சியாளர் ஆட்சி நடத்தியமை.
- மலையக இராச்சிய உரிமையாளன் எனக் கூறி துரைசாமி என்பவர் முன்வந்தமை.

1818 சுதந்திரப்போராட்டத்திற்கான உடனடிக் காரணம்.

- ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தில் மடிகே முகாந்திரமாக முஸ்லிம் இனத்தவரான ஹஜ்ஜி மரிக்கார் என்பவர் நியமிக்கப்பட்டமை.

**சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்**

மொனறவில கெப்பட்டிபொல
அகலப்பொல அதிகாரம்
பூட்டாவே ரட்டேரால
திம்புரன திசாவ
கொஹுகம்பரே ரட்டேரால
கலகெதர மொஹெட்டால
இரண்டாவது பிலிமதலாவ அதிகாரம்
கிவுல் கெதர மொஹொட்டால
கொடே கெதர அதிகாரம்

**தோல்வியுற்றமைக்கான காரணங்கள்**

- மார்ஷல் சட்டம் எனப்படும் போர்ச் சட்டம் விதிக்கப்படல்.
- பிரித்தானியர் பின் பற்றிய "விளைநிலம் பாழ்படுத்தும்" கொள்கை.
- மொல்லிக்கொட அதிகாரம் பிரித்தானியர் பக்கம் சார்ந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போர்த்தலைவர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடு.
- போர் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் திட்டமிடப்படாமை.
- புனித தந்ததாது பிரித்தானியரின் கைக்குள் சிக்கியமை.
- துரைசாமி முறையான அரச வம்சத்துக்குரியவன் அல்ல என்பது வெளியானமை.
- முஸ்லிம் இனத்தவர் பிரித்தானியர் பக்கம் சார்ந்திருந்தமை.
- பிரித்தானியரது நவீன யுத்த உபகரணங்களை சுதேசிகள் எதிர்த்து நிற்க இயலாமற் போனமை.

**1818 கண்டிப்பிரகடனம்**

- இப்பிரகடனத்தின் மூலம் பிரித்தானியர் மேலும் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டமை.

**9.1.4 - கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம்**

இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டுதற்கான மைல் கல்லாக கோல்புரூக் சீர்திருத்தங்கள் முக்கியத்துவம் பெற்றமை.

- கண்டியும் கரையோரப் பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டமை.
- யாப்புத்திட்டசபை அமைக்கப்படுதல். (சட்டவாக்கமுகம்)
- வெளிநாட்டவர் காணி பெற்றுக் கொள்வதில் இருந்த தடைகளை நீக்குதல்.
- வீதிகளை அபிவிருத்தி செய்தல்.
- வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படல்.
- தனியான நீதிமன்ற முறை ஏற்படுத்தப்படல்.
- ஆங்கிலக் கல்வி முறை ஆரம்பிக்கப்படல்.

**9.1.5 1848 சுதந்திரப் போராட்டம்.**

<u>பின்னணிக் காரணங்கள்.</u>

1848 சுதந்திரக் கிளர்ச்சி மலையகப் பிரதானிகளினால் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் 1848சுதந்திரக் கிளர்ச்சி சாதாரண மக்களால் ஏற்படுத்தப்பட்டதென இனங்காணப்படுகின்றது. இது விவசாயிகளின் எழுச்சி எனப்படுகின்றது.

<u>1848 சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள்.</u>

- கோல்புரூக் சீர்திருத்தத்தின் மூலம் சிவில் சேவையாளர் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் சிவில் சேவை வீழ்ச்சியடைந்ததுடன் மக்களுக்கும் அலுவலர்களுக்கும் இடையில் தொடர்புகள் நலிவடைந்தமை.
- உள்நாட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு பிரித்தானிய ஆட்சியாளரின் அனுசரணை வழங்கப்படாமை.
- கம்சபாவுக்கு இருந்த அதிகாரங்கள் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டதால், கிராம மக்கள் இடைஞ்சல்களை எதிர்நோக்கியமை.
- 1840 காணிச்சட்டத்தின்படி மக்களுக்கு உரித்தான நிலங்கள் அரசுக்கு ஒப்படைக்கப் பட்டமை.
- பிரித்தானியரால் பின்பற்றப்பட்ட மதுபானக்கடைகளைப் பரவலாக்கும் சீர்திருத்தத்தினால் சமூகத்தின் ஒழுக்கநெறி சீரழிதல்.
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக மக்களின் வாழ்க்கைக் கோலம் சிக்கலானமை.
- பௌத்த மதம் புறக்கணிக்கப்பட்டமை.
- டொரிங்டன் ஆளுனர் பதிய வரிகள் விதித்தமை.
- "நீலப்புத்தகம்"என்ற பெயரில் புள்ளி விபரத்தரவுப்புத்தகத்துக்கான தகவல்களைத் திரட்டும் போது அது புதிய வரி விதிப்புக்கான தகவல் சேகரிப்பு என மக்கள் நம்பிக்கை கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போராட்ட இயக்கத்தலைவர்கள்**

- கொங்காலகொட பண்டா
- குடஹபொல தேரர்
- வீர புரண்அப்பு
- ஹங்குரண்கெட்ட டிங்கிரால
- திராணகம

**கிளர்ச்சி பரவியமை**

மாத்தளை, குருணாகலை, தம்புள்ள, வாரியபொல, ஆகிய பிரதேசங்களில் கிளர்ச்சி தீவீரமாகப் பரவியமை.

<u>1848 சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்</u>.

- போராட்டம் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்படாதிருந்தமை
- மலையகப் பிரமுகர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியாதிருந்தமை.
- பிரத்தானியருக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் மேலதிக இராணுவத்தைப் பெற முடிந்தமை.
- இலங்கையரிடம் நல்ல ஆயுதங்கள் மற்றும் பயிற்சி பெற்ற இராணுவம் என்பன இல்லாதிருந்தமை.
- வீதித் தொகுதிகள் கிளர்ச்சியை அடக்குவதற்கு இலகுவாக இருந்தமை.
- மார்ஷல் சட்டம் (போர்ச்சட்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டமை.

1848 **போராட்டத்தின் விளைவுகள்.**

- குறிப்பிட்ட வரி வகைகள் நீக்கப்பட்டமை. குறிப்பிட்ட வரி வகைகள் திருத்தம் செய்யப் பட்டமை.
- குற்றமிழைத்தவர்களின் சொத்துக்கள் அரசசொத்துடைமையாக்கப்பட்டமை.
- டொரிங்டன் ஆளுநரும் குடியேற்ற நாடுகளின் செயலாளரான "ரெசிடென்ற்" இங்கிலாந்துக்குத் திருப்பி அழைக்கப் பட்டமை.
- இவ்வளவு காலமும் இடம் பெற்ற விவசாயிகளைப் புறக்கணிக்கும் கொள்கைக்குப் பதிலாக விவசாயிகளின் நலன் கருதி சாதகமான கொள்கைச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டிய தேவையை அறிந்து கொண்டமை.
- 1850 இன் பின்னர் விவசாயம், நீர்ப்பாசனம், என்பவற்றின் விருத்திற்கு அரசு ஆதரவு வழங்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.1.1

தேர்ச்சி மட்டம் : ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் இலங்கையிலும் தாக்கம் செலுத்தலாம் என்பதால் பிரித்தானியர் இலங்கையின் கரையோரங் களைக் கைப்பற்றியதனை விளக்குவார்..

செயற்பாடு : பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய விதத்தைக் கண்டறிவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

பண்புத்தர உள்ளீடுகள் :

- இணைப்பு 9.1.1.1
- பிரித்தானிய அரசின் படம்.
- இணைப்பு 9.1.1.2 - செயற்பாட்டுப் பத்திரம்.
- இணைப்பு 9.1.1.3 - அறிவுறுத்தல் பத்திரம்.
- பாடநூல்

கற்றல் கற்பித்தல் செய்கைமுறை :

படி 9.1.1.1

இணைப்பு 9.1.1.1 இல் காட்டப்பட்டுள்ள இராணியின் படத்தை காட்சிப்படுத்துக.
இவர் யார்?
இவர் ஆட்சி செய்த நாடு எது?
இவர்கள் இலங்கை பற்றிக் கவனஞ் செலுத்தியமைக்கான காரணங்கள் யாவை?

இவ்வினாக்களுக்கு விடைகளைப் பெற்று பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்துக.

- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர், ஆங்கிலேயர், ஆகிய பல்வேறு ஐரோப்பிய இனத்தவர்களும் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல்.
- ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டதுடன் நாடுகாண் பயணங்களில் ஏற்பட்ட உற்சாகத்தினால் ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகள் பற்றிக் கவனஞ் செலுத்துதல்.
- பிரித்தானியருக்கும் பிரான்சியருக்கும் இடையே இந்தியாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் போட்டி ஏற்படுதல்.
- பிரித்தானியர் இலங்கையில் கவனஞ் செலுத்துவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துதல்.
- ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கம் கரையோரப் பிரதேசங்களில் இன்னல்மிக்க ஆட்சியை நடாத்துதல்.
- இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்படுதல்.

(10 நிமிடங்கள்)

படி 9.1.1.2

- மாணவரைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.1.1.2 இலுள்ளபடி ஒவ்வொரு தலைப்பிலும் வினாக்கள் தயாரிக்கும் படி குழுக்களுக்கு ஆலோசனை வழங்குக.
- தேவையான வழிகாட்டல்கள் ஆலோசனைகளை வழங்குக.
- குழுக்களால் தயாரிக்கப்பட்ட வினாக்களை ஒன்று சேர்த்து அவற்றுள் தகுதியான 20 வினாக்களைத் தெரிவு செய்து மாணவர்களின் உதவியுடன் வினாக்கொத்து ஒன்றைத்தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 9.1.1.3

- இணைப்பு 9.1.1.3 இலுள்ளபடி வினாவிடைப் போட்டியினை நடாத்த ஒழுங்கு படுத்துக.
- தேவையாயின் இன்னொரு ஆசிரியரின் ஒத்துழைப்பையும பெற்றுக் கொள்க.
- குறித்த நேரத்தினுள் மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வினாவிடை நிகழ்ச்சித்திட்ட இறுதியில் வினாக்களையும் விடைகளையும் குறித்துக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(30 நிமிடங்கள்)

படி 9.1.1.4.

- மாணவர்களின் குறை நிறைகளை இனங்காண்க.
- உரிய பாடவிடயங்கள் பூரணமாகும் விதத்தில் பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனஞ் செலுத்திக் கலந்துரையாடல் நடத்துக.

- பிரித்தானியருக்கும் பிரான்சியருக்கும் இடையே இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கத்தை வலுப்படுத்த கடும் போட்டி நிகழ்ந்தமை.
- வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் பிரித்தானியரின் வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் பெறல்.
- இலங்கையில் இருந்து இந்து சமுத்திர வர்த்தகத்தை நிர்வகிக்கக் கூடியதாயிருத்தல்.
- பிரித்தானியருக்குத் தேவையான வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் பெறக்கூடியதாயிருந்தமை.
- ஐரோப்பிய சம்பவங்களின் விளைவாக இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியருக்கு உரித்தானமை.
- புதிய வரிகள் விதித்தமை, வரியைப் பணமாகப் பெற்றுக் கொண்டமை.
- வரியைச் சேகரிப்பதற்கு "அவுமில்தார்" எனப்படும் வெளிநாட்டு அலுவலர் நியமிக்கப்படல்.
- வரி சேகரிக்கும் உரிமை ஏலம் போடுதல் மூலம் வழங்கப்பட்டமை. இக்காரணங்கள் 1797 கிளர்ச்சிக்குக் காரணமாதல்.
- கிளர்ச்சியை அடக்கிய பிரித்தானியர் கிளர்ச்சி பற்றி ஆராய மியூரன் குழுவை நியமித்தமை.
- மியூரன் குழு இலங்கையின் கரையோரப் பிரதேச மக்களுக்கு இன்னல் தரும் சட்டங்களை நீக்க சிபார்சு செய்தல்.
- சென்னை நிர்வாகத்தின் பலவீனம் காரணமாக இரட்டையாட்சி முறை ஆரம்பிக்கப்படுதல்.
- இரட்டையாட்சி முறை தோல்வியுற்றதால் 1802 இல் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடும் கணிப்பீடும் :

- ஐரோப்பாவில் நிகழ்ந்த அரசியல் சம்பவங்கள் இலங்கையில் தாக்கம் செலுத்தியமையைப் பிரித்தானியரின் வருகையைத் துணைகொண்டு விபரிப்பார்.
- இலங்கையர் சுதந்திரமான இனத்தவர் என்பது பற்றிக் கருத்து வெளிப்படுத்துவார்.
- இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் பிரித்தானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட விதம் பற்றிய விடயங்களைக் கோவைப்படுத்துவார்.
- குழுச் செயற்பாட்டில் ஒத்துழைப்பு வழங்குவார்.
- சபைக் கூச்சமின்றி முன்வைப்பார்.

இணைப்பு 9.1.1.1



பிரித்தானிய எலிசபெத் மகாராணி

இணைப்பு 9.1.1.2

செயற்பாட்டுப் பத்திரம்

| |
|---|
| வினாவிடை நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஒவ்வொரு குழுவும் வினாக்கள் தயாரிக்குக. |
| குழு 1. பிரித்தானியர் இலங்கைமீது கவனஞ் செலுத்துதல். |
| குழு 2. சென்னை நிருவாகமும் 1797 - 1798 கிளர்ச்சிகளும். |
| |
| குழு 3. இரட்டையாட்சி முறையும் கரையோரப்பிரதேசங்கள் முடிக்குரிய நாடாதலும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.1.1.3

## ஆலோசனைப் பத்திரம்

- வினாவிடைப் போட்டி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்த பொருத்தமான மாணவர் இருவரைத் தெரிவு செய்க.
- இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கென வகுப்பு மாணவர்களை A, B என இரண்டாகப் பிரிக்குக.
- இரண்டு குழுக்களுக்கும் தலைவர் இருவரைத் தெரிவுசெய்க.
- நியமிக்கப்பட்ட இரண்டு மாணவர்கள் மூலம் நிகழ்ச்சியை நடத்துக.
- வகுப்பின் அனைத்து மாணவர்களும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்க நடவடிக்கை மேற்கொள்க.
- புள்ளி வழங்கும் திட்டம்.
    - வினா தொடுக்கப்பட்ட மாணவர் விடையளித்தால் 10 புள்ளிகள்
    - அக்குழுவின் வேறொருவர் விடையளித்தால் 05 புள்ளிகள்
    - எதிரணியில் உள்ள ஒருவர் விடையளித்தால் 03 புள்ளிகள்
- மேற்கூறிய புள்ளித்திட்டப்படி புள்ளிகளைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.1.2.

தேர்ச்சி மட்டம் : 9.1.3: திட்டமிடப்படாத முறையில் செயற்பட்டால் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது என்பதை சுதந்திரப் போராட்டம் மூலம் விளக்குவார்.

9.1.4: கோல்புறூக் -கமரன் சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்டமை தொடர்பில் தகவல்களைத் திரட்டுவார்.

9.1.5: 1948 சுதந்திரப் போராட்டத்தின் மூலம் பிரித்தானியரின் அதிகாரம் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார்.

செயற்பாடு : சிங்களவர், சுதந்திரத்துக்காக நிகழ்த்திய முதல் சுதந்திரக் கிளர்ச்சி பற்றிய தகவல்களைக் கண்டறிவோம்.

பாடவேளை : 80 நிமிடங்கள்

பண்புத் தர உள்ளீடு :

- இணைப்பு 9.1.2 செயற்பாட்டுப் பத்திரம்
- பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 9.1.2.1.

கெப்பட்டிப்பொல, வாரியப்பொல சுமங்கல தேரர் போன்ற 1818 போராட்டத் தலைவர்கள் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

- மாணவர் வெளிப்படுத்திய கருத்துக்களுடன் பின்வரும் விடயங்களும் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துக.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் செயற்பாடுகள் காரணமாக மலையகத்தவர் மன்னன் மீது வெறுப்பு கொண்டிருந்தமை.
- மலையகப் பிரதானிகள் பிரித்தானிய ஆட்சியாளருடன் சேர்ந்து மன்னனை துரத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டமை.
- மலையகத்தவரின் ஒத்துழைப்புடன் 1815 இல் மலையக ராச்சியம் (கண்டி) பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு உட்பட்டமை. இதனூடாக இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாகியமை.
- பிரித்தானியரின் ஆட்சியினால் மலையகப் பிரதானிகளின் அதிகாரமும் சிறப்புரிமைகளும் குறைக்கப்பட்டமை.
- பிரித்தானிய ஆட்சியினர் பௌத்தமதத்திற்கும், பிக்குமார்களுக்கும் ஆதரவு வழங்காமை.
- கடைசி மன்னர்கள் நாயக்க தமிழ் மன்னர்கள் மன்னராச்சி முறை நீக்கப்பட்டமையினால் மலையகத்தவர் பெரும் கழிவிரக்கத்துக்குட்பட்டமை.

(15 நிமிடங்கள்)

படி 9.1.2.2 :

மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.

- ஒவ்வொரு குழுவுக்கும் தலைவர்களை நியமிக்குக.
- இணைப்பு 9.1.1.2.1 செயற்பாட்டுப் பத்திரத்தை குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்க.
- மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பவற்றை வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 9.1.2.3

செயற்பாட்டுப் பத்திரத்தில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்களை அட்டவணை முறையில் கரும்பலகையில குறிப்பிட்டுக் காட்டுக.

- ஒவ்வொரு குழுவும் திரட்டிய தகவல்களைக் கரும்பலகையில் உள்ள அட்டவணையில் குறிப்பிடுக. (ஒரு விடயத்தை அன்றிப் புதிய புதிய விடயங்களைக் குறிப்பிடுமாறு ஆலோசனை வழங்குக.)
- குழுச்செயற்பாட்டின் மூலம் மாணவரின் நிறை குறைகளை இனங்காண்க.
- இனங்கண்ட குறைநிறைகள் பற்றிக் கவனம் செலுத்திப் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை மேற்கொள்க.

- பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் எழுந்த முதல் சுதந்திரப் போராட்டம் 1818 கிளர்ச்சி
- இது ஊவா- வெல்லஸ்ஸ பகுதியில் எழுந்தமை.
- முகாந்திரமாக ஹஜ்ஜி மரைக்கார் நியமிக்கப்பட்டமையே இக்கிளர்ச்சிக்கான உடனடிக் காரணமாதல்.
- துரைசாமி என்பவர் அரசுக்கு உரிமை கோரியமை.
- மலையக மக்கள் அவரைச் சுற்றி ஒன்று பட்டமை.
- மடுகல்ல, (எகலப்பொல) பூட்டாவே ரட்டேரால, கிவுலே கெதர, கொஹு்கும்புரே ஆகியோர் கிளர்ச்சியை நடத்தியமை.
- கிளர்ச்சியை அடக்கச் சென்ற பிரித்தானிய அலுவலரும் ஹஜ்ஜி மரைக்காரும் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டமை.
- கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்கு பிரித்தானியர் அனுப்பிய மொனறவில கெப்பட்டிப்பொல திசாவை கிளர்ச்சியாளர் பக்கம் சார்ந்தமை.
- அவன் அங்கு தலைமை ஏற்றமை.
- பிரிதானியர் போர்ச்சட்டத்தைப் பிறப்பித்துக் கிளர்ச்சியை அடக்கியமை.
- தலைவர்கள் பிரித்தானியர்களால் கைது செய்யப்பட்டமை.
- பிரித்தானியர் "விளைநிலங்களை அழித்தல்" கொள்கையைப் பின்பற்றல்.
- மொல்லியகொட பிரித்தானியர் பக்கம் சார்ந்து செயற்பட்டதால் கிளர்ச்சியை அடக்குதல் எளிதானமை.
- தலைவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மை, கிளர்ச்சியை ஒழுங்கமைக்காமை, துரைசாமி உரிய அரச வம்சத்தவனாக இல்லாமை, தந்ததாது பிரித்தானியர் வசமானமை, முஸ்லிம்கள் பிரித்தானியர் பக்கம் சார்ந்திருந்தமை. 1818 செப்டம்பர்21ம் திகதிக்கு முன் சரணடைபவர்களுக்கு உயிர்ப்பிச்சை தரப்படும் எனப்பிரகடனம் செய்தல், என்பன கிளர்ச்சி தோல்வியடைவதற்கான காரணங்களாகியமை.
- கிளர்ச்சி அடக்கப்பட்ட பின்னர் 1818 இல் கண்டி பிரகடனம் வெளியிடப் பட்டமை.
- இது கண்டியில் பிரித்தானியர் ஆதிக்கம் மேலும் உறுதி பெறுவதற்குக் காரணமாகியமை.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பிரித்தானியருக்கு எதிராக நடத்திய முதல் சுதந்திரப்போராட்டம் பற்றி விபரிப்பார்.
- முதலாம் சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் வீரம் பற்றிப் புகழ்ந்து பேசுவார்.
- முதலாம் சுதந்திரப் போராட்டம் பற்றிய தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.
- கூட்டாகச் செயற்படுவதில் திறனை வெளிப்படுத்துவார்.
- சரியாகவும் படிமுறையாகவும் கருத்துக்களை முன்வைக்கும் திறனைக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.1.2.1

## செயற்பாட்டுப்பத்திரம்

இலங்கையின் முதலாம் விடுதலை இயக்கம் பற்றிப் பின்வரும் விடயங்களைத் திரட்டித் தகவல் பத்திரமொன்றைத் தயாரிக்குக.

- முதலாம் விடுதலை இயக்கத்தின் பின்னணியும் காரணங்களும்.
- முதலாம் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பமும் பரம்பலும்.
- விடுதலை இயக்கத்தின் முன்னோடிகள்.
- விடுதலை இயக்கம் தோல்வியுற்றமையின் காரணங்கள்.
- விடுதலை இயக்கத்தின் விளைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2 இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறையின் வளர்ச்சி

அறிமுகம் :- (15 பாடவேளைகள்)

இலங்கையில் பண்டைய காலந்தொட்டு மன்னராட்சி முறையே காணப்பட்டது. போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த தருணத்தில் அப்பிரதேசங்களில் மன்னராட்சி முறை முழுமையாக காணப்படாத போதிலும் பழைய ஆட்சி முறையின் சில அம்சங்களை நடைமுறைப்படுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

பிரித்தானியர் 1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களையும் 1815 இல் முழு இலங்கையையும் தமது ஆதிபத்தியத்தின் கீழ் கொண்டு வந்தனர். தமது அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பிரித்தானியர்களினால் இந்நாட்டின் நிர்வாக அமைப்பு முறை மறு சீரமைக்கப்பட்டது.1833, 1910 - 1912, 1920, 1924, 1931, 1947 ஆகிய வருடங்களில் பிரித்தானியர்களினால், இந்நாட்டில் மேற் கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களினூடாக இலங்கையர்களின் அரசியல் அனுபவங்கள் அரசியலமைப்புச் சீர்திருத்த ஆர்ப்பாட்டங்களின் பெறுபேறாக ஜனநாயகப் பண்புகள் இந்நாட்டின் நிலை நிறுத்தப்பட்ட முறை உட்பட, இறுதியாக பிரித்தானிய பாராளுமன்ற அரசியலமைப்பு முறை இந்நாட்டில் நிலை நிறுத்தப்பட்டமை தொடர்பாக விளக்கமொன்றை பெற்றுக் கொள்ளல் இந்த அலகினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தை பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.2.1 தேசியத் தலைவர்களின் துணிச்சல், அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் ஆட்சி நிர்வாகம் பாராளுமன்ற ஆட்சி முறை வரை வளர்ச்சியடைந்த விதத்தை ஆய்வு செய்வதன் ஊடாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை விளங்கிக் கொள்வார்.

**பாட உள்ளடக்கம்**

### 9.2.1 கோல்புறூக் கமரன் சீர்திருத்தம்.

- இலங்கையின் வருமானத்தைவிட செலவினங்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றமையால் செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கான மாற்று வழிமுறைகளை முன்வைப்பதற்கு கோல்புறூக் - கமரூன் ஆணைக்குழுவை **நியமித்தல்**.
- இந்த சீர்திருத்தத்தின் பல விடயங்கள் இலங்கையின் பாரளுமன்ற **அரசியல் முறை** வரை வளர்ச்சி பெறக் காரணமாக இருந்துள்ளன.

அதாவது

1. ஒற்றை ஆட்சி முறையொன்றை ஏற்படுத்தல்.

- கரையோர பிரதேசம் மற்றும் மலையகப் பிரதேசம் என இதுவரை வெவ்வேறாக ஆட்சி செய்யப்பட்ட பிரதேசங்களை ஒன்றிணைத்து முழு நாட்டைப் பொதுவான ஒரு ஆட்சி முறைக்கு கொண்டுவரல்.
- அதன்படி முழுத்தீவும் மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்திய என்ற அடிப்படையில் 05 பிரதான மாகாணங்கள்- பிரிவுகளாகப் பிரிக்கப்படல்.
- இவ்வாறு கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தங்களின் கீழ் இலங்கை ஒருங்கிணைக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை வரை வளர்ச்சி பெற்றதற்கான முக்கியத்துவ ஆரம்ப படிமுறையாதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் ஐந்து மாகாணங்கள்




2. சட்டவாக்க சபை மற்றும் சட்ட நிருபண சபை என இரு மன்றங்கள் அமைக்கப்படல்.

- சட்ட நிருவாக சபை
  - ஆட்சி, நிதி தொடர்பான நடவடிக்கைகள் இச்சபைகளினூடாக நிறைவேற்றிக் கொள்ளப்படல்.
  - இதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.
  - இவ்வுத்தியோகத்தர்கள் உத்தியோக சார்புள்ளோர் மற்றும் உத்தியோக சார்பற்றோர் என இரு பிரிவினராக காணப்பட்டமை.
  - உத்தியோக சார்புள்ளோரின் எண்ணிக்கை 09 ஆகும். அத்துடன் அவர்கள் பதவிவழி நியமிக்கப்பட்ட அரச அலுவலர்களாவர்.
  - உத்தியோக சார்பற்றோரின் எண்ணிக்கை 06 பேராவர். இவர்கள் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிரதிநிதிகளாக ஆளுனரால் நியமிக்கப்பட்டனர். அதன்படி ஐரோப்பியரின் பிரதிநிதிகள் மூன்று பேரும் பறங்கியர் ஒருவரும், சிங்களவர் ஒருவரும் தமிழர் ஒருவரும் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சட்ட நிருபண சபை (சட்ட நிருவாக கழகம்)
- சட்டத்தை செயற்படுத்துவதற்காக இக் கழகம் உருவாக்கப்பட்டது.
- இதில் 06 அங்கத்தவர்கள் அங்கத்துவம் வகித்தனர்.
- இக்கழகத்தில் நாட்டின் மிக உயர்மட்ட சிவில், இராணுவ அதிகாரிகள் அங்கத்தவர்களாக இருந்தனர்.
- ஆளுனருக்கிருந்த எல்லையற்ற அதிகாரத்தை குறைப்பதற்கே சட்டவாக்கக் கழகங்களும் சட்ட நிருவாகக் கழகங்களும் அமைக்கப்பட்டாலும் அவ்விரு கழகங்களுக்கும் ஆளுநரே தலைவராக இருந்ததுடன் அவரின் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.
- மேலும் இலங்கை பாராளுமன்றமுறைவரை வளர்ச்சி பெறுவதில் கோல்புறூக் சீர்திருத்தம் மூலம் செயற்படுத்தப்பட்ட சட்டவாக்கக் கழகம், மற்றும் சட்ட நிருவாகக் கழகம் என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களாகும்.

3. இனரீதியான பிரதிநிதித்துவ முறை.
- சட்டவாக்கக் கழகத்திற்கு இனவாரியான பிரதிநிதி முறையை அடிப்படையாகக் கொண்டு உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- அதன் அடிப்படையில் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் 06 பேரை நியமிக்கும் போது ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த 03 அங்கத்தவர்களையும் பறங்கியர், சிங்களவர், தமிழர் பிரதிநிதிகளாக ஒரு இனத்திற்கு ஒரு அங்கத்தவர் என மேலும் 3 அங்கத்தினரும் நியமிக்கப்படல்.
- இம் மக்கள் பிரதிநிதித்துவத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் கோல்புறூக் மூலம் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மலைநாட்டு சிங்களவர் மற்றும் முஸ்லிம் என்றவாறு அங்கத்தவர்கள் இருவர் நியமிக்கப்பட்டனர். இதனால் முக்கியமாக சிங்கள மக்கள் மலைநாட்டு மற்றும் தாழ்நாட்டு சிங்களவர்கள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர்.
- கோல்புறூக் சீர்திருத்தம் மூலம் முன்வைக்கப்பட்ட இனரீதியான பிரதிநிதித்துவ முறையானது, தற்காலத்தில் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில் அடிப்படையான ஒரு பலவீனமுறையாகக் காணப்பட்டாலும் பிரதிநிதித்துவ ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் முக்கிய சந்தர்ப்பமாகக் கொள்ளல்.

– ஆளுநர்களின் எல்லையற்ற அதிகாரம் காரணமாக சட்டவாக்கக் கழகத்திற்கு சுதந்திரமாக செயற்பட முடியாதிருத்தல்.
– அதனால் சட்டவாக்கக் கழகத்திற்கு அதிக அதிகாரமும், அரசியல் முறை சீர்திருத்தமும் வேண்டி போராட்டங்களை ஏற்படுத்தியமை.
  – இப் போராட்டங்கள் ஆரம்பத்தில் ஐரோப்பியர்களால் மேற்கொள்ளப்பட்டமை.
  – 19 ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையர் போராட்டங்களில் முன்னின்றனர்.

**குறு - மெகலம் சீர்திருத்தம்.**
– 1910 ம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தம் ஆலோசனைகள் முன்வைத்ததுடன் 1912 லிருந்து செயற்படுத்தப்பட்டது.
– இச்சீர்த்திருத்தத்தினூடாக பாராளுமன்ற முறை வரை அரசியல் வளர்ச்சிக்கு வழிகோலியது.

அவ்வாறெனில்.

1. இலங்கையருக்கு வாக்குரிமை பெற்றுக் கொடுத்தல்.
– முதன் முறையாக சட்டவாக்கக்கழகம் வாக்குரிமை மூலம் உத்தியோக பூர்வமற்ற அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவது அறிமுகப்படுத்தப்பட்டது.
– இலங்கையர் சார்பாக கற்ற இலங்கையர் வாக்குரிமை மூலம் நியமிக்கப்படச் சந்தர்ப்பம் கிடைத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ஆங்கிலம் கற்ற இலங்கை மத்தியதரவகுப்பினர் மட்டும் வாக்குரிமையைப் பெறல்.
– அதன் வீதம் 4% மாத்திரமே.
– பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலங்கையின் வரையறுக்கப்பட்ட வாக்குப் பலத்தால் சட்டவாக்க கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கையவராவார்.
– 3 ஐரோப்பிய பிரதிநிதிகள் ஐரோப்பிய இனத்தின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படல்.

இதனைடிப்படையில் வாக்குரிமையால் அமைச்சர்களைத் தெரிவு செய்யும் முறையில் ஆரம்பமானது,பாராளுமன்ற அரசியல் முறை வரை வளர்ச்சி பெறுவதில் முக்கிய முதற்படியாகும். முதற்படியாகும்.

2. இனவாரியான பிரதிநிதித்துவ முறை மேலும் செயற்படுத்தப்படல்.
- அரசியல் சீர்திருத்தங்களை வேண்டி மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் போது இனவாரியான பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக மாகாண பிரதிநிதித்துவ முறையை வேண்டி நின்றமை மேலும் இனவாரியான பிரதிநிதித்துவ முறை செயற்படுத்தப்பட வழிகோலியது.

– அதன்படி சட்டவாக்கக் கழகத்தில் பிரதேசவாரியான பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டமை.

உதாரணம் : உத்தியோக சார்புள்ள அமைச்சர்கள் - 06
தாழ்நாட்டு சிங்களவர்.
மலைநாட்டு சிங்களவர்
தமிழர்.
முஸ்லிம்.

உத்தியோக சார்பற்றோர் அமைச்சர்கள் - ஐரோப்பியர், பறங்கியர் மற்றும் கற்ற இலங்கையர்.

இதன் சிறப்பம்சம் யாதெனில், இனவாரியான பிரதிநிதித்துவ முறை செயற்பட்டாலும் கற்ற இலங்கையராக பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலங்கையரின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டமை, பிரதேச பிரதிநிதித்துவ முறை நிராகரிக்கப்பட்டமையைக் காட்டுவதாகும்.

3. சட்டவாக்கக் குழுவின் அதிகாரத்தை விரிவுபடுத்தல்.
- உத்தியோக சார்பற்ற அமைச்சர்கள் 04 பேர் வாக்குகளால் நியமிக்கப்படல் காரணமாக அவர்கள் சுதந்திரமாக செயற்பட முடிந்தமை இதனால் கற்ற இலங்கையர்களால் நியமிக்கப்பட்ட பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சுயாதீனமாக செயற்பட முடிந்தமை.
  - இதனால் முன்பை விட உத்தியோக சார்பற்றவர்களின் வினாக்களுக்கு ஆளுநர்கள் செவி மடுக்க வேண்டியேற்பட்டமை.
  - உத்தியோக சார்பற்ற அமைச்சர்கள் உரிமையுடன் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை.
- இவ்வாறு உத்தியோக சார்பற்ற உறுப்பினருக்கு நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக சட்டவாக்கக் கழகம் தேசிய அரசியலில் பிரதான மேடையாகியமை பாராளுமன்ற முறை வரையான பாதைக்கு வழிவகுத்தமை.
- குறூ - மெகலம் சீர்திருத்தத்தின் மூலம் மக்கள் வாக்கு வரையறுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்மையானது பாராளுமன்ற அரசியல் முறையில் சட்டவாஃகக் கழகம் மக்கள் பிரதிநிதிகளின் அமைப்பாக மாற்றம் பெற்ற ஆரம்ப சந்தர்ப்பமாக முக்கியத்துவம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9.2.3 மனிங் யாப்பு முறை சீர்திருத்தம் - 1920.**

- குறூ - மகலம் சீர்திருத்தத்தினூடாக கற்ற இலங்கையர்களின் விருப்பின்படி பொறுப்புடன் கூடிய யாப்பு முறையொன்று கிடைக்காமையால் அவர்களின் போராட்டங்கள் மேலும் தொடரப்பட்டமை.
- போராட்டங்களின் விளைவாக வில்லியம் ஹென்றி மெனிங் ஆளுநர் மூலம் 1920 இல் புதிய யாப்பு முறை சீர்திருத்தம் பெற்றுக் கொடுக்கப்படல்.
- இந்த யாப்பு முறை சீர்திருத்தத்தினூடாக இலங்கை பாராளுமன்ற யாப்பு முறை வரை அரசியல் வளர்ச்சி பெற்றமை.

அவ்வாறெனில்

1. உத்தியோக சார்பற்ற அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை.

(1920)
உறுப்பினர் எண்ணிக்கை (37)

- உத்தியோக சார்புடையோர். (14)
- உத்தியோக சார்பற்றோர். (23)
  - இனவாரியான பிரதிநிதிகள் (03)
    - ஐரோப்பியர் (02)
    - பறங்கியர் (01)
  - பிரதேசவாரியான பிரதிநிதிகள் (11)
    - மேல்மாகாணம் (03)
    - வேறு மாகாணங்களில் ஒருவர் அடிப்படையில் (08)
  - தொழில்வாரியான பிரதிநிதிகள் (02)
    - வர்த்தகக் குழு (01)
    - தாழ்நாட்டு உற்பத்திச் சங்கம் (01)
  - நியமன மூலம் (07)
    - மலைநாட்டு சிங்களவர் (02)
    - முஸ்லிம் (01)
    - இந்தியத் தமிழர் (01)
    - ஆளுநர் விருப்பில் (03)

- உத்தியோக சார்பற்ற அமைச்சர்கள் 23 பேரில் 16 பேர் வாக்குப்பலத்தால் நியமிக்கப்படல்; சட்டவாக்கக் குழுவின் அதிகாரம் சிறியளவில் அல்லது பரந்த அளவில் இடம் பெறல்.
- இவ்வாறான உத்தியோக சார்பற்றோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலும் 14 பேர் மற்றும் உத்தியோக சார்பற்றோர் நியமனமூலம் நியமிக்கப்படும் 07 பேர் கட்சிவாரியாக அநேகமாக ஆளுநரால் நியமிக்கப்படுவதால் பெரும்பான்மையின் பெறுமதி குறைவடைதல்.
- பாரளுமன்ற யாப்பு முறையடிப்படையில் இலங்கை அரசியல் வளர்ச்சி பெறும் போது உத்தியோக சார்பற்ற அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட முடிந்தமை முக்கிய சந்தர்ப்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரதேசவாரியான வாக்குத்தொகுதிமுறை அறிமுகப்படுத்தல்.
ஆரம்பத்திலிருந்தே கற்ற இலங்கையர்களின போராட்டங்கள் இன அடிப்படையான பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக பிரதேசவாரியான வாக்குத்தொகுதி முறை அறிமுகப்படுத்தப்படல்.

- மனிங் சீர்திருத்தத்தினூடாக இம்முறையை அறிமுகஞ் செய்தல்.
- அதன்படி மேல் மாகாணத்திற்கு அமைச்சர்கள் மூவரும் ஏனைய எட்டு மாகாணங்களுக்குமாக ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு அங்கத்தவர் எனும் அடிப்படையில் அமைச்சர்கள் 08 பேரும் நியமிக்கப்படல்.
- வாக்குத் தொகுதியுள் குறிப்பிட்ட ஆண்டுகள் வசித்துள்ள இலங்கை ஆண்களுக்கு வாக்குரிமை கிடைக்கப் பெறல்.
- அதே போன்று ஆங்கிலம் கற்றவர்களுக்குப் பதிலாக சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சியுள்ளவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தமை. முன்பிருந்ததை விட ஓரளவுக்கு வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டமை.
- இவ்வாறான பிரதேச வாரியான பிரதிநிதித்துவ முறையொன்றை அறிமுகப்படுத்தியமை பாராளுமன்ற யாப்பு முறை வரை வளர்ச்சி பெறுவதில் முக்கிய படிமுறையாகக் காணப்பட்டமை.

**3. இனவாரியான பிரதிநிதித்துவ முறை மேலும் செயற்படுத்தப்படுகின்றமை.**

- இனவாரியான பிரதிநிதித்துவத்தின்படி வாக்கு மூலம் மூன்று பேரும் மற்றும் பெயர்ப்பட்டியியலிலிருந்தும் அமைச்சர்கள் தெரிவு செய்யப்படல்.
- இதனால் அனைத்து மக்கள் பிரிவினர்களும் பிரதிநிதித்துவப்படும் வகையில் அமைச்சர் களைத் தெரிவு செய்ய முடிந்தமை.

**9.2.4. மனிங் டெவன்சயர் யாப்புச் சீர்திருத்தம் - 1924.**

- மனிங் ஆளுநரின் காலத்தில் இனவாதம் காணப்பட்டமையால் சிங்கள , தமிழ் மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டமை.
- சிங்களம் மற்றும் தமிழ் இரு சாராராலும் வெவ்வேறாக யாப்பு முறை சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்படல்.

எவ்வாறெனினும் இந்த யாப்பு முறை, பாராளுமன்ற முறை வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக அமைந்தமை.
அவ்வாறெனின்.

**1. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரம் விரிவு பெறல்.**

- சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- சட்டவாக்கக் கழகத்தில் பெரும்பான்மை பலத்தால் நியமித்துக் கொள்ள முடிகின்றமை.
- சட்டவாக்கக் கழகத்தின் உப கழகத்தின் வாக்கு மூலம் தெரிவு செய்து கொள்ள வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல்.
- விசேடமான சந்தர்ப்பங்களைத் தவிர இக்கழகத்தின் செயற்பாடுகள் உப தலைவர் மூலம் நிறைவேற்றப்படல்.
- கருத்து வேறுபாடுகளின் போது ஆளுநரின் செல்வாக்கை குறைத்துக் கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட வழிமுறையாக இருத்தல்.
- எனினும் ஆளுநருக்கு அந்நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் உரிமை காணப்படல்.
- அத்துடன் சட்டவாக்கக் கழகத்தின் நடவடிக்கைகளின் போது ஒரு சில அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றமை பாராளுமன்ற முறையொன்று வரையில் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தமை.

**2. இனவாரியான பரதிநிதித்துவமுறை மேலும் செயற்படுத்தப்படல்.**

- சிறுபான்மையினரின் பிரதிநிதிகளுக்காக இனவாரியான பிரதிநிதித்துவத்தை கொண்டு நடாத்தல்.

  உதாரணமாக மேல்மாகாணத்துக்கான இலங்கைத் தமிழர் பிரதிநிதி ஒருவரை பெற்றுக் கொடுத்தமை, அதற்குப்புறம்பாக ஐரோப்பியர், பறங்கியர், முஸ்லிம், இந்தியத் தமிழர் போன்றோருக்காக இப்பிரதிநிதித்துவத்தை செயற்படுத்திச் செல்லல்.

**3. நிருவாக சபைக்கு மூன்று இலங்கையர்களை நியமித்தல்.**

- இதன்படி இலங்கையர்க்கு நிர்வாக நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு முடிந்தமை ஒரு பெரும் வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9.2.5. டொனமூர் சீர்திருத்தம் - 1931

- கல்வி கற்ற மத்திய வகுப்பினரால் எதிர்பார்க்கப்பட்டவை இலங்கை யாப்பு முறைச் சீர்திருத்தம் 1924 இனால் நிறைவேற்றப்படாமையால் அவர்கள் மேன்மேலும் கிளர்ச்சியில் ஈடுபடல்
- 1924 சீர்திருத்தம் செயற்படுத்தும் போது இடம்பெற்ற இடர்ப்பாடுகள் காரணமாக இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுனருமே அது திருத்தியமைக்கப் பட வேண்டுமென்ற அபிப்பிராயம் கொண்டிருந்தமை.
- இலங்கைக்கு மிகப் பொருத்தமான யாப்பு முறையொன்றைச் சிபார்சு செய்யும் பொருட்டு 1927 இல் டொனமூர் பிரபுவின் தலைமையின் கீழ் ஆணைக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை.
- இவ்வாணைக்குழுவின் சிபாரிசின்படி 1931 இல் புதிய யாப்பு முறை செயற்படுத்தப் படல்.
- இந்த யாப்பு முறை மூலம் செயற்படுத்தப்படும் சீர்திருத்தம் பெரும்பாலும் இலங்கையின் பாராளுமன்ற அரசியல்முறை வரை வளர்ச்சி பெறுவதற்கு வழிகோலியது

அவ்வாறெனின்,

அரச சபை நிறுவப்பட்டமை

முன்னர் இருந்த சட்டவாக்கக் கழகம் மற்றும் சட்டவாக்க நிருவாக சபைக்கும் பதிலாக அரச சபை நிறுவப்படல்.

அதன்படி நிருவாக மற்றும் சட்டவாக்க சபைகளுக்கிடையில் காணப்பட்ட, நிதி மற்றும் நீதிச் செயற்பாடுகளைக் கொண்டு நடத்தும் அதிகாரம் அரச சபைக்கு ஒப்படைத்தல்.

அரச சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 61 ஆகும்.

அரசக் கழகம் - 1931

| பிரதேச வாரியான தேர்தல் தொகுதியிலிருந்து (50) | அதிகாரிகள் 03 அரச செயலாளர்கள் (03) | ஆளுனரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் (08) |
|---|---|---|

- அரச கழகத்திற்கு 50 பேர் பிரதேச தேர்தல் தொகுதி வாரியாக சர்வசன வாக்குரிமை மூலமும் அதிகாரிகள் மூவர் குடியேற்ற நாட்டுச் செயலாளரின் சிபார்சின்படி ஆளுனராலும் 08 பேர் ஆளுனரால் நியமிக்கப்பட்டவர்களும் இருந்தனர்.
- நிர்வாகக் குழுச்சபை முறை அறிமுகப்படுத்தல்.
- பாராளுமன்ற முறையில் காணப்பட வேண்டிய நிர்வாக மற்றும் சட்ட அதிகாரங்கள் ஒரு அமைப்பின் கீழ் செயற்படல் ஒரு விசேட பண்பாகும்.

2. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.

- முன்னைய யாப்புக்களின்படி வரையறுக்கப்பட்ட வாக்குரிமை காணப்பட்டமை.
- அதாவது கல்வித்தகைமை, சொத்து, ஆண் பெண் என்பவற்றைக் கொண்டே வாக்குரிமைக்கான தகுதி கிடைக்கப் பெறல்.
- டொனமூர் யாப்பு முறையின் கீழ் இந்நாட்டில் வாழும் 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படல்.
- வெற்றிகரமான பாராளுமன்ற முறையொன்றின் பிரதான அம்சமான மக்கள், தாம் விரும்பிய பிரதிநிதி யொருவரை தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் டொனமூர் சீர்திருத்தம் மூலம் கிடைக்கப்பெற்றமை இதன் முக்கிய அம்சமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் விரிவாக்கப்படல்.

- டொனமூர் சீர்திருத்தம் மூலம் அமைச்சர்கள் பெரும்பாலானோரின் தெரிவு பிரதேசவாரி பிரதிநிதித்துவ அடிப்படையிலாகும்.

  உதாரணம் : 61 உறுப்பினர்களில் 50 பேர் தேர்தற்றொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்படல்.
- சர்வசன வாக்குரிமை கிடைக்கப் பெற்றமை; பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் விரிவுபடுத்தல் இலகுவாக்கப்பட்டமை

4. இனவாரியான பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டமை

- இனங்களுக்கிடையிலான குரோதம், சந்தேகம் என்பவற்றை வளர்த்துச் செல்லும் இனரீதியான பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு பிரதேச வாரியான பிரதிநிதித்துவ முறை கொண்டுவரப்பட்டமை.

– இனவாரியான பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு பிரதேச ரீதியான பிரதிநிதித்துவ முறை விரிவுபடுத்துவதன் மூலம் பாராளுமன்ற முறைக்கு அவசியமான பொருத்தமான பிரதிநிதித்துவ முறையொன்று செயற்படுத்தப்படல் இதன் முக்கிய அம்சமாகும்.

5. நிர்வாக குழு முறை மூலம் நாட்டுத்தலைவர்களுக்கு அதிகளவிலான அதிகாரம் கிடைக்கப்பெற்றமை.

- அரச அதிகாரிகள் மூவரைத் தவிர அரச சபையின் உறுப்பினர்கள் 58 பேரும் 7 நிர்வாகக் குழுக்களுக்கிடையில் பிரிக்கப்பட்டிருந்தனர்.
- ஒவ்வொரு நிர்வாகக் குழுவினதும் தலைவராக அக்குழு உறுப்பினர்களில் ஒருவர் வாக்கு மூலம் நியமிக்கப்படல்.
- அவர் குறிப்பிட்ட துறை சார்ந்த அமைச்சராதல்.
- அமைச்சரவையொன்றை ஏற்படுத்தியதன் மூலம் கபினட் முறை தொடர்பான பயிற்சியைப் பெறுவதற்கு அதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றமை.
- நிர்வாகக் குழுக்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் அனைவரும் இலங்கையராக இருந்தமை.
- இதன் படி தேசிய தலைவர்களுக்கு கூடிய அதிகாரம் கிடைக்கப் பெற்றமை.
- ஆளுநர்களின் அதிகாரம் குறைக்கப்பட்டமை.

– இவ்வாறாக டொனமூர் யாப்பு முறையின் கீழ் தேசிய பிரதிநிதிகளுக்கு அரச ஆட்சி தொடர்பாக பாரியளவில் அதிகாரம் வழங்கப்பட்டதுடன் பொறுப்புக்களும் ஒப்படைக்கப் பட்டதனூடாக, அனுபவம் பாராளுமன்ற அரசியல் முறை வரை எடுத்துச் செல்ல வழியேற்பட்டது.

### 9.2.6. சோல்பரி யாப்புச்சீர்திருத்தம்.

– டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் திருப்தி காணாத தேசிய தலைவர்கள் மேலும் அதிகாரங்களை கேட்டு புதிய யாப்பு முறைச் சீர்திருத்தத்திற்கான கிளர்ச்சியில் ஈடுபட்டமை.

– ஆளுநர்கள் புதிய யாப்புச் சீர்திருத்தத்திற்கு இணக்கம் காட்டியமை.

– 1939 2ம் உலகயுத்தம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக புதிய யாப்பு முறை தொடர்பான நடவடிக்கைகள் தாமதம் அடைந்தமை.

– போர் முடிந்ததன் பின்னர் 1944ல் யாப்பு முறை சீர்திருத்தம் தொடர்பாக சிபாரிசு செய்வதற்காக சோல்பரி பிரபுவின் தலைமையின் கீழ் ஆணைக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டமை.

– இவ்வாணைக்குழு தனது சீர்திருத்தத்திற்கான இலங்கை அமைச்சரவையின் தலைமையில் சேர் அய்வர் ஜெனிங்ஸ் மூலம் புதிய யாப்பு முறை சீர்திருத்தம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை கவனத்திற் கொள்ளல்.
– சோல்பரி ஆணைக்குழு அறிக்கை 1945ல் உருவாகியதுடன் அது 1947 லிருந்து அமுல் செய்யப்படல்.
– சோல்பரி சீர்திருத்தம் மூலம் இதுவரை பாராளுமன்ற அரசியல் முறை வரை இட்டுச் செல்வதற்கும் தாபிப்பதற்கும் முடிந்தமை.

1. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்ற முறை உருவாக்கல்.
   அவ்விரு சபைகளாவன.
   • மக்கள் பிரதிநிதிகள் சபை (கீழ் சபை)
   • மேல் சபை அல்லது செனெற் சபை

• மக்கள் பிரதிநிதி சபையின் உறுப்பினர் 101 பேரைக் கொண்டது.
• இவர்களுள் 95 பேர் சர்வசன வாக்குப் பலத்தால் கட்சி அடிப்படையில் தொகுதி வாரியாக தெரிவு செய்யப்பட்டனர். எஞ்சிய ஆறு பேரும் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டனர்.
• இச்சபையின் பதவிக்கால எல்லை 05 ஆண்டுகளாக இருந்தமை.

மக்கள் பிரதிநிதிகள் சபை
(101)

| சர்வசன வாக்குரிமை மூலம் (95) | சிறுபான்மையினத்தவர் சமய அடிப்படையில் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படல் (06) |
|---|---|

**மேல் சபை / செனெற்**
மேல் சபை அல்லது செனெற் சபை பிரதிநிதிகள் 30 பேரைக் கொண்டிருந்தது. இவர்களுள் 15 பேர் பிரதிநிதி சபையின் வாக்கு மூலமும் ஏனைய 15 பேரும் பிரதமமந்திரியின் சிபார்சின் படி ஆளுநர் நாயத்தினாலும் நியமிக்கப்பட்டனர்.

மேல் சபை

| பிரதம மந்திரியின் சிபார்சின் படி ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படல் - 15 | பிரதநிதிகள் சபை மூலம் நியமிக்கப்படல் - 15 |
|---|---|

சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய சட்டவாக்கங்கள் தொடர்பான பொருத்தப்பாட்டைக் கண்டறிதல், அறிவு ரீதியான விவாதங்களை நடாத்துதல் மற்றும் நாட்டின் சிறந்த அறிவாளிகளை சட்டவாக்க விடயங்களில் பங்குபற்றச் செய்தல் போன்றன மேல் சபையை அமைத்ததன் நோக்கங்களாக இருந்தமை.

**ஆளுநர் பதவி**
– சட்டவாக்கக் கழகம் மூலங்களுக்கு பிரித்தானிய முடியின் சார்பில் அங்கீகாரமளித்தல்
– சட்ட மூலமொன்றை அங்கீகரிப்பதற்கான அதிகாரம்
– எனினும் யாப்பு மூலம் ஆளுநரின் அதிகாரம் வரையறுக்கப்படதாக காணப்படுகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை. (கெபினட்)

- நிர்வாக அலுவல்களை கொண்டு நடாத்துவதற்காக பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை உருவாக்கல்.
- பாராளுமன்றத்தின் பெரும்பாலான அமைச்சர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதம மந்திரியாக ஆளுநர் நாயகத்தினால் நியமிக்கப்படல்.
- பிரதமரின் விருப்பின்படி ஆளுநர் மூலம் அமைச்சரவை உறுப்பினர்கள் அமைச்சரவைக்குத் தெரிவு செய்யபப்பட்டார்கள்.
- அமைச்சர்கள் பிரதிநிதி சபை மற்றும் மேல் சபையிலிருந்து தெரிவு செய்யப்படல்.
- மேல்சபையால் தெரிவு செய்யப்படல்
- பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் பதவி பிரதமரால் வகிக்கப்பட வேண்டுமென விதிக்கப்படல்.
- பாரளுமன்ற நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக வகைகூற அமைச்சரவை குழு கடமைப்பட்டிருத்தல்.
- சோல்பரி யாப்பு முறையின் கீழ் பாராளுமன்றத்திற்கான தேர்தல் முதன் முறையாக 1947 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.
- 1948 பெப்ரவாரி 4ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததுடன் சோல்பரி யாப்பு முறையின் விதந்துரைப்புக்கள் மாற்றம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.2.1

தேர்ச்சி மட்டம் : 9.2.1 தேசியத் தலைவர்களின் துணிச்சல், அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் ஆட்சி நிர்வாகம் பாராளுமன்ற ஆட்சி முறை வரை வளர்ச்சியடைந்த விதத்தை ஆய்வு செய்வதன் ஊடாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை விளங்கிக் கொள்வார்.

செயற்பாடு : இலங்கைப் பாராளுமன்றத்தின் ஆரம்ப கொடி கோல்புறூக் கமரூன் சீர்திருத்தத் தொடர்பாக கேட்டறிவோம்

நேரம் : 120 நிமிடம்.

தரவுள்ளீடுகள் : இணைப்பு 9.2.1. - பாராளுமன்றத்தின் உருவப்படம்
இணைப்பு 9.2.2. - விடயப்பத்திரம்

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு.**

**படி 9.2.1.** இணைப்பு 9.2.1. படத்தை வகுப்பில் முன்வைத்தல்.

- இது என்ன?
- இங்கு இடம் பெறும் விடயம் என்ன?

போன்ற வினாக்களை மாணவரிடத்தில் கேட்டு பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் வகையில் மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- அரச செலவினத்தைக் குறைத்துக் கொள்வது தொடர்பான வழிமுறைகளை தேடியறிய கோல்புறூக் - கமரூன் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தமை.
- இவ்வாணைக்குழுவின் யாப்பு முறை நிர்வாக மற்றும் நீதித்துறை தொடர்பாக சீர்திருத்தங்கள் பற்றி ஆலோசனை செய்தமை.
- இந்த சீர்திருத்தங்கள் பல இலங்கையின் பாராளுமன்ற அரசியல் முறை வரை வளர்ச்சி பெறுவதில் பங்களிப்பு செய்தமை.

(15 நிமிடங்கள்)

**படி 9.2.1.2.**

- வகுப்பை பொருத்தமான முறையில் குழுக்களாக்கவும். ஒவ்வொரு குழுவுக்கும் அதி கூடிய மாணவர் எண்ணிக்கை 06.
- இணைப்பை 9.2.1.2. இல் உள்ள விடயப்பத்திரத்தில் ஒரு குழுவுக்கு ஒரு விடயப்பத்திரம் என்ற அடிப்படையில் குழுக்களுக்கு பகிர்ந்தளிக்க.
- வகுப்பில் உள்ள குழுக்களின் எண்ணிக்கை அதிகமெனின் இரண்டு தொகுதிகளாக்கி ஒவ்வொரு தலைப்பையும் வழங்கவும்.
- மாணவர் செயற்பாட்டை செய்வதற்கு தேவையான வழிகாட்டலை வழங்கவும்.

(25 நிமிடங்கள்)

**படி 9.2.1.3.**

- குழுக்கள் மூலம் தமக்கு கிடைத்த தலைப்பு தொடர்பாக வகுப்பு முன்னிலையில் கதை சொல்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கவும்.
- மாணவர்களால் முன்வைக்கப்படும் விடயங்களில் முக்கியமான விடயங்களை கரும்பலகையில் குறிப்பிடுக.
- மாணவர்கள் முன்வைத்த விடயங்களின்படி பலம் பலவீனங்களை இனங்காண்க.
- பலம் பலவீனங்களை சரிசெய்து அவற்றை கரும்பலகையில் குறிப்பிடுக.
- தேவையான முக்கிய தகவல்களை மாணவர்கள் குறிப்புப் புத்தகங்களில் எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களிடத்தில் வெளிப்படும் சிறந்த கருத்துக்களுக்கு மதிப்பளித்து பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் பாடத்தைக் கலந்துரையாடுக.

<table><tr><td>

- கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் இந்நாட்டின் பாராளுமன்ற வரலாற்றில் மிகவும் முக்கியம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும்.
- கோல்புறூக் - கமரூன் சீர்திருத்த அம்சங்கள் பலவற்றில் பாராளுமன்ற யாப்பு முறை ஒன்றாகச் செயற்பட்டமை.<br>அவ்வாறெனின் சட்டவாக்கக்கழகம் மற்றும் நிர்வாகக்கழகம் என்பன உருவாக்கப்பட்டமை.
- சட்டவாக்கக்கழகம் நிதி விவகாரங்களுக்கும் நிர்வாகக்கழகம் அதனைச் செயற்படுத்துவதற்கும் என உருவாக்கப்பட்டமை.
- எனினும் ஆளுநருக்கு இருந்த எல்லையற்ற அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.
- எனினும் பாராளுமன்ற முறைக்கு இச்சட்டவாக்கக் கழகம், நிர்வாகக் கழக முறைகள் காரணமாக இருந்தமை.
- இனவாரியான பிரதிநிதித்துவ முறையும் கோல்புறூக் சீர்திருத்தத்துடன் தொடர்புடையது.
- அது அந்நாடு பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்படவும் இனங்களுக்கிடையில் இன்று கூட பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தமை.
- பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையாக இனவாரியான முறை முக்கியம் பெற்றமை.
- நாட்டை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வருவதனூடாக பாராளுமன்ற முறைக்குத் தேவையான ஒரே நாட்டை கட்டியெழுப்ப முடிந்தமை.

</td></tr></table>

(80 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் தொடர்பாக விளக்கமளிப்பார்.
- கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் மூலம் பாராளுமன்றத்திற்கு பொருத்தமான ஆலோசனைகள் தொடர்பாக விபரிப்பார்.
- தனது உரிமைகளுக்காகப் போராடிய தேசியத்தலைவர்களை மதிப்பார்.
- குழுச் செயற்பாடு தொடர்பாக ஒத்துழைப்பைக் காட்டுவார்.
- வகுப்பின் முன்னிலையில் கதை கூறுவதற்கு முன்வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.2.1.1



பாராளுமன்றம்

இணைப்பு 9.2.1.2.

விடயப் பத்திரம் 1

உங்கள் குழுக்களுக்கு வழங்கப்படுவது கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தம் ஆகும்.
1. இலங்கையை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரல் பாராளுமன்ற அரசியல் முறை வரை செல்லும் பாதைக்கு இட்டுச் சென்ற முறை தொடர்பாக வகுப்பில் கதையொன்றை நிகழ்த்துங்கள்.

- குழுவின் அனைவரும் ஒன்று சேர்ந்து பொருத்தமான விடயங்களை சேகரித்து பொருத்தமான விதத்தில் கதையை வகுப்பில் முன்வையுங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் தேசப்படங்களை பயன்படுத்திக் கொள்ளவும்.

விடயப் பத்திரம் II

உங்களுக்கு ஒப்படைக்கப்படுவது இலங்கைப் பாராளுமன்ற அரசியல் முறை வளர்ச்சியில் கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தினூடாக சட்டவாக்கக்கழக மற்றும் நிர்வாகக் கழகங்களை ஏற்படுத்தல் எவ்வளவுக்கு பயனுள்ளதாயமையும் போன்றன தொடர்பாக வகுப்பில் உரையாடல் ஒன்றை மேற்கொள்ளுதலாகும்.

- இங்கு குழுக்களின் அனைத்து மாணவர்களும் பங்குகொண்டு தயாரியுங்கள்.
- தயார் செய்யப்பட்ட கதையை பொருத்தமான முறையில் வகுப்பில் முன்வையுங்கள்.

விடயப்பத்திரம் III

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறையொன்று உருவாவதற்கு கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தினூடாக.

"இன வாரியான பிரதிநிதித்துவ முறை" எந்தளவுக்கு காரணமாக இருந்தது என்ற உரையாடலை தயார் செய்து வகுப்பில் முன்வையுங்கள்.

- இவ்வுரையாடலை தயார் செய்து கொள்வதற்கு குழுவில் அனைவருமே பங்கு கொள்ளவும்.
- பொருத்தமான முறையில் உரையாடலை வகுப்பில் முன்வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.2.2

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தை பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார். |
| தேர்ச்சி மட்டம் | : | 9.2.1 தேசியத் தலைவர்களின் துணிச்சல், அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் ஆட்சி நிர்வாகம் பாராளுமன்ற ஆட்சி முறை வரை வளர்ச்சியடைந்த விதத்தை ஆய்வு செய்வதன் ஊடாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை விளங்கிக் கொள்வார். |
| செயற்பாடு | : | இலங்கைக்கு வாக்குரிமையைப் பெற்றுத்தந்த மக்கலம் சீர்திருத்தத்தைப் பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 80 நிமிடங்கள். |
| தர உள்ளீடுக்ள | : | இணைப்பு 9.2.2.1 - வாக்களிக்கும் காட்சி.<br>இணைப்பு 9.2.2.2. - விடயப் பத்திரம்.<br>இணைப்பு 9.2.2.3 - ஆசிரியர் அறிவுரைப்புப் பத்திரம். |

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 9.2.1. : இணைப்பு 9.2.2.1 படத்தை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

- தேர்தல் என்பது யாது என்பதை வகுப்பில் முன்வையுங்கள்.
- வாக்கை நாம் ஏன் பயன்படுத்த வேண்டும் போன்ற வினாக்களை மாணவரிடத்தில் வினவி பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- கோல்புறூக் யாப்பு முறையிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு மக்கலம் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டமை.
- மக்கலம் யாப்பு சீர்திருத்தம் மூலம் இலங்கையருக்கு வாக்குரிமை கிடைக்கப் பெற்றமை.
- அத்துடன் இச் சீர்திருத்தத்தினூடாக இனவாரியான பிரதிநிதித்துவமுறை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டமை.
- பிரதிநிதிகள் தெரிவு செய்யும் ஒரு முறையாக இம்முறை செயற்படுத்தப்பட்டாலும் அது இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை இல்லாதொழிக்கச் செய்யும் வழிமுறையாக இருந்தமை.
- இச்சீர்திருத்தத்தினூடாக சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் விரிவு படுத்தப் பட்டமை.
- இவ்வாறான சீர்திருத்தங்கள் இலங்கையின் பாராளுமன்ற அரசியல் முறை வரை வளர்ச்சி பெற்றுச் செல்லும் பாதைக்கு வழியேற்படுத்தியது.

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 9.2.2.2

- வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்க.(ஒரு குழுவுக்கு அதி கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 5 அல்லது 6 ஆகும் வரையில்)
- ஒவ்வொரு குழுவுக்கும் விடயப் பத்திரங்களை பெற்றுக் கொடுக்கவும்.
- குழுச்செயற்பாடுகளின் போது மாணவர்களுக்கு அவசியப்படும் வேளையில் ஆலோசனை வழங்கவும்

(25 நிமிடங்கள்)

படி 9.2.2.3.

- குழுக்களின் பலம், பலவீனங்களை இனங்காண்க.
- குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிடுவதோடு கரும்பலகையில் உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- அவ்வட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்களின் குறைபாடுகள் தொடர்பாக அவதானத்தைச் செலுத்துவதுடன் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் பாடத்தைப் பகுப்பாய்வு செய்க.

- 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகும் போது சுதேச மக்கள் கூடிய அதிகாரத்தை வேண்டி கிளர்ச்சி செய்தமை.
- கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களில் காணப்படும் குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு குரு- மக்கலம் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டமை.
- 1910 ஆம் ஆண்டில் யாப்புமுறை சீர்திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டமை.
- 1912 இல் அவ்வாலோசனைகள் செயற்படுத்தப்பட்டமை
- குரு - மக்கலம் சீர்திருத்தங்களில் இலங்கை பாராளுமன்ற ஆட்சி முறைக்கு வழியேற்படுத்தியது.
- அவ்வாறெனின் இலங்கையருக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டமை பிரதான நடவடிக்கையாகும்.
- வாக்குப் பலத்தால் உறுப்பினர் தெரிவு ஆரம்பிக்கப்படல் பாராளுமன்ற ஆட்சிமுறை வரைக்கும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டமை.
- அதனூடாக இலங்கையருக்கு தமது விருப்பத்திற்கேற்ப பிரதிநிதிகள் தெரிவு செய்வது தொடர்பாக வாக்கைப்பயன்படுத்துவது பற்றிய விளக்கம் கிடைக்கப் பெற்றமை.
- எனினும் இது வரையறுக்கப்பட்ட ஒரு வாக்குரிமையாகக் காணப்பட்டமை.
- ஆங்கிலம் கற்ற மத்திய மத்திய வகுப்பினருக்கு மாத்திரம் வாக்குரிமை கிடைக்கப் பெற்றமை.
- இனவாரியான பிரதிநிதிகள் முறை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டமை.
- அவ்வாறு இலங்கையர் இனவாரியான முறையை நிராகரித்து வாக்குரிமை மூலம் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை சட்டவாக்க கழகத்திற்கு தெரிவுசெய்தமை.
- இது இலங்கையர்களின் ஒற்றுமையைக் காட்டும் சிறந்ததொரு சந்தர்ப்பமாகக் கருத முடியும்.
- பிரித்தானியர் இலங்கையில் இனவாதப் பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான இனரீதியான பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்தனர்.
- இன்றும் கூட இலங்கையர்களுள் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு அது காரணமாக அமைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறூ - மெக்கலம் சீர்திருத்தத்தினூடாக சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரம் விரிவாக்கப்பட்டமை.
- சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமை.
- வாக்குகள் மூலம் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையால் அவ்வுறுப்பினர்களுக்குச் சட்டவாக்கக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வினாத் தொடுக்க முடிந்தமை.
- எனினும் ஆளுனரின் அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை
- ஆனால் பாராளுமன்ற ஆட்சிமுறைக்குத் தேவையான சில காரணிகள் தொடர்பாக வினாக் கேட்கவும் தேர்தல் தொடர்பான பயிற்சியும் இந்த அதிகார விரிவாக்கத்தினால் ஏற்பட்டது.
- குறூ - மெக்கலம் சீர்திருத்தத்தினூடாக இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிமுறை வரையான பயணத்தை மேற்கொள்ள முடிந்தமை

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

குறூ - மெக்கலம் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டதற்கான காரணங்களை விளக்குவார்.
குறூ - மெக்கலம் சீர்திருத்தங்கள் பெற்றுத் தந்த திருத்தங்களை பெயரிடுவார்.
குறூ - மெக்கலம் சீர்திருத்தங்களினூடாக இலங்கைப் பாராளுமனற ஆட்சிமுறை வரை வளர்ச்சியடைவதற்கு காரணமாக இருந்த சீர்திருத்தங்களை விளக்குவார்.
குழுச் செயற்பாட்டுக்கான ஒத்துழைப்பைக்காட்டுவார்.
தனது குழுக்களை வழிநடத்துவதோடு செயற்பாட்டை வெற்றிகரமாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுப்பார்.

**இணைப்பு 9.2.2.1**



வாக்களித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.2.2.2

## விடயப் பத்திரம்

குழு 1

உங்கள் குழுவிற்குப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

குறூ - மக்கலம் சீர்திருத்தத்தினூடாக இலங்கையருக்கு வாக்குரிமை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வகையில் பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் தகவல்களைச் சேகரிக்க.

1 வாக்குரிமையின் தன்மை. (யாருக்குக் கிடைத்தது)

2 வரையறுக்கப்பட்ட வாக்குரிமை பெற்றுக்கொடுப்பதற்கான காரணம்

3 இலங்கையருக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுத்தல் பாராளுமன்ற அரசியல் முறைக்கு வழிகோலிய விதம்.

- திரட்டப்பட்ட தகவல்களை கரும்பலகையில் உள்ள அட்டவணையில் குறிப்பிடுக.
- குழுக்களில் அனைவரினதும் உதவியைப் பெற்றுக்கொள்ளவும்.

குழு 2

உங்கள் குழுவுக்குப் பின்வரும் தலைப்புக்களில் தகவல் திரட்டுமாறு ஒப்படை வழங்கப்பட்டுள்ளது.

குறூ - மக்கலம் சீர்திருத்தத்தினூடாக இனவாரியான பிரதிநிதித்துவ முறை தொடர்ந்தும் செயற்பட்ட முறை தொடர்பாக தகவல் திரட்டுக.

1 இனவாரியான பிரதிநிதித்துவ முறை என்றால் என்ன?

2 பிரித்தானியர் இனவாரியான பிரதிநிதித்துவ முறையை அறிமுகப்படுத்தியது ஏன்?

3 இனவாரியான பிரதிநிதித்துவ முறையினூடாக பாராளுமன்ற அரசியல் முறைக்கு கிடைத்த அனுகூலம் என்ன?

- திரட்டப்பட்ட தகவல்களை கரும்பலகையில் உள்ள அட்டவணையில் குறிப்பிடுக.
- குழுக்களில் அனைவரினதும் உதவியைப் பெற்றுக்கொள்ளவும்.

குழு 3

உங்கள் குழுவிற்குப் பின்வரும் தலைப்புகள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

1 குறூ- மக்கலம் சீர்திருத்தத்தினூடாக சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் விரிவு படுத்தப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்களின் அடிப்படையில் தகவல் திரட்டுக.

2 சட்டவாக்கக் கழகத்திற்குள்ள அதிகாரங்கள் எவை?

3 குறூ- மக்கலம் சீர்திருத்தம் மூலம் சட்டவாக்கக் கழகத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரம் எவை?

4 சட்டவாக்கக் கழகத்தில் குறூ - மக்கலம் சீர்திருத்தத்தினூடாக அதிகரிக்கப்பட்ட அதிகாரம் பாராளுமன்ற அரசியல் முறை வரை விருத்தி பெறுவதற்கு பங்களித்த விதத்தை விளக்குக.

- திரட்டப்பட்ட தகவல்களை கரும்பலகையில் உள்ள அட்டவணையில் குறிப்பிடுக.
- குழுக்களில் அனைவரினதும் உதவியைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் ஈடுபடுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.2.2.3

**ஆசிரியர் ஆலோசனைப் பத்திரம்.**

- வகுப்பில் மாணவரைக் குழுக்களாக்கும் போது ஒரு குழுவில் 5 அல்லது 6 மாணவர் அடங்குமாறு அமைத்துக் கொள்க.
- குழுக்களின் எண்ணிக்கை மூன்றை விட அதிகரிக்குமெனின் குழு முன்வைத்தலின் போது முதல் குழு முன்வைக்காத விடயங்களை முன்வைக்க இரண்டாம் குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழுக்களின் அனைத்து மாணவரும் செயற்பாட்டில் பங்களிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3 இலங்கையில் அரசியல், சமய மறுமலர்ச்சி

பாடவேளைகள் - 15

**அறிமுகம்:**

ஐரோப்பாவின் கீழைத்தேய வருகையின் நோக்கங்களுள் ஒன்றாக அமைந்தது, தமது சமயத்தை அந்நாடுகளில் பரப்புவதாகும். எனவே இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் அந்த நோக்கத்தில் செயற்பட்டனர். அது மிஷனரிகள் மூலம் இடம்பெற்ற செயற்பாடு ஆகும்.ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் மிஷனரிகளின் தாகக்கம் போன்றே அரசியலும் தாக்கம் அளவுக்கதிகமாக ஏற்பட்டது.

அவ்வாறான செல்வாக்குகளின் தாக்கங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்த இலங்கைத் தலைவர்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி வாய்ந்த இனமாக இலங்கையரை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். சமய சீர்திருத்த இயக்கங்கள், மது ஒழிப்பு இயக்கம், தேசிய போராட்ட இயக்கம் என்பன அந்நிய நாட்டு சக்திகளுக்கு எதிராகப் போராடிய இயக்கங்களாகும். அவ்வியக்கங்கள் பெற்றுத் தந்த உரிமைகளை நாம் இன்றும் அனுபவி க்கின்றோம். அவ்வாறு போராடிய தலைவர்களை மதிப்புடன் நினைவு கூர்ந்து எதிர்கால சந்ததியினருக்காக அந்த உரிமைகளைப் பாதுகாப்பதுடன் இலங்கையின் சமய, அரசியல் மலர்ச்சி பற்றிக் கற்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : இலங்கையில் ஐரோப்பியரின் ஆட்சி காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் பற்றி ஆராய்வதுடன் நமது நாட்டின் தனித்துவத்தைக் பாதுகாத்து பலம் வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வர்.

**தேர்ச்சி மட்டம்** : எமது தனித்துவத்தையும் பாரம்பரியங்களையும் பாதுகாத்துக் கொள் வதற்குத் தேசியத்தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பதுடன் தேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பார்.

**விடய உள்ளடக்கம்** :

9.3. இலங்கையில் அரசியல், சமய மறுமலர்ச்சி.
9.3.1. சமய மறுமலர்ச்சி.

**மிஷனரி நடவடிக்கைகள்.**

- இலங்கை வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர் தமது சமயத்தைப் பரப்புவதற்காக மிஷனரி நடவடிக்கைகளை ஆரம்பித்தமை.
- மிஷனரிகள் சமயத்தைப் பரப்புவதற்கு கல்வியைக் கருவியாகப் பயன்படுத்தியமை.
- ஆங்கிலேயராட்சியின் போது மிஷனரிகளின் செயற்பாடு மிகப் பிரபலமானதாகக் காணப்பட்டது.
- ஆங்கிலேயராட்சியின் போது இந்நாட்டில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள்.
    - ★ லண்டன் மிஷனரி
    - ★ பப்டிஸ்ட் மிஷனரி
    - ★ வெஸ்லியன் மிஷனரி
    - ★ அமெரிக்கன் மிஷனரி
    - ★ சேர்ச் மிஷனரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிஷனரி இயக்கங்களை விரிவாக்குவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்.

★ **அரச அனுசரணை கிடைத்தமை.**

– பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை இந்நாட்டில் காணப்பட்ட போதிலும் மிஷனரிப் பாடசாலைகளுக்கு மட்டுமே அரச உதவிகள் கிடைத்தன.

– மிஷனரிப் பாடசாலைகளில் ஆங்கில மொழிக் கல்வியைப் பெற்றவர்களுக்கு அரசாங்கத் தொழில்களும் சலுகைகளும் கிடைக்கப் பெற்றன.

– மிஷனரிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி காரணமாக நாட்டில் கிறிஸ்தவப் பாடசாலைகள் அதிகரித்தன.

– நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆங்கிலம் மூலமும் கிராமப்புறப் பாடசாலைகளில் தேசிய மொழிகள் மூலமும் கல்வி போதிக்கப்பட்டது.

– மிஷனரிமார் சிங்கள, தமிழ் மொழிகளைக் கற்று சுதேச மக்களுடன் நெருக்கமாவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை.

– கிறிஸ்தவ சமய நூல்களை சிங்கள, தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்த்து, அச்சிட்டு விநியோகித்தமை.

– மிஷனரிகள் சமூக சேவைகளில் ஈடுபட்டமை.

– மிஷனரி இயக்கங்கள் நாட்டின் வெவ்வேறு இடங்களில் பாடசாலைகளை ஆரம்பித்தமை.
  - பெப்டிஸ்ட் மிஷனரி - கொழும்பு
  - வெஸ்லியன் மிஷனரி - வடக்கு, தெற்கு
  - சேர்ச் மிஷனரி - கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி.
  - அமெரிக்கன் மிஷனரி - யாழ்ப்பாணம் உட்பட்ட வட பகுதி

– மிஷனரிகள் சுதேச சமயங்களை விமர்சித்தல்.

– சுதேச சமயங்கள் போதித்த பழக்க வழக்கங்களை இழிவுபடுத்தியமை.

- மேற்படி காரணங்களால் சுதேச சமயங்கள் மிஷனரிகளை எதிர்த்து எழுச்சியுற்றமை.

**பௌத்த சமய மறுமலர்ச்சி** :

- பௌத்த சமய மறுமலர்ச்சியானது வெலிவிட்ட சரணங்கார சங்கராஜ பிக்குவால் ஆரம்பமானது.
- வலானே சித்தார்த்த தேரர், ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர், ரத்மலானே ஸ்ரீ தர்மாலோக தேரர் முதலியோரும் பௌத்த சமய மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தமை.

**பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்**

★ பிரிவெனா கல்வி நிலையங்களை அமைத்தமை.

உ-ம் : ரத்மலான பரமதம்மசேத்திய பிரிவென
மாளிகாகந்த வித்யோதய பிரிவென
பேலியகொட வித்யாலங்கார பிரிவென

★ விவாதங்களை மேற்கொண்டமை.

- பௌத்த தர்மம் மற்றும் பௌத்த நூல்கள், பௌத்த பிக்குகள் கிறிஸ்தவ மிஷனரிமாரின் விமர்சனத்துக்கு உட்பட்டமையால் விவாதங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பம்பரகந்த ரேவத, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல, மிகெட்டுவத்த குணானந்த, பொத்துவில இந்திரஜோதி, வஸ்கடுவே ஸ்ரீ சுபூதி முதலிய கல்வி மேதைகளான பிக்குகள் இவ்விவாதங்களுக்கு உதவினர்.
- நாட்டின் பல்வேறு இடங்களிலும் இவ்விவாதங்கள் நடைபெற்றன.
- இவை பஞ்ச மகா விவாதங்கள் என அழைக்கப்பட்டன.
- இவ்விவாதங்களுள் பாணந்துறை விவாதம் உலகப் புகழ் பெற்றது.
- பாணந்துறை விவாதம் பற்றி கேள்வியுற்ற அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் இலங்கை வந்தார்.
- ஒல்கொட் பௌத்த சமயத்தின் எழுச்சிக்குப் பாரிய பணியாற்றினார்.
  உ-ம் : பிரம்மஞான சங்கத்தை நிறுவுதல்.

– "சரசவி சந்தரெஸ்" எனும் பௌத்த பத்திரிகையை ஆரம்பித்தார்.
– ஞாயிறு தர்ம பாடசாலை ஆரம்பித்தல்.
– வெசாக் பௌர்ணமி தினத்தை அரசவிடுமுறை தினமாகப் பெற்றுக் கொடுத்தல்.
– பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தல்.

- முன்னணியில் திகழ்ந்த பிக்குமாரினதும் சாதாரண மக்களினதும் ஆதரவுடன் ஒல்கொட்டின் தலைமைத்துவத்தில் ஆங்கிலக் கல்வியை வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பிரம்மஞான சங்கம் மேற்படி கல்விச் செயற்பாட்டின் மத்திய நிலையமாக செயற்பட்டது.
- இலங்கையின் முதலாவது பௌத்த ஆங்கிலப் பாடசாலை 1886 இல் கொழும்பில் ஆரம்பமானது. (இன்றைய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி).
- இப்பாடசாலை கலைத் திட்டத்தில் ஆங்கிலம், இலத்தீன், விஞ்ஞானம், கணிதம் முதலிய மிஷனரிப் பாடசாலைப் பாடங்களும் சேர்க்கப்பட்டன.
- 1880 ஆண்டில் இலங்கையில் 40 பௌத்த பாடசாலைகளே காணப்பட்டன. ஆனால் 1900ம் ஆண்டாகும் போது இவ்வெண்ணிக்கை 142 ஆக வளர்ச்சி கண்டது.

★ அநகாரிக தர்மபால அவர்கள் பௌத்த சமயத்துக்குப் பாரிய பணி ஆற்றினார்.

- உள்நாட்டு, வெளிநாட்டு சமயம் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டார்.

– மிஷனரி என்பது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான செயற்பாடாகும்.
– பல்வேறு மிஷனரிகள் இலங்கையில் செயற்பட்டன.
– நாட்டின் பல பாகங்களிலும் மிஷனரிகள் செயற்பட்டன.
– மிஷனரிகளை விரிவாக்கம் செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.
– மிஷனரிகள் சுதேச சமயங்களுக்கு அச்சுறுத்தலாயமைந்தன.
– எனவே பௌத்த, இந்து, இஸ்லாம் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
– பௌத்த சமய மறுமலர்ச்சியை வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கார சங்கராஜ பிக்கு ஆரம்பித்து வைத்தல்.
– பிரிவெனாக்களை அமைத்தல், விவாதங்களை நடாத்தல், தேசிய சர்வதேச மட்டங்களில் சமயப் பிரச்சார நடவடிக்கைகளில் மேற்கொள்ளல் மூலம் பௌத்த சமய மறுமலர்ச்சி விரிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாணந்துறை விவாதம் பற்றி கேள்வியுற்ற ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் இலங்கை வருதல்.
- ஒல்கொட் பௌத்த சமய எழுச்சிக்கு அரும் பணியாற்றுதல்.
- அநகாரிக தர்மபாலவும் ஒல்கொட்டின் சமயப் பணிகளுடன் இணைந்தமை.
- இந்து சமய மறுமலர்ச்சியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆரம்பித்து வைத்தல்.
- ஆறுமுக நாவலர் ஓர் அறிஞராகத் திகழ்ந்தார்.
- ஆங்கிலக் கல்வியை மறுக்காத நாவலர் இந்து மாணவர்களுக்கு ஆங்கில மொழிக் கல்வியை வழங்குவதற்கு அரும் பணியாற்றினார்.

**இந்து சமய மறுமலர்ச்சி**

- கிரிஸ்தவ மிஷனரிகள் வடபகுதியில் பாடசாலைகள் மூலம் வழங்கிய கல்வி முறையில் இந்துசமய, கலாசாரப் பாரம்பரியங்கள் அழிந்து விடுமோ என்ற அச்சம் இந்துக்களிடம் நிலவியது.
- எனவே இந்துமக்களிடையே மிஷனரி செயற்பாடுகளுக்கு எதிரான சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- இந்துசமய மறுமலர்ச்சியின் முன்னோடியாக ஆறுமுக நாவலர் அவர்கள் செயற்பட்டார்கள்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய சேவைகள்**

- அன்னார் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆற்றல் மிக்க அறிஞராகத் திகழ்ந்தார்.
- ஆரம்பத்தில் இந்து மாணவர்களுக்காகத் தமது வீட்டில் வகுப்புக்களை நடத்தினார்.
- யாழ்ப்பாண வண்ணார்பண்ணையில் இந்து ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார்.
- இந்து மாணவர்களுக்கான புத்தகங்களை எழுதியமை, அச்சகம் ஒன்றை ஆரம்பித்து தமிழ் மொழி ஆக்கங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டமை.
- மேற்படி நடவடிக்கைகள் மூலம் நாவலர் இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
- இந்த தமிழர் மரபுகளைப் பாதுகாப்பதற்கு நாவலர் ஆரம்பித்த பணிகள் வேறு தமிழ்த் தலைவர்களாலும் முன்னெடுக்கப்பட்டன.
- பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய தலைவர்கள் அந்த வகையில் முக்கியமானவர்கள்.
- சைவ பரிபாலன சபை, இந்துக் கல்விச்சபை எனும் அமைப்புக்கள் இந்து சமய மறுமலர்ச்சியில் முன்னணியில் நின்று செயற்பட்டன.

**இஸ்லாம் சமய மறுமலர்ச்சி:**

- சிங்கள, தமிழ் இனத்தவர்களிடையே மட்டுமல்ல, இஸ்லாமியரிடையேயும் மிஷனரி செயற்பாட்டுக்கு எதிரான சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- அறிஞர் எம்.சீ. சித்தி லெப்பை அவர்கள் கல்வி, சமய மறுமலர்ச்சியில் தலைமை ஏற்றுச் செயற்பட்டார்.
- அன்னார் அரபு மொழியுடன் ஆங்கில மொழியையும் கற்குமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களை ஊக்கப்படுத்தினார்.

- மத்ரசா பாடசாலைகளை ஆரம்பித்தார்.
- கொழும்பு இஸ்லாமிய கல்விச் சங்கத்தை ஆரம்பித்தார்.
- அச்சங்கம் மூலம் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆரம்பமானது.
- பெண்களுக்கான கல்விக்காக முஸ்லிம் பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- அறிஞர் சித்தி லெப்பை முஸ்லிம் நேசன் எனும் பத்திரிகை மூலம் இஸ்லாம் சமய, கலாசார வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளார்.

இவ்வாறு மேலைத்தேசத்தவர்களின் செல்வாக்கிற்கு எதிராக தேசியத்தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்

**மது ஒழிப்பு இயக்கம்.**

- பிரித்தானியர் தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு நாடு முழுவதும் மதுபானக் கடைகளைத் திறந்தனர்.
- அதற்காக மது வரிச் சட்டம் ஒன்றையும் பிறப்பித்தனர்.
- சுதேச மக்கள் மதுபானப் பாவனைக்குப் பழக்கப்பட்டமையால் சமூக ஒற்றுமை, சமாதானம் சீர்குலைந்ததுடன் தனிமனித உடல்நிலையும் உள்நாட்டுக் கலாசாரமும் சீரழிந்தன.
- எனவே மதுபானக்கடைகளுக்கு எதிராக தேசியத் தலைவர்கள் மது ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர்.

**மது ஒழிப்பு இயக்கத் தலைவர்கள் :**

- ஆத்தர். வீ. தியெஸ் அவர்களின் தலைமையில் மது ஒழிப்பு இயக்கம் ஆரம்பமானது.
- டீ.சீ. சேனாநாயக்க, ஹேவாவித்தாரண, பியதாச சிறிசேன, அனகாரிக தர்மபால, டீ. எஸ். சேனாநாயக்க, எப். ஆர். சேனாநாயக்க, டீ.பீ.ஜயதிலக்க, டப்ளியூ. ஏ. சில்வா ஆகிய தலைவர்களும் இவ்வியக்கத்தல் மும்முரமாகப் பங்கு கொண்டனர்.

**மது ஒழிப்பு இயக்கம் செயற்பட்ட விதம்.**

- கிராமங்கள், நகரங்கள், தோறும் சென்று மதுவினால் ஏற்படும் தீமைகளைப் பிரசாரம் செய்தல்.
- மது ஒழிப்பு இயக்கத்தின் கிளைகளை கிராமப் புறங்களிலும் அமைத்தல்.
- பத்திரிகை, சஞ்சிகை, புத்தகங்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.
- மது ஒழிப்பு இயக்கம் காரணமாக தேசப் பற்றுள்ள தலைவர்கள் ஒன்றிணைந்தனர்.
- அரசியல் யாப்பு சீர்திருத்த கோரிக்கை இயக்கங்களில் மது ஒழிப்பு இயக்கத் தலைவர்களும் சோந்து செயற்பட்டனர்.
- இவ்வாறு மது ஒழிப்பு இயக்கத்தின் ஊடாக வெளிநாட்டு சக்திகளுக்கு எதிராக அணிதிரண்டு தேசியத்தை பாதுகாத்தமை மதிக்கப்பட வேண்டிய செயற்பாடாகும்.

**9.3.2 அரசியல் மறுமலர்ச்சி.**

- சமூக, கலாசார மறுமலர்ச்சி போன்றே அரசியல் நோக்கங்களை அடையும் பொருட்டு அரசியல் மறுமலர்ச்சியும் ஏற்பட்டது.
- இலங்கை தேசிய காங்கிரஸ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக செயற்பட்டவேளை ஐக்கியம், ஒழுங்கு முறை அடிப்படையில் செயற்பட வேண்டிய தேவை எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1919 இல் இலங்கை தேசிய காங்கிரஸ் உருவானது.
- 1915 சிங்கள- முஸ்லிம் இனக்கலவரத்தின் போது ஆங்கில ஆளுனர் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளும் மது ஒழிப்பு இயக்கஅனுபவங்களும் தேசிய காங்கிரஸ் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தன.
- சட்டவாக்கக்கழகத்தில் அங்கத்துவம், அதிகாரம் என்பவற்றை அதிகரித்து அரசியல் நிர்வாகத்தில் தாமும் பங்கு கொள்வதற்காகவே இவ்வரசியல் போராட்ட இயக்கங்களில் தேசிய தலைவர்கள் ஈடுபட்டனர்.

**இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்கள்**

சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம், ஜேம்ஸ் பீரிஸ், ஈ. டப்ளியூ. பெரேரா, ஏ. ஈ. குணசிங்க, டீ.பீ. ஜயதிலக்க, டீ. எஸ். சேனாநாயக்க, எஸ். டப்ளியூ. ஆர்ஈ டீ. பண்டாரநாயக்க, எப். ஆர். சேனாநாயக்க ஜே. ஆர். ஜயவர்தன.

**உரிமைகளை வென்றெடுப்பதற்காக தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

- பிரித்தானிய அரசாங்கத்திற்கு மனு சமர்ப்பித்தல்.
- கூட்டங்கள் மூலம் மக்களை அறிவூட்டுதல்.
- சட்டவாக்கக்கழகத்தில் வாத விவாதங்களில் ஈடுபடல்.
- பத்திரிகை மூலம் செய்தி வெளியிடல்.

- ஆரம்பத்தில் ஒற்றுமையுடன் செயற்பட்ட போதிலும் தேசிய சங்கத்தில் பின்னர் பிளவுகள் ஏற்பட்டன.
- எனவே தேசிய சங்கத்தில் இருந்து சில தலைவர்கள் வெளியேறினர்.
- ஆயினும் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைக் கிளர்ச்சிகளை தேசிய சங்கம் முன்னின்று நடத்தியது.

**வேறு அரசியல் இயக்கங்கள் :**

- அரசியல் அதிகாரங்களை அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெற்றன.
- ஆங்கிலம் கற்ற, பணம் படைத்த மத்திய தர வகுப்பினர் இவ்வாறான அரசியல் இயக்கங்களை அமைப்பதில் முன்னின்று செயற்பட்டனர்.
- இவ்வாறான அரசியல் இயக்கங்கள் பல்வேறு பிரதேசங்களிலும் தனித்தனியாக செயற்பட்டனவே தவிர அவற்றிடம் பொதுத் தேசியக் கொள்கைகள் காணப்படவில்லை.

  உ.ம் சிலாபச் சங்கம்.
  யாழப்பாணச்சங்கம்
  கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம்

**அரசியல் கட்சிகளின் தோற்றம் :**

- ஆங்கிலேயர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விமுறையின் ஊடாக மேற்படிப்பிற்காக பிரித்தானியா சென்றவர்கள் அங்கு நிலவிய ஜனநாயகம், பாராளுமன்ற முறை, என்பன பற்றிய அறிவோடு நாடு திரும்பினர்.
- பல்வேறு அரசியல் சிந்தனைகளின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப் பட்டன.
- 1922 இல் ஏ.ஈ. குணசிங்க அவர்களால் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப் பட்ட தொழிலாளர் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப் பட்ட முதல் கட்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பூரண சுதந்திரத்தைப் பெற்று பாராளுமன்ற ஜனநாயகத்தை அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ளும் பொருட்டு 1935 இல் கலாநிதி என். எம். பெரேரா அவர்களின் தலைமையில் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1943 இல் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கவினால் கொமியூனிசக் கட்சியும் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா அவர்களால் போல்சுவிக் லெனின் கட்சியும் ஆரம்பிக்கப்பட்டன.
- 1946 இல் இலங்கை தேசிய காங்கிரஸ், முஸ்லிம் சங்கம், சிங்கள மகாசபை, இலங்கை சேவகர் சங்கம் என்பன சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உருவானது.

  அனைத்து அரசியல் கட்சிகளினதும் நோக்கம் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதாகும்.

### 9.3.3 அரசியல் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்ட இயக்கங்கள்.

- இலங்கையர் பெற்றுக்கொண்ட யாப்புச் சீர்திருத்தப் போராட்டங்களின் அடிப்படையிலேயே 1943 இல் நாடு சுதந்திரமடைந்தது.
- தலைவர்கள் தமது செல்வம், சிரமம், நேரம் என்பவற்றை மாத்திரமல்ல வாழ்க்கையையும் அர்ப்பணித்து சுதந்திரத்திற்காகச் செயற்பட்டனர்.

உ-ம்: சேர். பொன்னம்பலம் அருணாசலம்.
சேர். பொன்னம்பலம் இராமநாதன்.
தொன் பாரன் ஜயதிலக்க.
ஈ.டப்லியூ பெரேரா.
எப். ஆர். சேனாநாயக்கா.
ஏ. ஈ. குணசிங்க.
சீ. டப்லியு. டப்லியு. கன்னங்கர.
எஸ். ஏ. விக்கிரமசிங்க.
டீ. எஸ். சேனாநாயக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 9.3.1

தேர்ச்சி மட்டம் :

எமது தனித்துவத்தையும் பாரம்பரியங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேசியத்தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பதுடன் தேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பார்.

செயற்பாடு :

இலங்கையின் சமய மறுமலர்ச்சியை அறிந்து கொள்வோம்.

நேரம் : 200 நிமிடங்கள்.

தர உள்ளீடு :

- இணைப்பு 9.3.1.1 - படிவத்தை மாணவருக்குக் காட்சிப்படுத்தி பின்வரும் வினாக்களை வினவவும்.
  இது யார்?
  இவரைப் பௌத்த மக்கள் மதிப்பதன் காரணம் என்ன?
  மாணவர் பதில்களில் கவனஞ் செலுத்திப் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடுக.

- இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தமது சமயப் பிரசாரத்திற்காக மிஷனரி முறையை செயற்படுத்தினர்.
- மிஷனரிமார் தமது சமயப் பிரசாரப்பணிகளுக்கு கல்வியை ஆயுதமாகப் பயன்படுத்தினர்.
- ஆங்கிலேயர் ஆட்சியின்போது மிஷனரி இயக்கம் பிரபலமாக செயற்பட்டது.
- ஆங்கிலேயர் ஆட்சியின்போது மிஷனரி இயக்கம் சுதேச சமயங்களுக்குப் பெரும் சவாலாக அமைந்தன.
- எனவே பௌத்த, இந்து, இஸ்லாம் சமயங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- ஆங்கிலேயர் தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக ஆரம்பித்த மதுபானச்சாலைகள் காரணமாக சுதேச சமூக, கலாசாரத்துக்கு மாத்திரமன்றி அது தனியாள் சுகாதாரத்திற்கும் தீங்காய் அமைந்தது.
- இதற்கெதிராக மது ஒழிப்பு இயக்கம் ஆரம்பமானது.

(15 நிமிடங்கள்)

படிமுறை 9.3.1.2.

- இணைப்பு 9.3.1.3. ஆலோசனைப்படி வகுப்பு மாணவர்களை உரிய முறையில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.3.1.2 செயற்பாட்டுப் பத்திரத்தை உரிய முறையில் குழுக்களிடையே பகிர்ந்தளிக்கவும்.
- தேவையான ஆலோசனைகளை வழங்கி குழுக்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- ஒவ்வொரு குழுவும் செய்த ஆக்கங்களை சுவர்ப்பத்திரிகைக்கு ஏற்றவாறு அமைப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.

(65 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 9.3.1.3.

- ஒவ்வொரு குழுவும் தமக்குரிய செயற்பாட்டை சுவர்ப் பத்திரிகையில் ஒட்டுவதுடன் அதற்குரிய விபரங்களை வகுப்பில் சமர்ப்பிக்க.
- ஒரு குழுவின் குறை நிறைகளை அடுத்த குழுவிடம் கேட்டறியவும்.
- பாடத்திற்குரிய குறிப்புக்களை பயிற்சிப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளுமாறு கூறவும்.
- இனங்கண்ட நிறை குறைகள் பற்றிக் கவனஞ் செலுத்தி பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு பொழிப்புரையை வழங்குக.

- ஆறுமுக நாவலர் அவர்கள் இந்து சமயத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளை ஏனைய தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்தமை.
- இஸ்லாம் சமய மறுமலர்ச்சியை எம். சீ. சித்தி லெப்பை அவர்கள் முன்னெடுத்தமை.
- ஆங்கில மொழிக் கல்வியின் பெறுமதியை முஸ்லிம் மாணவர்களுக்கு அவர் உணர்த்தியமை
- இஸ்லாமிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு அன்னார் அளப்பரிய பணியாற்றியமை.
- தமது சமயங்களைப் பாதுகாப்பதுடன் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தேசியத் தலைவர்கள் அணிதிரண்டனர்.
- எமது மரபுகளைப் பாதுகாப்பதற்குத் தம்மை அர்ப்பணித்த தலைவர்களை நன்றியுடன் நினைவுகூர வேண்டியமை
- பிரித்தானியர் தமது வருமானத்தை அதிகரிக்குமுகமாக மதுபான சாலைகளை ஆரம்பித்தமை.
- பல்வேறு உபாயங்கள் மூலம் ஆங்கிலேயர் சுதேச மக்களை மது அருந்தப் பழக்கியமை.
- மதுப்பாவனையால் சமூக, சமய, கலாசார சீரழிவுடன் சுகாதார சீரழிவும் ஏற்பட்டமை.
- இதற்கெதிராகத் தேசியத் தலைவர்கள் மது ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தமை.
- மது ஒழிப்பு இயக்கம் நாடு முழுவதும் தன் கிளைகளை நிறுவி மக்களை மதுவில் இருந்து மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொண்டமை.
- மது ஒழிப்பு இயக்கம் யாப்புச் சீர்திருத்த இயக்கத்திற்கு உறு துணையாய் அமைந்தமை.
- எமது தனித்துவத்தையும் எமது பாரம்பரியத்தையும் பாதுகாத்துத் தந்த தலைவர்களுக்கு நாம் என்றும் மரியாதை செலுத்த வேண்டியமை.
- எந்தவொரு சக்திக்கும் எமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்கின்ற மனப்பான்மை.
- எமது தனித்துவப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பது எமது கடமை.

(120 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடும் மதிப்பீடும்

- சமய மறுமலர்ச்சியின் பொருளை விளக்குவார்.
- சமய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குவார்.
- சமய மறுமலர்ச்சி ஊடாக தேசிய தனித்துவத்தைப் பாதுகாத்த விதத்தை விளக்குவார்.
- ஆக்கபூர்வமான குழுச் செயற்பாட்டின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்வார்.
- திறமையான தலைவர்களாக நடந்து கொள்வார்.

பின்வேலை

மிஷனரி இயக்கம், சமய மறுமலர்ச்சி என்பன பற்றி பத்திரிகைச் செய்திகளைச் சேகரித்து சிறுநூல் ஒன்றைத் தயாரிக்குக.

இணைப்பு 9.3.1.1.



அனகாரிக தர்மபால அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாட்டுப் பத்திரம்

குழு 1.
- மிஷனரி இயக்கம் பற்றிய தகவல்களைத் தொகுப்பது உமது குழுவின் பொறுப்பாகும்
- மிஷனரி இயக்கத்தின் இயல்பு.
- எமது நாட்டுக்கு வந்த மிஷனரி இயக்கங்கள்.
- மிஷனரிகள் தமது செயற்பாடுகளை விரிவாக்கிய விதம்.
- மிஷனரிகளின் வெற்றி, தோல்விகளுக்கான காரணங்களைத் திரட்டி சுவர்ப்பத்திரிகைக்கு ஏற்ற ஆக்கமொன்றைத் தயாரிக்கவும்.

குழு 2
- பௌத்த சமய மறுமலர்ச்சி பற்றிய தகவல்களைத் திரட்டுவது உமது குழுவின் பொறுப்பாகும்.
- பௌத்த மத மறுமலர்ச்சிக்கான காரணங்கள்.
- பௌத்த சமய மறுமலர்ச்சியின் முன்னோடிகள்.
- ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் குழுவினரால் மேற்கொள்ளப் பட்ட சமய சேவைகள்.
- தமது சமயத்தின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டியது ஏன்?
- மேற்படி தகவல்களைச் சுவர்ப்பத்திரிகைக்கு ஏற்றவாறு அமைக்கவும்.

குழு 3.
- இந்து இஸ்லாம் சமய மறுமலர்ச்சி பற்றிய தகவல்களைத திரட்டுவது உமது குழுவின் பொறுப்பாகும்.
- இந்து, இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி முன்னோடிகள்.
- இந்து, இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி மேற்கொள்ளப் பட்ட விதம்.
- தமது சமய தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டியது ஏன்?
- மேற்படி தகவல்ளைச் சுவர்ப்பத்திரிகைக்கு ஏற்றவாறு அமைக்கவும்.

குழு 4.
- மது ஒழிப்பு இயக்கம் பற்றிய தகவல் திரட்டுவது உமது குழுவின் பொறுப்பாகும்.
- மது ஒழிப்பு இயக்கம் என்றால் என்ன?
- மது ஒழிப்பு இயக்கத் தலைவர்கள்.
- மது ஒழிப்பு இயக்கம்செயற்பட்ட விதம்.
- மேற்படி தகவல்ளைச் சுவர்ப்பத்திரிகைக்கு ஏற்றவாறு அமைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 9.3.1.3**

## ஆலோனைப் பத்திரம்

- வகுப்பு மாணவர்களைக் குழுக்களாக்குக ( குழுவில் அறுவருக்கு மேற்படாதவாறு)
- குழுக்களின் எண்ணிக்கை அதிகமாயின் ஒரு செயற்பாட்டுப் படிவத்தைப் பல குழுக்களுக்கு வழங்கவும்.
- ஆக்கத்தை இறுதியில் சுவர்ப்பத்திரிகைக்குப் பொருத்தமாகத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.
- சுவர்ப்பத்திரிகைக்குப் பொருத்தமான விதத்தில் படங்கள், பத்திரிகைச் செய்திகள் என்பனவற்றுடன் கூடிய ஆக்கங்களை அமைக்குமாறு பணிக்க.
- போதியளவு ஆக்கங்களை தரப்பட்ட பிரிஸ்டல் அட்டையில் ஒட்டி சுவரில் காட்சிப்படுத்த வழிகாட்டவும்.
- ஒவ்வொரு குழுவும் சுவர்ப் பத்திரகையில் ஒட்டிய தமது தலைப்புப் பற்றி வகுப்பறையில் சமர்ப்பிப்பதற்கு வழிப்படுத்தவும்.
- குழுச் செயற்பாட்டிற்கு 2 பாடவேளைகளும், சமர்ப்பித்தலுக்கு 2 பாட வேளைகளும், பொழிப்புரை செய்வதற்கு 2 பாட வேளைகளும் ஒதுக்கிக் கொள்ளவும்.
- எல்லா மாணவர்களினதும் பங்களிப்பினை குழு வேலையின் போது பெற்றுக்கொடுள்ள நடவடிக்கை எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.3.2

**தேர்ச்சி மட்டம்** :

எமது தனித்துவத்தையும் மரபுகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக சுதேச தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை மதித்து தேசிய தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்வார்.

**செயற்பாடு** :

"சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள்."

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

இணைப்பு 9.3.2.1 சீ.டப்லியு. டப்லியு. கன்னங்கர அவர்களின் படம்.
இணைப்பு 9.3.2.2 மாணவர் செயற்பாட்டுப்படிவம்.

**கற்றல் கற்பித்தல்செயற்பாடு.**

படிமுறை :

இணைப்பு 9.3.2.1 படத்தை வகுப்பில் காட்சிப்படுத்தவும்
இவர் யார்?
இவரால் ஆற்றப்பட்ட சேவை யாது?
முதலில் வினாக்களை மாணவரிடம் வினவி பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- சுதேச தலைவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கோரிக்கைகள் காரணமாக இலங்கை சுதந்திரமடைந்தமை.
- சுதந்திரத்துக்காக தேசியத் தலைவர்கள் பலரும் பங்களிப்புச் செய்துள்ளமை.
- தலைவர்களின் அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் நாம் மதித்து நடத்தல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

படிமுறை 9.3.2.2

- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்க.
- குழுக்களுக்கு இணைப்பு 9.3.2.2. இல் குறிப்பிட்டுள்ள தலைப்பு ஒன்று வீதம் வழங்குக.
- குழுக்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கவும்.
- குழுச்செயற்பாட்டில்ஒவ்வொருமாணவரும் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 9.3.2.3.

- ஒவ்வொரு குழுவுக்கும் வகுப்பில் தமது செயற்பாட்டை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்கள் முன்வைக்கும் முக்கியமான கருத்துக்களைக் கரும்பலகையில் எழுதவும்.
- ஒவ்வொரு குழுவினதும் நிறை குறைகளை அறிந்து கொள்ளவும்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைக்கும் தகவல்கள் பற்றி ஏனைய குழுக்களிடம் கருத்துக் கோரவும்.
- பாடத்துக்குரிய முக்கிய தரவுகளை மாணவர் பயிற்சிக் கொப்பியில் குறித்துக்கொள்ள ஆலோசனை வழங்கவும்.
- மாணவர் முன்வைத்த தகவல்களைப் பற்றிக் கவனஞ் செலுத்தி பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் பொழிப்புரை வழங்குக.

|  |
|---|
| ஆங்கிலேயரிடமிருந்து தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக போராட்ட இயக்கங்களில் தேசியத் தலைவர்கள் ஈடுபட்டமை.<br>• சேர். பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், டீ.பீ ஜயதிலக்க, ஈ.டப்லியு.பெரேரா, எப்.ஆர், சேனாநாயக்க, ஏ.ஈ.குணசிங்க, சீ.டப்லியு.டப்லியு. கன்னங்கர, எஸ்.ஏ.விக்கிரமசிங்க, டீ.எஸ் சேனாநாயக்க, முதலிய தலைவர்கள் முக்கியமானவர்களாகத திகழ்ந்தமை.<br>• இத்தலைவர்களின் அர்ப்பணிப்பு, துணிவு காரணமாக வெற்றி கொண்ட உரிமைகளையே நாம் இன்றும் அனுபவித்து வருகின்றமை.<br>• எனவே நாம் தேசிய தலைவர்களை மதிக்க வேண்டியுள்ளமை.<br>• அதே போன்று அவர்கள் வென்று தந்த உரிமைகளை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளமை. |

(80 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- போராட்டங்களில் ஈடுபட்ட தேசியத் தலைவர்களின் பெயர் குறிப்பார்.
- தேசியத் தலைவர்களின் செயற்பாட்டை விபரிப்பார்.
- தேசியத் தலைவர்கள் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- குழுச் செயற்பாட்டின் வெற்றிக்குப் பங்களிப்புச்செய்வார்
- ஒரு தலைவராகச் செயற்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 9.3.2.1**



**சீ.டப்லியு.டப்லியு. கன்னங்கர அவர்கள்**

**இணைப்பு 9.3.2.1**

குழு 1

- சேர். பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம் ஆகியோர் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
- தேசிய சுதந்திரத்திற்காக அவர்கள் முன்னெடுத்த போராட்டங்களை மதித்து திரட்டிய தகவல்களைச் சமர்ப்பிக்கவும்.

குழு 2

- டீ.பீ .ஜயதிலக்க,ஈ.டப்ளியு பெரேராஆகியோர் பற்றி தகவல் திரட்டவும்.
- தேசிய சுதந்திரத்திற்கான அவர்களின் பங்களிப்பினை மதித்து திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்கவும்

குழு 3

- எப். ஆர். சேனாநாயக்க , ஏ. ஈ. குணசிங்க ஆகிய தலைவர்கள் பற்றி தகவல் திரட்டுங்கள்.
- தேசிய சுதந்திரத்துக்கான அவர்களின் பங்களிப்பினை மதித்து திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்கவும்

குழு 4

- எஸ். ஏ. விக்கிரமசிங்க, டீ. எஸ். சேனாநாயக்க ஆகிய தலைவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்.
- தேசிய சுதந்திரத்துக்கான அவர்களின் பங்களிப்பினை மதித்து திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வையுங்கள்

குழு 5

- திரு சீ.டப்லியு.டப்லியு. கன்னங்கர அவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்.
- இலங்கைக் கல்விக்கான அன்னாரின் சேவையை மதித்து திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.4 சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியல் வளர்ச்சி

பாடவேளை : 15

**அறிமுகம் :**

நூற்றைம்பது ஆண்டுகளாக பிரித்தானியருக்கு அடிமைப்பட்டிருந்த இலங்கை 1948 ஆம் ஆண்டில் ஆணிலப்பத (டொமினியன்) அந்தஸ்தை அடையப்பெற்றது. உள்நாட்டு நிர்வாகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டாலும் 1948 இல் இந்நாடு பூரண சுதந்திரத்தை அடையப்பெறவில்லை என்றே கூறப்படுகின்றது.

1948 இலிருந்து 1972 வரையான கால கட்டத்தில் அரசாண்ட ஒரு கட்சிக்கேனும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டாமையால், அரசியல் யாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இயலவில்லை 1970 இல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் 1972 ஆம் ஆண்டில் புதியதோர் அரசியல்யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் இலங்கை தன்னாதிக்கமுள்ள சுதந்திர நாடானது.

1978 இல் இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. 1948 இல் இருந்து 1978 வரை பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதே இவ்வத்தியாயத்தின் மூல நோக்கமாகும்.

**தேர்ச்சி** : தேசிய சுயாதீன தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளை விளக்குவதுடன் நல்லாட்சிக்குப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :

- 9.4.1சமகாலத் தேவையை அடிப்டையாகக் கொண்ட அரசாங்கத்தை அமைப்பதற்காக மக்கள் பங்களிப்புச்செய்த விதத்தை 1948 - 1972 காலகட்டத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின் ஊடாக விளக்குவார்.
- 9.4.2 டொமினியன் அந்தஸ்து மூலம் முழுமையான அரசியல் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடிந்தமையை விளக்குவார்.
- 9.4.3 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் அடிப்படையான பண்புகளை ஒப்பிட்டாராய்வார்

**பாட உள்ளடக்கம்:**

9.4 சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியல் வளர்ச்சி

9.4.1. 1948 இலிருந்து 1972 வரையிலான அரசியல் மாற்றங்கள், கட்சிகளினால் அரசாங்கங்கள் அமைத்துக் கொள்ளப்படல்.

**1952- பொதுத்தேர்தல்**

– 1952- பொதுத்தேர்தலுக்கு முன்னர் காணப்பட்ட நிலைமை.

– சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் 1947 இல் முதலாவது பொதுத் தேர்தல் இடம்பெறல்.

– பல கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிட முன்வந்தமை.

உதாரணமாக :- ஐக்கிய தேசியக் கட்சி, தொழிலாளர் கட்சி, இலங்கை சம சமாஜக் கட்சி, இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை - இந்திய காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸக் கட்சி, சுயேட்சைக் குழுக்கள் பலவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 95 தேர்தல் தொகுதிகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக இத்தேர்தல் நடத்தப்பட்டது.
- அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள ஒரு கட்சியாலும் முடியவில்லை.
- 42 தொகுதிகளில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியால் தொழிலாளர்கட்சி, இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி, சுயேட்சைக் குழுக்கள் என்பவற்றைக் கூட்டுச்சேர்த்து அரசாங்கம் அமைத்துக்கொள்ளப்பட்டது.
- D. S. சேனநாயக்க அவர்கள் பொது மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதம அமைச்சராதல்.
  - இப்பாராளுமன்றத்தின் எதிர்கட்சித்தலைவராக கலாநிதி N.M. பெரேரா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.
  - 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது.

- அரசியல்யாப்பின்படி பொதுத்தேர்தல் 1952 இல் இடம்பெற்றது.
- இத்தேர்தலிலும் பல கட்சிகள் போட்டியிட்டன.
- 54 தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது.
- தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தொழிலாளர் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது.
- இவ்வரசாங்கத்தின் பிரதமராக டட்லி சேனநாயக்கா அவர்கள் தெரிவானார்.
- எதிர்க் கட்சித்தலைமை S.W.R.D. பண்டார நாயக்க அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றது. (அவர் 1951 இல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அமைத்திருந்தார்)
- 1953 இல் இடதுசாரிக் கட்சிகளினால் மேற்கொள்ளப் பட்ட ஹர்த்தாலினால் டட்லி சேனநாயக்க அவர்கள் பதவி துறக்க நேர்ந்தது.

*கொரியப் போர் முடிவுற்றதன் பின்னர் றப்பரில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் குறைவடையவே, சமூகநல மானியங்களை வழங்குவதில் அரசாங்கம் எதிர்நோக்கிய கஷ்டங்கள் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, என்பவற்றின் விலையை அதிகரிக்க நேர்ந்தது. இதனை எதிர்த்து இலங்கை இடதுசாரிக் கட்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட பலம்வாய்ந்த மக்கள் எதிர்ப்பு இயக்க "ஹர்த்தால்" எனக் குறிப்பிடப்படுகிறது.*

- சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் பிரதமர் பதவிக்கு வரல்
- இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் சிலர் எதிர்க் கட்சியுடன் சேர்ந்தமையால் அரசாங்கத்தின் புகழ் குன்றியது.
- 1956 ஆம் ஆண்டில் இரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1956 பொதுத்தேர்தல்**

- இது மூன்றாவது பாராளுமன்றத்துக்கான தேர்தலாகும்.
- கட்சிகள் பலவும் சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியை நிறுவிக்கொண்டமை.
- மக்கள் ஐக்கிய முன்னணி 51 ஆசனங்களில் வெற்றி பெற்றமை.
- S.W.R.D. பண்டார நாயக்க அவர்கள் பிரதமர் பதவிக்குத் தெரிவானமை.
- 1959 இல் இல் பண்டாரநாயக்க அவர்களின் படுகொலை இடம்பெற்றமை.
- W. தஹநாயக்க அவர்கள் பிரதமராதல்.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே பாராளுமன்றம் கலைக்கப்படுதல்.

**1960 - பொதுத் தேர்தல்**

- 1960 இல் இரண்டு பொதுத்தேர்தல்களை நடத்த நேர்ந்தமை

**1960 மார்ச் பொதுத் தேர்தல்**

- பாராளுமன்றத்தின் ஆசனங்கள் 151 ஆக அதிகரிக்கப்பட்டமை
- பொதுத் தேர்தல் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டமை.
    - உ.ம்: ஒரே நாளில் தேர்தலை முடிக்கும் வண்ணம் பொதுத்தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப் பட்டமை.
- கட்சிகள் பலவும பொதுத்தேர்தலுக்கு முன்வந்தமை.
- அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு தனி ஒரு கட்சியால் இயலாமற் போனமை.
- டட்லி சேனநாயக்க அவர்கள் அரசாங்கத்தை அமைத்தமை.
- சிம்மாசனப் பிரசங்கம் தோல்வியுற்றமையால் அரசாங்கத்தைக் கலைக்க நேர்ந்தமை (33 நாட்களுக்கு மட்டுமே அவ்வரசாங்கத்தால் நிலைக்க முடிந்தது).
- பாராளுமன்றம் கலைக்கப்படல்.

**1960 ஜுலை இரண்டாவது பொதுத் தேர்தல்**

- கட்சிகள் யாவும் தேர்தலுக்கு முன்வரல்.
- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தல்.
- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்யப்படல்.
- உலகின் முதல் பெண் பிரதமராகும் பெருமையைப் பெற்றமை.

**1965 பொதுத் தேர்தல்**

- இத் தேர்தலுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிசக் கட்சி, என்பவை ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணியாகப் போட்டியிட்டமை
- ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டமை.
- அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை ஒரு கட்சிக்கேனும் கிடைக்காமற் போனமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துக் கொண்டமை.
- அவ்வரசாங்கத்தின் பிரதமராக டட்லி சேனநாயக்க அவர்கள் செயற்பட்டமை.
- அவ்வரசாங்கம் எதிர்கொண்ட பொருளாதார, அரசியல், பிரச்சினைகளால் செவ்வையான ஆட்சியை நடத்திச் செய்வதற்கு இயலாதிருந்தமை.
- சுதந்திரம் கிடைக்கப் பெற்ற பின்னர் முதன் முறையாக பாராளுமன்றத்தில் முழுமையான ஐந்தாண்டு கால ஆயுட் காலத்திற்கு அரசாங்கத்தை நடத்திச் சென்றமை.

**1970 பொதுத் தேர்தல்**

- ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உள்ளிட்ட ஐக்கிய முன்னணிக்கு பெரும்பான்மைத் தொகுதிகளில் வெற்றிகொள்ள முடிந்தமை.
- வரலாற்றிலேயே முதன் முறையாக கட்சி ஒன்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையைப் பெற்றமை.
- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் பிரதமரானமை.

**1970 - 1977 கால கட்டத்தில் நடந்த முக்கியமான அரசியல் மாற்றங்கள் :**

- குடியரசு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டமை.
- தேசிய மயமாக்கல் இயக்கமும் அரசாங்கத்தை மையப்படுத்திய பொருளாதாரக் கொள்கையும் கைக்கொள்ளப்பட்டமை.
- அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) நடத்திய ஆயுதக் கிளர்ச்சியை முறியடித்தமை.

**9.4.2.-1972- குடியரசாதல் :**

- 1972 இன் அரசியல் யாப்பின்படி இலங்கை சுதந்திர தன்னாதிக்கமுள்ள குடியரசாதல்.
- தேசிய அரசுப் பேரவை, ஒரே சபையைக் கொண்ட அதிகாரம் மிக்க சட்டசபை, பெயரளவு ஜனாதிபதி முறைமை என்பன இதன் பிரதான அம்சங்களாகும்.

**தேசிய அரசுப்பேரவை :**

- அனைத்து சட்டவாக்க அதிகாரமும் தேசிய அரசுப் பேரவைக்கு உரித்தாதல்.
- மக்களுடைய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே இச்சபையில் அங்கம் பெறுதல்.
- குடியரசின் இறையாண்மை தேசிய அரசுப் பேரவையிடம் ஒப்படைக்கப்படல்.

**தேசிய அரசுப் பேரவையின் செயற்பாடுகள் :**

- சட்டங்களை இயற்றுதல்.
- நிதி, நிர்வாகம், பாதுகாப்பு, தொடர்பான செயற்பாடுகள்,

**ஓரங்க சபையைக் கொண்ட சட்டவாக்கத் துறை :**

- புதிய அரசியல் யாப்பின்படி மூதவை (செனட்) இல்லாமலாக்கப்பட்டது.
- மக்கள் பிரதிநிதிகளை மட்டும் கொண்ட தேசிய அரசுப் பேரவை.
- இதனால் ஓரங்க சட்டசபை உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவேற்றதிகாரம் :**

- நிறைவேற்றதிகாரம் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையால் (கெபினெட்) மேற்கொள்ளப்படல்.
- பொதுத்தோதலில் கூடிய பெரும்பான்மையைக் பெற்ற கட்சியின் தலைவர் அரசாங்கத்தை அமைக்கும் பிரதமராகத் தெரிவுசெய்யப்படல்.
- தேசிய அரசுப் பேரவையில் இருந்து அமைச்சர்கள் தெரிவு செய்யப்படல்.

**நீதி :**

- நீதிமன்றத் தொகுதியால், நீதித்துறையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல்.

**பெயரளவு ஜனாதிபதிப்பதவி**

- இதுவரை பிரித்தானிய முடியின் அதிகாரங்களை செயற்படுத்துபவராக விளங்கிய ஆளுநர் நாயகத்திற்குப் பதிலாக ஜனாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டமை.
- அவர் நாட்டின் தலைவராகச் செயற்படுவார்.
- என்றாலும் அரசாங்கத்தின் தலைவரான பிரதமரின் ஆலோசனைப்படியே அவர் செயற்பட வேண்டும்.
- இதனால் இப்பதவி பெயரளவுக்கானதே.
- அப்போது ஆளுநர் நாயகமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வில்லியம் கொபல்லவ அவர்களே இலங்கையின் முதல் ஜனாதிபதியாக நியமனம் பெற்றார்.

**9.4.3. இரண்டாம் குடியரசு யாப்பு:**

- 1972 குடியரசு யாப்புக்குப் பதிலாக 1978 இல் புதிய அரசியல் யாப்பு ஒன்றை அறிமுகப்படுத்தல்.
- இந்த யாப்பின் விசேட பண்புகள் வருமாறு:
  - பூரண அதிகாரம் படைத்த ஜனாதிபதிப் பதவி:
    பெயரளவு ஜனாதிபதிக்குப் பதிலாக பூரண அதிகாரம் படைத்த ஜனாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டது.
  - பிரதமரிடம் இருந்துவந்த நிறைவேற்று அதிகாரம், அமைச்சரவையினதும் அரசாங்கத்தினதும் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.
  - ஜனாதிபதிக்கு விசேட சலுகைகள் பல வழங்கப்பட்டன.
    உ-ம்: இப்பதவியை வகிக்கும் காலகட்டத்தில் எந்தவொரு குற்றச்சாட்டின் பேரிலும் அவர் மீது நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர முடியாது.
- ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கென்றே தனியான தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.
- இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள முதல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்களாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவை.**

- பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல்.
- பிரதமர் பதவி பெயரளவுக்கானதாதல்.
- பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியிருத்தல்.
- அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியாவார்.
- ஜனாதிபதி தமது நிறைவேற்றதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது அமைச்சரவையின் மூலமாகும்.

**பிரதமரும் பாராளுமன்றமும்.**

- தேசிய அரசுப் பேரவை என பெயர் மாற்றப்பட்டிருந்த சட்டசபை, மீளவும் பாராளுமன்றம் என அழைக்கப்படலாயிற்று.
- பாராளுமன்றத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் முறை இரு வகைப்படும்.
- விகிதாசாரத் தேர்தல் முறை
- தேசியப் பட்டியல் முறை.
- நாட்டின் முறையான ஆட்சியைக் கருத்திற் கொண்டு சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்தில் விடப்பட்டிருந்தது.

**விகிதாசாரத் தேர்தல் முறைமை.**

- மாவட்டம் ஒவ்வொன்றும் ஒரே அரசியல் தொகுதியாகக் கருதப்பட்டு ஒவ்வொரு கட்சியின் அபேட்சகர்களும் ஒரே பட்டியலின் மூலம் ஒரே குழுவாகப் போட்டியிடல்.
- தமது வாக்கை தாம் விரும்பும் கட்சிக்கு வழங்கி தாம் விரும்பும் அபேட்சகர்கள் மூவருக்கு விருப்புத் தேர்வை வழங்கும் வண்ணம் வாக்களிக்கும் சந்தர்ப்பம் வாக்காளருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தேர்தலில் ஒரு கட்சி பெற்ற வாக்குத் தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப அம்மாவட்டத்தில் அக்கட்சிக்கான அங்கத்தவர் தொகை நிர்ணயிக்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரும்பான்மையான வாக்குகளைப்பெறும் கட்சிக்கு மேலதிக (போனஸ்) ஆசனம் ஒன்று வழங்கப்படல்.
- பராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதிகள் விகிதாசார முறையிலேயே தெரிவு செய்யப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.4.1

**தேர்ச்சி மட்டம்** : 9.4.1சமகாலத் தேவையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தை அமைப்பதற்காக மக்கள் பங்களிப்புச்செய்த விதத்தை 1948 - 1972 காலகட்டத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின் ஊடாக விளக்குவார்.

**செயற்பாடு** : 1948 இல் இருந்து 1972 வரையான காலகட்டத்தில் அரசியல் கட்சிகளினால் அரசாங்கம் அமைத்துக்கொள்ளப்பட்ட விதம் பற்றி அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 200 நிமிடங்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**
**9.4.1.1.**

– இப்போது செயற்படும் அரசியல் கட்சிகளில் நீர் அறிந்துவைத்துள்ளவை யாவை?

– அரசியல் கட்சிகள் ஏன் தேவைப்படுகின்றன?

இவ்வாறான வினாக்களை மாணவரிடம் விடுத்து, கீழ்வரும் விடயங்கள் துலங்கும் வண்ணம் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

– இன்று எமது நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் காணப்படுகின்றமை.
– பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகள் உருவாகின்றமை
– சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பாரளுமன்றத்திற்கு கட்சி முறையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை.
– 1941 இலிருந்து 1972 வரை பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக ஐந்து பொதுத் தேர்தல்கள் நடைபெற்றமை.
– கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் அமைக்கப்பபட்டமை.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 9.4.1.2**

– வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்குங்கள்.
– இணைப்பு 9.4.1.1 க்குரிய செயலட்டைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
– இத்தலைப்புக்கள் பற்றி தகவல்கள் திரட்டுவதற்கு மாணவர்களை அறிவூட்டுங்கள்.
– பாடநூல், தகவல்களைப் பெறக்கூடிய மூலாதாரங்கள் பற்றி அறிவுறுத்துங்கள்.
– சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து வகுப்பறையில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவதற்கு ஆயத்தப் படுத்தவும்.

(45 நிமிடங்கள்)

**படி முறை 9.4.1.3**

– ஒவ்வொரு குழுவினாலும் தயாரிக்கப்பட்ட சொற்பொழிவுகளை வகுப்பறையில் நிகழ்த்தச் செய்தல்.
– ஒரு குழுவினால் முன்வைக்கப்படும் தகவல்களிலிருந்து பாடத்திற்குப் பொருத்தமானவற்றை கரும்பலகையில் குறிக்கவும்.
– ஒவ்வொரு குழுவினரதும் முன்வைப்புக்கள் பற்றி ஏனைய குழுக்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
– கரும்பலகையில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களை கொப்பியில் எழுதிக்கொள்ளும் படி ஆலோசனை வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் முன்வைத்த விடயங்களின் வலிவுகளையும் நலிவுகளையும் குறித்துக் காட்டி, கீழ்வரும் விடயங்கள் துலங்கும் வண்ணம் பாடத்தை விளக்கிச் செல்லுங்கள்.

- முதலாவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் 1947 இல் இடம்பெற்றதென்பது.
- அத்தேர்தலில் பல கட்சிகள் பங்குபற்றினர் என்பது.
- 95 ஆசனங்களுக்காக தேர்தல் நடைபெற்றதென்பது.
- ஐக்கிய தேசிய கட்சியால் அரசாங்கம் அமைக்கப்பட்டதென்பது.
- D.S. சேனநாயக்க அவர்கள் முதலாவது தேர்தலின் மூலம் பிரதமரானார் என்பது.
- 1952 இல் இரண்டாவது பொதுத்தேர்தல் நடைபெற்ற தென்பது.
- பல அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்தது பற்றி.
- இவ்வரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் "ஹர்த்தால்" இடம் பெற்றது என்பது.
- 1956 இல் அரசாங்கம் கலைக்கப்பட்டதென்பது.
- மூன்றாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் 1956 இல் நடைபெற்ற தென்பது.
- S.W.R.D. பண்டாரநாயக்க அவர்கள் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதென்பது.
- குறிப்பிட்ட தினத்திற்கு முன்னரே அரசாங்கத்தைக் கலைக்க நேரிட்டமை பற்றி.
- 1960 இல் இரண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது என்பது.
- இரண்டாவது தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக அவர்கள் பிரதமராகத் தெரிவானது பற்றி.
- அவர் உலகிலே முதலாவது பெண் பிரதமரானமை பற்றி.
- 1965 இல் மீளவும் தேர்தல் நடந்தது பற்றி.
- அதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது பற்றி.
- அவ்வரசாங்கம் 5 ஆண்டுகளாக முழு ஆட்சிக் காலத்தை நிறைவு செய்தது பற்றி.
- 1970 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது பற்றி.
- மூன்றிலிரண்டுப் பங்கு பெரும்பான்மையை அக்கட்சியினர் பெற்றுக் கொண்டமை பற்றி.
- இக்காலகட்டத்தில் அரசியல் மாற்றங்கள் பலவும் ஏற்பட்டமை பற்றி.

(140 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலட்டை

குழு : 1

உங்கள் குழுவுக்கு வழங்கப்படுவது 1952 இல் இடம் பெற்ற பொதுத் தேர்தல் பற்றிய தகவல்களை சேகரித்து வகுப்பறையில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தத் தயாராதல்.

குழு : 2.

உங்கள் குழுவுக்கு தரப்படுவது, 1956 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாக சொற்பொழிவு ஒன்றைத் தயாரித்து வகுப்பறையில் நிகழ்த்துதல்.

குழு: 3.

உங்கள் குழுவுக்கு வழங்கப்படுவது, 1960 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தல் பற்றிய தகவல்களை ஒன்று திரட்டி, சொற்பொழிவு ஒன்றுக்காக ஆயத்தமாகி அதனை நிகழ்த்துதல்.

குழு: 4.

இக் குழுவுக்கு வழங்கப்படுவது 1970 இல் இடம் பெற்ற பொதுத் தேர்தல் பற்றிய தகவல்களைத் திரட்டி சொற்பொழிவு ஒன்றை வகுப்பறையில் நிகழ்த்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு : 9.4.2.

**தேர்ச்சி மட்டம்** : 9.4.2 டொமினியன் அந்தஸ்து மூலம் முழுமையான அரசியல் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடிந்தமையை விளக்குவார்.

**செயற்பாடு** : 1972 இன் குடியரசு அரசியல் யாப்பைக் கற்போம்.

**நேரம்** : 160 நிமிடம்.

**தர உள்ளீடு** :

இணைப்பு 9.4.2.1. ஜனாதிபதியின் உருவப்படம்,

இணைப்பு 9.4.2.2. செயலட்டை,

பாடநூல்,

சுவர்ப்பத்திரிகைக்குத் தேவையான பொருட்கள்.

**கற்றல், கற்பித்தல் நடவடிக்கை.**

**படிமுறை 9.4.2.1.**

- இன்றைய ஜனாதிபதியின் உருவப்படத்தை வகுப்பறையில் காண்பித்து, கீழ்வரும் வினாக்களை மாணவர்களிடம் வினவவும்.
- இவர் யார்?
- ஜனாதிபதிப் பதவி எப்போது ஏற்படுத்தப்பட்டது?
- இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?

இவ்வாறான வினாக்களுக்கு விடைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர், பின்வரும் விடயங்களும் உள்ளடங்கும் வண்ணம் மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

- இலங்கையில் ஜனாதிபதிப் பதவி 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்ட ஒன்று ஆகும்.
- முதலாவது ஜனாதிபதி வில்லியம் கொபல்லாவ அவர்கள் ஆவார்.
- 1948 முதல் 1972 வரை இலங்கையில் டொமினியன் ஆட்சிமுறை இருந்தது.
- அரசியல் யாப்பை மாற்றி அமைப்பதற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை.
- 1970 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது.

- இதற்கமைய 1972 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் உருவாக்கப்பட்டது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 9.4.1.1.2**

- வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.4.2.2 குழுச் செயற்பாட்டுப் பத்திரத்தை குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளிக்குக.
- குறிப்பிட்ட தலைப்பு பற்றி தகவல்களைச் சேகரிக்க மாணவர்களுக்கு அறிவுறுத்தவும்.
- புதிய தகவல்களைத் தேடிப் பெறக்கூடிய மூலாதாரங்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- தேடிப் பெறப்பட்ட தகவல்களில் இருந்து சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றைத் தயாரிக்கும்படி ஆலோசனை வழங்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 9.4.2.1.3.

- ஒவ்வொரு குழுவினாலும் தயாரிக்கப்பட்ட ஆக்கத்தை வகுப்பறையில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும்.
- அதன் பிறகு அவ்விடயத்தை சுவர்ப்பத்திரிகையாக வடிவமைத்து வகுப்பறையில் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்களின் முன்வைப்புக்காக ஒரு பாட வேளையை மட்டும் ஒதுக்கிக் கொள்ளவும்.
- மாணவ குழுக்களின் வலிவையும் நலிவையும் தெரிந்து கொள்ளுங்கள்.
- பாடத்துடன் தொடர்பான விடயங்களை பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொள்ளும்படி ஆலோசனை கூறுங்கள்.
- மாணவர்கள் கூறாது விட்ட விடயங்களையும் உறுதிப்படுத்திக் கொண்டு கீழ் வரும் விடயங்கள் துலங்கும் வண்ணம் பாடத்தை வழிநடத்துங்கள்.

- 1972 அரசியல் யாப்பின்படி பெயரளவு ஜனாதிபதிப் பதவி உருவாக்கப் பட்டது.
- வில்லியம் கொபல்லாவ அவர்கள் முதலாவது பெயரளவு ஜனாதிபதியானார்.
- சட்டவாக்க நடவடிக்கைகளுக்காக ஒரே சபையைக் கொண்ட யாப்பு உருவாக்கப்பட்டது.
- சட்டவாக்கத்துறை தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது.
- தேசிய அரசுப் பேரவையின் ஆயுட் காலம் ஆறு வருடங்கள் ஆகும்.
- பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்ட தென்பது.
- குடியரசு யாப்பின் கீழ் புதிய நீதிமன்ற முறையை இந்நாட்டிற்கு அறிமுகமானது.
  (உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் , மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம், அரசியலமைப்பு நீதிமன்றம்.)
- குடியரசு அரசியல் யாப்பின் கீழ் அடிப்படை மனித உரிமைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

(100 நிமிடங்கள்)

மதிப்பீடும் கணிப்பீடும்.

- குடியாட்சி அரசியலமைப்பின் கீழ் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் பற்றி விபரிப்பார்.
- இலங்கையர்கள் தங்களுக்கென்றே அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்ட விதம் பற்றிய விடயங்களை முன்வைப்பார்.
- அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்ட புதிய மாற்றங்களை விபரிப்பார்.
- குழுவினுள் செயற்படும் ஆற்றலைப் பெறுவார்.
- தகவல்களை முன்வைக்கும் ஆற்றலைப் பெறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தொடர் வேலை:

"1972 அரசியல் யாப்பின் விசேட தன்மைகள்" எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

**இணைப்பு 9.4.2.1.**



வில்லியம் கொபல்லாவ அவர்கள்

**இணைப்பு 9.4.2.2.**

| |
|---|
| கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் சுவர்ப்பத்திரிகை ஒன்றிற்கு ஆக்கங்களைத் தயாரிக்கக் கூடிய தேவையான தகவல்களைச் சேகரியுங்கள். |
| 1. குழு : 1972 ஜனாதிபதிப் பதவி |
| 2. குழு : தேசிய அரசுப் பேரவை. |
| 3. குழு : பிரதமர் தலைமையிலான அமைச்சரவை. |
| 4. குழு : நீதிமுறை |
| 5. குழு : அடிப்படை மனித உரிமைகள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.5 குடியேற்றவாதப் பரவல்

**அறிமுகம்**

15ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியை மையமாகக் கொண்டு ஏற்பட்ட மறுமலர்ச்சி ஐரோப்பாவைப் புதிய பாதைக்கு இட்டுச்சென்றமையினால், விஞ்ஞானம், சமயம், அரசியல், பொருளாதாரம், ஆகிய துறைகளில் எற்பட்ட மறுமலர்ச்சியானது நாடுகாண் பயணங்களுக்கு வழி கோலியது. அதன் இறுதி விளைவு ஐரோப்பியர்கள் உலகில் பரந்தளவு குடியேற்றங்களை நிறுவி பேரரசுகளைத் தோற்றுவித்தமையாகும்.

நாடுகாண்பயணங்களில் முதன் முதலில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகள் போர்த்துக்கலும் ஸ்பானியாவும் ஆகும். ஸ்பானியர்கள் அமெரிக்க கண்டத்திலும் போர்த்துக்கேயர் கிழக்குத்திசை மற்றும் இந்துசமுத்திர வலயப் பிரதேசத்திலும் நாடுகாண் செயற்பாடுகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தினர். இந்நாடுகள் தமது கட்டுப்பட்டில் உள்ள குடியேற்ற நாடுகளில் இருந்து பெற்ற செல்வம், அதிகாரம் மற்றும் புகழ் என்பவை காரணமாக 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலேயே பலம் மிக்க அரசுகளாகத் தோற்றம் பெற்றன.

படிப்படியாக ஐரோப்பாவில் ஏனைய நாடுகளும் தமது நாடுகளுக்குச் செல்வம், அதிகாரம், மற்றும் புகழ் ஈட்டிக்கொள்ளும் நோக்கில் பேரரசு நிறுவும் போட்டியில் சேர்ந்துகொண்டன. 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினாலும் இவ்வதிகாரப் போட்டி மேலும் அதிகரித்துச்சென்றது. இதன் விளைவு ஐரோப்பாவின் அதிகாரப் போட்டியானது குடியேற்ற நாடுகளுக்குப் பரவி உலக யுத்தமாக உருவெடுத்தமையாகும்.

உலகப் போரினால் ஏற்பட்ட பேரழிவுகள் போன்று யுத்தத்தினால் மீண்டும் ஒரு பேரழிவு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு சர்வதேச சங்கத்தை மையமாகக் கொண்டு உலக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் பேரரசுத் தீச்சுவாலை மீண்டும் பெருந்தீயாக மாறி உலகை அதிபயங்கரமான 2 ஆம் உலக மகா யுத்தத்திற்கு இட்டுச் சென்றது. அளவிடமுடியாத அளவு பேரழிவை ஏற்படுத்திய இம்மாதிரியான யுத்தம் மீண்டும் ஏற்படாமல் உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்னரை விட மிகவும் பலம் வாய்ந்ததாக ஐக்கிய நாடுகள் தாபனம் தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறாக ஐரோப்பாவில் நடந்த இச்சம்பவங்கள் உலகின் ஏனைய நாடுகளின் வரலாற்றை மாற்றுவதற்குப் பங்களிப்புச் செய்த விதத்தை பேரரசுகளின் பரம்பல் என்பதினூடாக பகுப்பாய்வு செய்தல் இந்த அத்தியாயத்தினூடாக எதிர்பார்க்கப் படுகின்றது.

**தேர்ச்சி :**

உலக வரலாற்றை வடிவமைப்பதில் செல்வாக்குச்செலுத்திய ஐரோப்பிய சக்திகள் தொடர்பாக விசாரணை செய்வார்

**தேர்ச்சி மட்டம் :**

9.5.1 18 ஆம் 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரின் குடியேற்ற நாடுகளை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுவார்.

9.5.2 உலகில் அவ்வப்போது ஏற்பட்டபல்வேறு ஆட்சியதிகார மாற்றங்களின் பிரதிபலனாக குடியேற்ற நாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கங்கள் வேறுபட்ட விதத்தையும் விளக்குவார்.

9.5.3. பல்வேறு இனங்களுக்கிடையே ஏற்பட்ட பலப்பரீட்சையானது உலக யுத்தம் வரை வளர்ச்சியடைந்த விதத்தை உலக யுத்தங்களின் அடிப்படையில் விளக்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட உள்ளடக்கம் :

9.5 பேரரசுகளின் தோற்றம்.

9.5.1. குடியேற்ற நாடுகள்

**பேரரசு பரவிய நாடுகள் :**

- 15 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர் மற்றும் போர்த்துக்கேயர் நாடுகாண் பயணங்களை மேற்கொண்டமை.
- 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பலம் வாய்ந்த நாடுகளாக ஸ்பானியா மற்றும் போர்த்துக்கல் உருவானமை.
- 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் பலம் வாய்ந்த நாடுகளாகுதல்.
- 18 ஆம் 19 ஆம்நூற்றாண்டுகளில் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் குடியேற்றவாதப் போட்டி.
- 20 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா உலகின் அனேக நாடுகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து பாரிய பேரரசாக உருவாகியமை.

**பேரரசுகள் விரிவடைந்த பிரதேசங்கள்**

- 15 ஆம் நூற்றாண்டில் பிரதானமாக அமெரிக்கா மற்றும் கீழைத்தேய நாடுகளின் பக்கம் கவனம் செலுத்தியமை.
- படிப்படியாக அவுஸ்திரேலியா நியூசிலாந்துப் பிரதேசங்களின் பக்கம் கவனம் செலுத்தியமை.
- 18 ஆம்நூற்றாண்டளவில் அமெரிக்கா அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய பிரதேசங்கள் பேரரசுகளின் ஆதிக்கத்தில இருந்து விடுதலையாகுதல்.
- 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆபிரிக்கப் பிரதேசங்களில் கவனம் செலுத்தியமை.
- 20 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பிய ஆதிபத்தியம் ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளின் பக்கம் சென்றமை.

**18, 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பேரரசுகளும் குடியேற்ற நாடுகளும்**

| பேரரசு | 18 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள். | 19 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள். | 20 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள். |
|---|---|---|---|
| 01 பிரித்தானியா | ♦ இந்தியா<br>♦ பாண்டிச்சேரி<br>♦ கல்கத்தா<br>♦ தரிகால்<br>♦ கனடா<br>♦ அவுஸ்திரேலியா<br>♦ நியூசிலாந்து | ♦ இலங்கை<br>♦ பர்மா (மியன்மார்)<br>♦ சிங்கப்பூர்<br>♦ ஹொங்கொங்<br>♦ இந்தியா<br>♦ ரொடீஷியா (சிம்பாப்வே) | ♦ கானா<br>♦ உகண்டா<br>♦ கோல்ட் கோஸ்ட்<br>♦ தென்னாபிரிக்கா கேப் காலனி<br>♦ இலங்கை<br>♦ இந்தியா<br>♦ பர்மா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பேரரசு | 18 ஆம் நூற்றாண்டின் குடியெற்ற நாடுகள். | 19 ஆம் நூற்றாண்டின் குடியெற்ற நாடுகள். | 20 ஆம் நூற்றாண்டின் குடியெற்ற நாடுகள். |
|---|---|---|---|
| | ♦ ஐக்கிய அமெரிக்கராச்சியம்<br>♦ இலங்கையின் கரையோர மாகாணங்கள் | ♦ எகிப்து<br>♦ மலாயா<br>♦ அவுஸ்திரேலியா<br>♦ நியூசிலாந்து<br>♦ தென்னாபிரிக்கப் பிரதேசங்கள்<br>♦ கேப் காலனி<br>♦ சியாரலியோன்<br>♦ கானா | ♦ மலாயா<br>♦ சியாரலியோன்<br>♦ நைஜீரியா<br>♦ ரோடீஷியா<br>♦ பொஸ்ட்வானா |
| 02. பிரான்ஸ் | ♦ இந்தியாவின் கடற் கரையோரப் பிரதேசம்.<br>♦ பாண்டிச்சேரி<br>♦ கரிகால்<br>♦ சண்டிகார்<br>♦ வட அமெரிக்காவின் லுவிசியானா பிரதேசம். | ♦ கம்பூச்சியா<br>♦ கோசிங் சீனா<br>♦ வியட்நாம்<br>♦ லாவோஸ்<br>♦ அல்ஜீரியா<br>♦ டியூனீசியா<br>♦ மொரேக்கோ<br>♦ மடகஸ்கர்<br>♦ செனகல் | ♦ அல்ஜீரியா<br>♦ மொரேக்கோ<br>♦ கம்போடியா<br>♦ மாலி<br>♦ கொங்கோ<br>♦ அசாம்<br>♦ செனகல்<br>♦ கமரூன்<br>♦ சாட்<br>♦ நைஜர் |
| 03. போர்த்துக்கல் | ♦ ஹோசின்<br>♦ கோவா<br>♦ பிரேசில்<br>♦ இந்தியா | ♦ அங்கோலா<br>♦ மொசாம்பிக்<br>♦ கினி<br>♦ கோவா | ♦ அங்கொலா<br>♦ மொசாம்பிக்<br>♦ கினி |
| 04. ஒல்லாந்து | ♦ இலங்கையின் கடற் கரையோரப் பிரதேசங்கள்<br>♦ இந்தோனேசியாவின் ஜாவா, சுமத்திரா,<br>♦ கிழக்கிந்தியாவின் வேறு தீவுகள் | | |
| 05 ஸ்பானியா | ♦ மெக்சிகோ<br>♦ பேரு<br>♦ கெனரி தீவு | ♦ மொரோக்கோ (மேற் பகுதி)<br>♦ சகாராவின் ஒரு பகுதி<br>♦ புளோரிடா பிளவின்<br>♦ மெக்சிகோ | மொரொக்கோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குடியேற்றங்களை நிறுவிய ஐரோப்பிய நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐரோப்பிய நாடுகள் நிறுவிய குடியேற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9.5.2 குடியேற்றங்களை நிறுவியமைக்கான நோக்கங்கள்

• பேரரசுகளை விரிவுபடுத்தும் நோக்கம் காலத்திற்கேற்ப மாறுபட்டமை.

அதாவது

**01. கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் குடியேற்றங்களை நிறுவியமைக்கான நோக்கங்கள்.**

**பொருளாதார நோக்கம்.**

• தமது நாட்டை செல்வந்த நாடாக்குவதற்கு குடியேற்ற நாடுகளின் மூலம் தேவையான பொருளாதார சக்திகளை கட்டியெழுப்புதல்.

உதாரணம் :

– அமெரிக்கப் பிரதேசங்களில் இருந்து பெற்றுக்கொண்ட தங்கம், வெள்ளி முதலியவற்றால் ஸ்பானியா ஐரோப்பாவிலே செல்வந்த நாடாகுதல்.

– போர்த்துக்கலானது ஆசியப் பிரதேசங்களில் இருந்து பெற்றுக் கொண்ட வாசனைத்திரவியங்கள், துணிவகை, யானைகள், இரத்தினக் கற்கள் போன்ற வர்த்தகத் திரவியங்களை ஐரோப்பாவிற்கு விற்பனை செய்து செல்வந்த நாடாகியமை.

– கீழைத்தேய மேலைத்தேய முஸ்லிம் வர்த்தக அதிகாரசபையை வீழ்ச்சியுறச் செய்தமை

**சமயம் சம்பந்தமான நோக்கம்.**

• கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல்

**அரசியல் நோக்கம்**

• புகழ் என்பவற்றை பெருக்குவதற்கு.

**02. கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் குடியேற்றங்களை நிறுவியமைக்கான நோக்கங்கள்**

– 19 ஆம் நூற்றாண்டளவில் முழு உலகத்திற்குமே தேவையான பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான நிலையை ஐரோப்பா அடைந்தமை.

– ஏனைய நாடுகள் மூலப் பொருட்களை விநியோகிப்பவர்களாகவும், நுகர்வோர்களாகவும். இருக்கும் நிலையை அடைந்தமை.

– இவ்வாறு கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் குடியேற்றங்களை நிறுவும் நோக்கம் முக்கியமாக பொருளாதாரத்துறையுடன் சம்பந்தப்பட்டதாக அமைந்தமை.

– மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.

– சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளல்.

– ஐரோப்பியர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

– புதிய வியாபார நோக்கங்களுக்காக வளங்களை(செல்வங்களை) முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்.

உதாரணம் : இலங்கையில பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை.

### 9.5.3. உலக யுத்தங்களுக்கான பின்னணி உருவாகுதல்

#### 9.5.3.1. முதலாம் உலகப் போருக்கான பின்னணி உருவாகுதல்.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் ஐரோப்பாவினுள் சகல துறைகளிலும் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது. அதன் விளைவாக அவர்களுக்கிடையில் யுத்தரீதியான அவநம்பிக்கை, முரண்பாடுகள், சந்தேகங்கள், போன்றவை ஏற்பட்டதுடன் குழுக்களாகப் பிரியும் நிலையும் ஏற்பட்டது. அதன் இறுதி விளைவு முதலாம் உலகப்போர் ஏற்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம் உலகப்போருக்கு வித்திட்ட காரணங்கள்**

ஆரம்பத்தில் குடியேற்றங்களை நிறுவ முனையாத நாடுகள் கூட கைத்தொழில் புரட்சியின் தாக்கத்தினால் குடியேற்றங்களை நிறுவிப் பேரரசாக மாறுவதற்கு முற்பட்டமை.

பேரரசுகளை நிறுவிய அரசுகள் தமது பேரரசுகளைப் பாதுகாப்பதில் எப்போதும் கவனம் செலுத்தியமை.

ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றுக்குமிடையிலான சந்தேகப் பார்வை.

ஒன்றுபட்ட நாடாகியதன் பின்பு ஜேர்மனியின் நடவடிக்கைகள்.

ஜேர்மனியின் அதிகாரம் விரிவடைந்து செல்வதில் கவனம் செலுத்திய பிரித்தானியா மென்மேலும் பலம் வாய்ந்ததாக உருவாவதற்கு முனைந்தமை.

ஐரோப்பிய அரசுகள், நேசநாடுகள் மற்றும் நடுநிலை நாடுகள் எனப் பிரிந்தமை.

போல்கன் பிரதேசத்தில் காணப்பட்ட குழப்ப நிலை.

சமாதானத்திற்கான முயற்சிகள்.

சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமை.

**இரண்டாம் உலகப்போருக்கான பின்னணி உருவாகுதல்.**

முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் அதிகமான நாடுகளில் பேரரசுகளை விரிவுபடுத்தும் நோக்கம் சிதைவடைந்தமை.

**உதாரணம் :**

- பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் முகங்கொடுத்த பிரச்சினைகள்.
  - முதலாம் உலகப்போருக்குப் பின்னர் இந்நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி.
  - ஐக்கிய அமெரிக்க இராச்சியம், ஜேர்மனி, ஜப்பான், போன்ற நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சி கண்டிருந்தமை.
- குடியேற்றங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேச நாடுகளுடன் இணைந்த போதிலும் குடியேற்றங்கள் கிடைக்காமை.
  - ஜேர்மனியின் எழுச்சி.
    உதாரணம்: ஹிட்லரின் கீழ் யுத்த மற்றும் கடற்பலத்தை அதிகரித்து பேரரசொன்றைக் கட்டியெழுப்ப முயற்சியெடுத்தல்.
  - இத்தாலியின் மாற்றம்.
    உதாரணம் : பொனீட்டோ, முசோலினி, ஆகியோரின் கீழ் இத்தாலிய பேரரசொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சி மேற்கொண்டமை.
  - ஆசியாவில் பேரரசொன்றை கட்டியெழுப்பும் ஜப்பானின் கொள்கை.
  - ஐரோப்பா இரண்டுபட்டமை
  - சர்வதேச சங்கத்தின் தோல்வி

**இரண்டாம் உலகப்போருக்குப்பின்னர் சமாதானத்திற்கான முயற்சி.**

- சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, மனித உரிமைகள், மனித நேயம், சுதந்திரத்தைப் பாதுகாத்தல் போன்ற குறிக்கோள்களை முன்னிறுத்தி ஐக்கிய நாடுகள் தாபனத்தை நிறுவியமை.
- குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9.5.1

| | | |
|---|---|---|
| தேர்ச்சி மட்டம் | : | 9.5.2 உலகில் அவ்வப்போது ஏற்பட்டபல்வேறு ஆட்சியதிகார மாற்றங்களின் பிரதிபலனாக குடியேற்ற நாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கங்கள்வேறுபட்ட விதத்தையும் விளக்குவார். |
| செயற்பாடு | : | உலகின் பல்வேறு கண்டங்களில் ஐரோப்பியர் நிறுவிய குடியேற்றங்களை தேசப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுவார். |
| காலம் | : | 120 நிமிடங்கள். |
| தர உள்ளீடுகள் | : | இணைப்பு 9.5.1.1 - ஆபிரிக்காவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை காட்டும் படம்.<br>இணைப்பு 9.5.1.2. - செயற்பாட்டுப் பத்திரம்.<br>இணைப்பு 9.5.1.3. - செயற்பாட்டுப் பத்திரம்<br>பாடப் புத்தகம்,<br>தேசப்படம்,<br>தேசப்படப்புத்தகம்,<br>கடதாசி,<br>நிறப்பென்சில் |

கற்றல் கற்பித்தல் செயற்பாடு :

படிமுறை 9.5.1.1

- இணைப்பு 9.5.1.1 வகுப்பில் படத்தைக் காட்சிப் படுத்தவும்.
  - இப்படத்தில் காட்டப்படுவது யாது?
  - இவ்வாக்கம் எதற்காக உருவாக்கப் பட்டது?

  போன்ற வினாக்களை மாணவரிடம் வினவி பின்வரும் விடயங்களையும் வெளிக்கொணரும் வகையில் மாணவருடன் கலந்துரையாடவும்.

- உருவானது ஆபிரிக்காவைக் கைப்பற்றியவர்களை எடுத்துக் காட்டுகின்றது என்பது.
- 20 ஆம் நூற்றாண்டளவில்பிரித்தானியா இவ்விதமாக உலகின் பரந்த பிரதேசமொன்றை தனது ஆணையின் கீழ் கொண்டுவந்தமை.
- மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட நாடுகாண் பயணங்களினூடாக ஏகாதிபத்திய வாதம் கட்டியெழுப்பப் பட்டமை.
- முதன் முதலில் ஸ்பானியா மற்றும் போர்த்துக்கல் இதில் ஈடுபட்டமை.
- பின்னர் ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் பேரரசுகளைக் கட்டியெழுப்பியமை.

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 9.5.1.2.

- வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்கவும்.
- குழுவுக்கு ஒரு தலைப்பு என்ற அடிப்படையில் தலைப்புக்களை குழுக்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.
- 18 ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளுக்குத் தனித்தனி நிறங்களைப் பயன்படுத்தி வரைபடத்தில் குறிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.
- தேவையான வழிகாட்டல்களையும், அறிவுறுத்தல்களையும் வழங்கவும்.
- மாணவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

(15 நிமிடங்கள்)

படிமுறை 9.5.1.3.

- மாணவர்களின் செயற்பாடுகளை வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்
- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும் போது அவை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு ஆலோசனை வழங்கவும். (அறிவுறுத்தவும்)
- சரியான இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு மாற்றுக் குழுக்களை ஈடுபடுத்தவும்.
- மாணவரது பலம், பலவீனம் என்பவற்றை இனங்காணவும்.
- காட்சிப்படுத்தப்பட்ட வரைபடத்தை பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கவும்.

பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு பாடத்தைப் பகுப்பாய்வு செய்யவும்.

- பேரரசுகளின் பரம்பலானது நாடுகாண் பயணங்களினூடாக நடைபெற்றமை.
- முதன் முதலில் ஸ்பானியா போர்த்துக்கல் ஆகிய நாடுகள் இதில் ஈடுபட்டமை.
- ஸ்பானியா அமெரிக்கப் பிரதேசத்திலும் போர்த்துக்கல் கீழைத்தேய நாடுகளிலும் ஈடுபட்டமை.
- படிப்படியாக அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற பிரதேசங்களில் கவனம் செலுத்தியமை.
- 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒல்லாந்து தனது அதிகாரத்தைப் பரவச் செய்யும் நடவடிக்கைகளில் முதல் நிலை வகித்தமை.
- ஒல்லாந்தர் பிரதானமாக கீழைத்தேய மற்றும் இந்து சமுத்திர பிரதேசத்தில் தமது அதிகாரத்தைப் பரவச் செய்தமை.
- 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிரான்சியர் மற்றும் ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
- பிரான்சியர்கள் வடஅமெரிக்கா, கீழைத்தேய மற்றும் ஆபிரிக்க பிரதேசங்களில் தமது கவனத்தைச் செலுத்தியமை.
- ஆங்கிலேயர்கள் ஒல்லாந்தரைத் தோற்கடித்து தமது அதிகாரத்தைப் பரவச்செய்தமை.
- 19 ஆம் நூற்றாண்டளவில் ஆங்கிலேயர்கள் இலங்கை, பர்மா, மலாயா, மற்றும் பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இருந்த கனடாவின் காலனிகளிலும் அதிகாரத்தை நிறுவியமை.
- 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் கவனஞ் செலுத்தியமை.
- 20 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் ஆசியா மற்றும் ஆபிரிக்க பிரதேசங்களின் பக்கம் சென்றிருந்தமை.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- குடியேற்ற நாடுகளைப் பெயரிடுவார்.
- ஒவ்வொரு குடியேற்ற நாட்டுக்கு உரித்தாகும் பேரரசுகளைத் தெளிவு படுத்துவார்.
- தேசப்படமொன்றில் குடியேற்ற நாடுகளைக் குறித்துக் காட்டுவார்.
- குழுச்செயற்பாடுகளில் ஒத்துழைப்புடன் ஈடுபடுவார்.
- முன்வந்து செயற்படுவார்.

**இணைப்பு 9.5.1.1**



ஆபிரிக்காவில் பிரித்தானியாவின் ஆதிக்கத்தைக் காட்டும் படம்

செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தமக்கு அளிக்கப்படும் தலைப்பின் கீழ் வரைபடத்தை அமைக்குக.

குழு 1 : போர்த்துக்கலுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளைத் தேசப்படமொன்றில் குறிக்கவும்

குழு 2 : ஸ்பானியாவுக்குச் சொந்தமான குடியற்ற நாடுகளை தேசப்படமொன்றில் குறிக்கவும்.

குழு 3 : பிரித்தானியாவுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளைத் தேசப்படமொன்றில் குறிக்கவும்.

குழு 4 : பிரான்சுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளைத் தேசப்படமொன்றில் குறிக்கவும்.

குழு 5 : ஒல்லாந்துக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளைத் தேசப்படமொன்றில் குறிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 9.5.1.3.**

**ஆலோசனைப் பத்திரம்.**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- குழுக்களுக்கான தலைவர்களை நியமிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் உரிய தலைப்புக்களை அளிக்கவும்.
- அத்தலைப்புக்களுடன் தொடர்புடைய தகவல்களைக் கொடுக்கவும்.
- வரைபடத்தில் குறிக்கும் தினத்தில் ஒவ்வொரு குழுவும் தேசப்படம் ஒன்று வீதம், நிறப்பென்சில், மற்றும் தேசப்படப்புத்தகம் போன்றவற்றை எடுத்து வரவேண்டும் என்பதை அறிவுறுத்தவும்.
- தேசப்படங்கள் மற்றும் தேவையான வளங்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்
- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் பங்கு கொள்ளும் வகையில் வேலைத்திட்டத்தைக் கொண்டு நடத்தவும்.
- மதிப்பீடு முடிவுற்றதும் மாணவர்களுக்குப் பின்னூட்டல் வழங்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

| | | |
|---|---|---|
| தேர்ச்சி மட்டம் | : | 9.5.3. பல்வேறு இனங்களுக்கிடையே ஏற்பட்ட பலப்பரீட்சையானது உலக யுத்தம் வரை வளர்ச்சியடைந்த விதத்தை உலக யுத்தங்களின் அடிப்படையில் விளக்குவார். |
| செயற்பாடு | : | ஏகாதிபத்திய வாதம் முதலாம் உலகப் போருக்கு தாக்கம் வெலுத்திய விதத்தைக் காண்போம். |
| காலம் | : | 80 நிமிடம். |
| தர உள்ளீடுகள் | : | இணைப்பு 9.5.2.1.- யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவைச் சித்தரிக்கும் படம்.<br>இணைப்பு 9.5.2.2.- செயற்பாட்டுப் பத்திரம். |

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

படிமுறை 9.5.2.1.

இணைப்பு 9.5.2.1. படத்தை வகுப்பிற்குக் சமர்ப்பிக்கவும்.

- இந்தப் படமூலம் காட்டப்படுவது யாது?
- இவ்வாறான நிலைமை ஏற்படுவது ஏன்?

போன்ற வினாக்களை மாணவரிடம் முன்வைத்து பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் வகையில் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- படமானது யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவைக்காட்டுகின்றது.
- பல்வேறுபட்ட காரணங்களை முன்வைத்து யுத்தங்கள் நிகழ்ந்தன.
- முதலாம் உலகப் போர் உலகை சம்பந்தப்படுத்தி நிகழ்ந்ததாக.
- அதற்கான பிரதான காரணங்களுள் ஏகாதிபத்திய வாதம் முதன்மை பெற்றமை.

(15 நிமிடங்கள்)

படிமுறை 9.5.2.1.

- வகுப்பில் உள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 9.5.2.2.இல். செயற்பாட்டுப் பத்திரத்தை குழுக்களுக்குக் கொடுக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பேச்சுத்திறமையுள்ள ஒரு மாணவனை தலைமைத்துவத்திற்கு நியமிக்க ஆலோசனை வழங்கவும்.
- சேகரித்துள்ள தகவல்களில் இருந்து உரையொன்றைத் தயாரிக்கச் செய்யவும்.
- இவ்வுரையை வகுப்பிற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடவும்.

(25 நிமிடங்கள்)

படிமுறை 9.5.2.3

- ஒவ்வொரு குழுவினாலும் தயாரிக்கப்பட்ட உரைகளை வகுப்பிற்குச் சமர்ப்பிப்பதற்காக சந்தர்ப்பத்தை வழங்கவும்.
- அவ்வுரைகளில சொல்லப்படுகின்ற பிரதான விடயத்தை கரும்பலகையில் வரிசைப்படுத்தவும்.
- மாணவர்களின் பலம், பலவீனங்களை இனங்காணவும்.
- கரும்பலகையில் காணப்படும் விடயங்களில் தேவையான குறிப்புக்களைப் பயிற்சிக் கொப்பியில் குறித்துக்கொள்ள ஆலோசனை வழங்கவும்.
- மாணவர்களின் ஆக்கங்களில் உள்ள பலம், பலவீனங்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் விடயங்களையும் வெளிக்கொணரும் வகையில் தொகுப்பை வழங்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐரோப்பாவில் கைத்தொழில்புரட்சி பரவியது முதல் குடியேற்ற நாடுகளை உருவாக்கும் போட்டி உக்கிரமடைந்தமை.
- இதனால் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று சந்தேகம், குரோதம், முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டமை.
- பேரரசுகளை தோற்றம் பெற்ற நாடுகள் தமது பேரரசுகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- இதனால் தத்தமது பாதுகாப்பிற்கு பல்வேறு நாடுகள் கூட்டணியை அமைத்துக் கொண்டமை.
- சந்தேகம், விரோதம், காரணமாக உலக யுத்தமொன்று ஏற்பட்டமை.
- பலவேறு நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற அதிகாரப் போட்டியானது உலக யுத்தம் வரையில் செல்கின்றமை. (வளர்கின்றமை)

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- போர் என்றால் என்ன என்பதைத் தெளிவு படுத்துவார்.
- முதலாம் உலகப் போருக்கு ஏகாதிபத்தியம் தாக்கம் செலுத்திய விதத்தை விபரிப்பார்.
- பல்வேறு நாடுகளுக்கிடையில் காணப்பட்ட அதிகாரப் போட்டி உலக யுத்தமாகப் பரிணமித்ததை முதலாம் உலகப் போரைக்கொண்டு விபரிப்பார்.
- குழுச்செயற்பாடுகளை வெற்றிகரமானதாக்க ஒத்துழைப்பு வழங்குவார்.
- வகுப்பு முன்னிலையில் உரை நிகழ்த்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 9.5.2.1.



போரின் அழிவைக் காட்டும் படம்

இணைப்பு 9.5.2.2.

செயற்பாட்டுப் பத்திரம்.

- ஐரோப்பிய நாடுகளின், குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தும் போட்டி உலகப் போராக வளர்ச்சி பெற்றதை முதலாம் உலகப் போரை அடிப்படையாகக் கொண்டு கண்டறிந்த விடயங்களை பட்டியலிட்டு வகுப்பு முன்னிலையில் உரையொன்று நிகழ்த்தவும்.
- விடயங்களை கண்டறிவதில் குழுவின் அனைவரையும் பங்கு கொள்ளச்செய்யவும்.
- கிடைத்த விடயங்களைக் கொண்டு உரையொன்றைத் தயாரிக்கவும்.
- பேச்சாற்றலுள்ள ஒரு திறமையான மாணவனைக் கொண்டு உரையை வகுப்பு முன்னிலையில் நிகழ்த்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 3

# கணிப்பீடும் மதிப்பீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட (தேர்ச்சி) பாண்டித்திய மட்டங்களை இணங்காணவும். வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவுப் பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சி எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல், இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர், ஆசிரியர் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும்.

இப்பாடநெறி மாணவர் மைய (Student centred) தேர்ச்சி அடிப்படையிலான Competency Based செயற்பாடு சார்ந்த (Activity Oriented) அணுகுமுறையைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் நிலைமாற்று வகிபங்கின் (Transformation Role) உள்ளார்த்தமுமாகும்.

ஏற்கனவே விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாடநெறியில் கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. அந்தந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவர் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலைச் சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்களை மதிப்பீடு செய்யவும் முடியும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே சஞ்சரித்தவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானிக்கலாம். வகுப்பறையில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இங்கு கலந்துரையாடித் தீர்த்து வைக்கலாம்.
கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தை மாற்றங்கள் ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடரகத்தின் (ACTIVITY CONTINUM) ஊடாக மதிப்பீட்டு வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை (EVALUATION POINT) இனங்காண்பதற்கு இலகுவான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்களாக (ACTIVITY CLUSTER) பிரிப்பதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். அந்தந்தச் செயற்பாட்டுத் தொகுப்பின். ஆரம்பத்தில் அச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

பாடநெறியின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டுப் புள்ளிகளையும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளையும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டை இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கலாம். மாணவர்களுக்கு உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் அது வழிகோலும்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை விரிவாக்கும் கருவிகளைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாகும். ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இக்கருவிகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தல் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் மற்றுமொரு பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் விரிவுபடுத்துவதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில மதிப்பீட்டுப் பேதங்கள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- வினா - விடை நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminar )
- உடன் பேச்சு (Impromptu speechers)
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாளேடு, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)
- இணையத்தளம், கணினி மென்பொருள் பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதி கற்றல்-கற்பித்தல் விரிவுபடுத்தல் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய கருவிகள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் போதும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயன்முறை மேலும் விரிவடையும். மாணவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கும் வழிகோலும்.

அத்தோடு, வகுப்பறையில் எழுத்துச்சோதனைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றிலும் ஆண்டிறுதியில் நடத்தப்படும் பாடசாலை மட்ட அல்லது வலயமட்ட எழுத்துப்பரீட்சையிலும் மாணவரை ஈடுபடுத்தவும்.

மேலும் தவணை இறுதியில் மதிப்பிட முன்னர் வழங்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளைப் பயன்படுத்துங்கள். தவணை இறுதியில் பரீட்சை வினாத்தாளுக்குரிய கட்டாயமான வினாவொன்று, கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள் தொடர்புடையவகையில் உள்ளடக்கப்படுவதே அதற்கான காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக்கருவி

**தரம் : 09**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** முதலாம் தவணை
கருவி - 01

**2.0 தேர்ச்சி மட்டம்**

- ஐரோப்பாவில் நிகழ்கின்ற நிழ்ச்சிகள் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பிரித்தானியர் கரையோரப் பிரதேசத்தை கைப்பற்றியமையின் மூலம் விபரிப்பார்.
- ஆட்சியில் நிலவும் பலவீனம் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தை கட்டியெழுப்புவதற்கு தூண்டுதலாக அமையும் என்பதை பிரித்தானியர்கள் மலையகத்தைக் கைப்பற்றியமையினூடாக விளக்குவார்
- முறையாகத் திட்டமிடாமல் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் எதிர்பார்க்கின்ற இலக்கை அடைய முடியாது என்பதை சுதந்திரப் போராட்டம் மூலம் விளக்குவார்.
- கோல்புறூக் கெமரன் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதன் ஊடாக பிரித்தானியாவின் அதிகாரம் மேன்மேலும் உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பாக தகவல் திரட்டுவார்.
- 1848 ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்டத்தின் ஊடாக பிரித்தானியாவின் அதிகாரம் (பலம்) மேன்மேலும் உறுதிப்படுத்தப்பட்ட முறையை விளக்குவார்.

**3.0 உள்ளடக்கம் :** 9.1.1, 9.1.2, 9.1.3, 9.1.4, 9.1.5

**4.0 கருவிகளின் தன்மை :** கேள்விக் கொத்து

**கருவியின் நோக்கம்**

- பிரித்தானியர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தமை சம்பந்தமான விபரங்களை விளங்கிக் கொள்ளல்.
- ஆட்சியின் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக மலையக இராச்சியத்தினுள் 1815 இல் பிரித்தானியா தனது அதிகாரத்தை நிலை நிறுத்தியமை பற்றியும் கேட்டுப்பார்த்தல்.
- முறையாக திட்டமிடாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டதினால் 1818 சுதந்திரப் போர் தோல்வி கண்டதையும் அதன் பிரதி பலனாக பிரித்தானியாவின் அதிகாரம் மென்மேலும் உறுதிப்படுத்தப்பட்ட முறையை ஆராய்தல்.
- கோல்புரூக் - கமரூன் சீர்திருத்தங்களுடன் ஊடாக பிரித்தானியாவின் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்ட முறையை கேட்டறிதல்.
- 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போரானது பிரித்தானியாவின் அதிகாரம் உறுதி செய்யப்படுவதில் தாக்கம் செலுத்திய விதம் பற்றி ஆராய்தல்.

**கருவியை செயற்படுத்துவதற்கான ஆசிரியருக்கு ஆலோசனை**

- வினா கேட்கும் வேலைத்திட்டத்திற்காக மாணவர்களை அறிவுறுத்துங்கள்.
- அவ்வேலைத்திட்டம் அலகு 9.1 இன் ஊடாக இடம் பெறும் என அறிவுறுத்துங்கள்.
- வினாக்களைத் தயாரித்தல் மாணவர் மூலம் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.
- வினா தயாரிப்புக்காக வகுப்பை பொருத்தமான விதத்தில் குழுக்களாக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு (1) : பிரித்தானியர் இலங்கையின் கடற்கரையோரத்தை ஆக்கிரமித்துக் கொள்ளல்.

குழு (2) : கி.பி 1815 மலையக இராச்சியத்தை கைப்பற்றிக் கொள்ளல்.

குழு (3) : கி.பி 1815 இல் மலையக இராச்சியத்தை கைப்பற்றிக் கொள்ளல்.

குழு (4) : கோல்புருக் கமரன் சீர்திருத்தம் மற்றும் 1848 சுதந்திரப் போராட்டம் என்பவற்றால் பிரித்தானியாவின் அதிகாரம் மேலும் உறுதிப்படுத்தப்பட்ட விதம்.

- ஒவ்வொரு குழுக்களுக்கும் தத்தமக்கு கிடைத்துள்ள தலைப்பின் கீழ் முடிந்த அளவு அதிக வினாக்களை (ஒரு விடையுடன்) தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- வினாக்கள் தயாரித்து முடிக்க வேண்டிய திகதியை அறிவுறுத்துங்கள்.
- தயாரிக்கப்பட்ட வினாக்களை வாசித்து தேவையான திருத்தங்களை மேற்கொள்க.
- அனைத்து மாணவர்களுக்கும் இவ்வேலைத்திட்டத்தின் தொடர்புடைய பாடத்துறையை நன்கு கற்று வேலைத்திட்டத்தில் பங்கு கொள்ள ஆயத்தமாகுவதற்கு அறிவுறுத்தவும்.
- வேலைத்திட்டம் இடம்பெறும் திகதியை அறிவுறுத்துங்கள்.
- மாணவர்களின் வழிநடாத்தலுடன் வினா கேட்டல் நிகழ்ச்சி நிரலை நடாத்துங்கள்.
- அனைத்து மாணவர்களையும் பங்குபற்றச் செய்யுங்கள்.
- புள்ளி வழங்கும் ஒழுங்கு முறையை தயாரித்துக் கொள்ளுங்கள்.

**மாணவர்களுக்கான அறிவுரை**

- குழுக்கள் பெற்ற தலைப்புக்களுடன் தொடர்பான வினாக்களைத் தயாரியுங்கள்.
- நிகழ்ச்சி நிரலுக்கான பாட விடயங்களை உள்ளடக்கிய விடயங்களை நன்கு கற்கவும்.
- நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதில் உதவவும்

**மதிப்பீட்டு நியதிகள்.**

(1) தயாரித்த வினாக்களின் பொருத்தப்பாடு.
(2) ஆக்க பூர்வமான வினாக்களை தயாரித்தல்.
(3) பங்கு பற்றுதல்.
(4) குழு வேலைக்காக காட்டும் அக்கறை.
(5) வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல்- கற்பித்தல் மதிப்பீட்டுக்கருவி.

**தரம் : 9**

1.0 மதிப்பீட்டு சந்தர்ப்பம் : 2 ஆம் தவணை
கருவி 2

2.0 தேர்ச்சி மட்டம் : 9.3 எமது தனித்துவத்தையும் பாரம்பரியங்களையும் பாதுகாத்துக்கொள்வதற்குத் தேசியத் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பதுடன் தேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பார்.

3.0 உள்ளடக்கும் பாடப்பகுதிகள் :
9.3.1 9.3.2 9.3.3

4.0 கருவியின் தன்மை : தகவல் கோவையொன்றைத் தயாரித்தல்.

5.0 கருவியின் நோக்கம் :

இலங்கையின் மிஷனரி அமைப்புக்கள் தொடர்பாகத் தகவல்களைத் தேடல்.

- இலங்கையின் பௌத்த, இந்து, இஸ்லாம் புத்துயிர் பெற்றமை தொடர்பான தகவல்களைக் கற்றல்.
- மது ஒழிப்புத் திட்டம் தொடர்பான தகவல்களை தேடல்.
- தேசிய அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சி தோற்றம் பெற்றமை தொடர்பாக தகவல் தேடல்.
- அரசியல்தலைவர்கள் மூலம் நடாத்தப்பட்ட போராட்டங்கள் தொடர்பான தகவல் அறிந்து கொள்ளல்.

### செயற்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்

- வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்கவும்.
- விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவக் கூடிய மூலங்களைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தலைப்புக்களைப் பிரித்துக் கொடுக்கவும். அந்தந்தத் தலைப்புக்களுக்குரிய தகவல்களைத் திரட்டி ஆக்கபூர்வமாக தகவல் பத்திரமொன்றைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.

குழு 1 : இலங்கையில் மிஷனரி அமைப்பு.
குழு 2 : இலங்கையில் பௌத்தம், இந்து, மற்றும் இஸ்லாம் ஆகியவற்றின் மீள் வளர்ச்சி.
குழு 3 : மது ஒழிப்புத்திட்டம்
குழு 4 : தேசிய சங்கம்
குழு 5 : அரசியல் கட்சிகளின் தோற்றம்
குழு 6 : அரசியல் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு குழுவினாலும் சேகரிக்கப்பட்ட தகவல்களை வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டவற்றுள் தவறுகள் இருந்தால் திருத்தவும்.
- குழுக்கள் சமர்ப்பித்த தகவல் பத்திரங்களை ஒன்றாகச் சேர்த்து தகவல் கோவையொன்றைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஒரு கற்றல் மூலமாக தகவல் கோவையைப் பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கவும்.

**மாணர்களுக்கான ஆலோசனைகள்**

- ஆசிரியரின் ஆலோசனைப்படி குழுவுக்குக் கிடைத்த தலைப்புடன் தொடர்புடைய தகவல்களை திரட்டி ஆக்கபூர்வமாக தகவல் பத்திரம் ஒன்றைத்தயாரிக்குக.
- அதனை வகுப்பில் சமர்ப்பிக்கவும்.
- எல்லாக் குழுக்களினதும் அறிக்கைகளை ஒன்று சேர்த்து தகவல்கோவை ஒன்றைத் தயாரிக்கவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைக் கற்றல் சாதனமாகக் கொண்டு பயன்படுத்தவும்.

**மதிப்பீட்டு நியதிகள்**

1 தகவல்களின்பொருத்தப்பாடு
2 போதுமான அளவு உள்ளதா
3 ஆக்கபூர்வமாகச் சமர்ப்பித்தல்
4 குழுச்செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபடுதல்
5 முழுமையான இறுதி ஆக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவி

**தரம் - 9**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாம் தவணை**
**கருவி 03**

**2.0 உள்ளடக்கும் தேர்ச்சி மட்டம் :**
18, 19, மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கு சொந்தமான குடியேற்றங்களை தேசப்படமொன்றில் குறித்துப் பெயரிடுவார்.

**3.0 உள்ளடக்கும் பாடப் பரப்பு : 9.5.1**

**4.0 கருவியன் தன்மை :**
வரைபடம் குறித்தல்

**5.0 கருவியின் நோக்கம் :**
18 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகளை அறிந்து கொள்ளல்.
19 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகளை அறிந்து கொள்ளல்.
20 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகளை அறிந்து கொள்ளல்.

**கருவியைச்செயற்படுத்துவது பற்றி ஆசிரியருக்கான ஆலோசனைகள்**
வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்கவும்.
ஒவ்வொரு குழுவுக்கும் உரிய தலைப்புக்களைக் கொடுக்கவும்.

குழு 1 – 18 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள்.
- பிரித்தானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- பிரான்ஸ் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- போர்த்துக்கல் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஒல்லாந்து வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஸ்பானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்

குழு 2 – 19 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள்.
- பிரித்தானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- பிரான்ஸ் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- போர்த்துக்கல் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஒல்லாந்து வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஸ்பானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்

குழு 3 – 20 ஆம் நூற்றாண்டின் குடியேற்ற நாடுகள்.
- பிரித்தானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- பிரான்ஸ் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- போர்த்துக்கல் வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஒல்லாந்து வசமுள்ள குடியேற்ற நாடுகள்.
- ஸ்பானியா வசமுள்ள குடியேற்ற நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் காட்சிப்படுத்தக் கூடிய முறையில் தேசப்படமொன்றில் தமக்குரிய தலைப்புக்களுடன் தொடர்புடைய இடங்களை குறிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.

ஒவ்வொரு பேரரசின் வசமும் குடியேற்ற நாடுகளுக்கு வித்தியாசமான நிறங்களைப் பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கவும்.

தயாரிக்கப் பட்ட கருவியை வகுப்பில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய தினத்தை தெரிவிக்கவும்.

குழுவில் ஒவ்வொருவரதும் ஈடுபாட்டுடனான பங்களிப்பு அவசியம் என்பதை அறிவுறுத்தவும்.

## மாணவர்களுக்கான ஆலோசனைகள்

வகுப்பில் காட்சிப்படுத்தக்கூடிய முறையில் தேசப்படமொன்றை தயாரித்துக் கொள்ளவும்.

தங்களுக்குக் கிடைத்துள்ள தலைப்புக்கேற்ற வகையில் ஒவ்வொரு பேரரசு வசமுள்ள குடியேற்ற நாடுகளுக்கும் வித்தியாசமான நிறங்களைப் பயன்படுத்தவும்.

செயற்பாட்டை வகுப்பில்காட்சிப் படுத்தவும்.

குழுச்செயற்பாட்டுக்கு பங்களிப்புச் செய்யவும்.

## மதிப்பீட்டு நியதிகள்

1 வரைபடத்தில் சரியாகக் குறித்தல்
2 நிறங்களைப் பயன்படுத்தல்
3 ஆக்கபூர்வமானதாக உள்ளமை.
4 குழு வேலைகளில் அக்கறையுடன் ஈடுபடுதல்.
5 தூய்மையும் முழுமையான இறுதி ஆக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉතිහාසය 9 (දෙ)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010/T/9/TIM/6500